

கன காலத்துக்குப் பிறகு
நெஞ்சுருகிப் போச்சுது
பாருங்கோ...


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28+IV

சுடர் 32 | கதிர் 02 | வள்ளுவர் ஆண்டு 2047 | கார்த்திகை 13, திங்கட்கிழமை 28.11.2016




# பேரெழுச்சி மாவீரர் தினம்

## நேற்று வடக்கு எங்கும் கடைப்பிடிப்பு
## துயிலும் இல்லங்களில் மக்கள் வெள்ளம்

யாழ்ப்பாணம், நவம்பர் 28

தமிழீழ இலட்சியத்துக்காக, தாயக விடிவுக்காக, தமிழர் தேசத்தைக் காவல் காத்த தெய்வங்களை, உணர்வுபூர்வமாக உள்ளங்களில் பூசிக்கும் நன்னாள் நேற்று. மாவீரர்களை, தமிழ்த் தேசிய உறவுகளை, வீரப் புதல்வர்களை நினைவு கூர்ந்து தாயக தேசத்தில் பேரெழுச்சியுடன் மாவீரர் தினம் உணர்வுபூர்வமாக நேற்று நடைபெற்றது.

தாயக தேசம் சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள் முழுமையாக முடக்கப்பட்ட பின்னர், மாவீரர் தினம் மறைவிடங்களில் நினைவு கூரப்பட்டு வந்தது. ஏழு ஆண்டுகளின் பின்னர் – முதற்தடவையாக, பகிரங்கமாக – அதுவும் மாவீரர் துயிலும் இல்லங்களில் நேற்றைய தினம் நினைவுகூரல் நடைபெற்றது. அலையெனத் திரண்ட உறவுகள், துயிலும் இல்லங்களில் தங்கள் பிள்ளைகளின் – உற்றாரின் கல்லறைகள் முன்பாக ஈகச்சுடரேற்றினர். தாயக தேசமே ஒளி வெள்ளத்தில் மிதந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் காலத்தில் நினைவுகூரப்பட்ட >> 25



கிளிநொச்சி - முழங்காவில் மாவீரர் துயிலுமில்லத்தில் 9 ஆண்டுகளின் பின்னர் மாவீரர் தினம் நேற்று உணர்வுபூர்வமாக நினைவு கூரப்பட்டது. ஈகச் சுடர் ஏற்றப்பட்ட பின்னர், துயிலுமில்லத்தில் எரிந்து கொண்டிருக்கும் சுடர்கள். மாவீரரின் உறவினர் ஒருவர் நீண்ட காலத்தின் பின்னர் கண்ணீர் விட்டுக் கதறி அழுதார்.

மேலும் படங்கள் 2, 4, 5, 6ஆம் பக்கங்களில்...

## சரியாக 6.03 மணிக்கு ஒலித்தது மணியோசை

யாழ்ப்பாணம், நவ. 28

மாவீரர் நாள் நிகழ்வுகள் 7 ஆண்டுகளுக்கு முன்னர் தாயக தேசத்தில் நினைவு கூரப்பட்டதைப் போன்று நேற்றைய தினமும் பகிரங்கமாகப் பொது வெளியில் நினைவு கூரப்பட்டது. இதன்போது சரியாக மாலை 6.03 மணிக்கு தாயக தேசத்தில் ஆலய, தேவாலய மணிகள் ஒருமித்து ஒலித்தன.

தாயக விடிவுக்காகப் போராடி, தம் இன்னுயிர்களைத் தமிழர் தேசத்துக்காக உவந்தளித்த மாவீரர்களை நினைவு கூரும் மாவீரர் நாளின் இறுதி நாளில், தமிழீழ >> 25

## துயிலுமில்லப் பாடல் ஒலிக்கச் சுடரேற்றல்

யாழ்ப்பாணம், நவ. 28

"தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே..." என்ற, தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் துயிலும் இல்லப் பாடல், ஈகச் சுடரேற்றலைத் தொடர்ந்து, சகல துயிலும் இல்லங்களிலும் ஒலிக்க விடப்பட்டது. இதன்போது மாவீரர் கல்லறைக்கு முன்பாக அவர்களது உறவுகள் சுடரேற்றி அஞ்சலித்தனர்.

யாழ்ப்பாணம் - உடுத்துறை >> 25

## சங்கரின் நினைவிடத்திலும் மாவீரர்களுக்கு சுடரேற்றல்



கரணவாய் நவ.28

தமிழீழத் தேசியப் போராட்டத்தில் முதல் களப்பலியான லெப். சங்கரின் நினைவாலயத்தில் ஈகச்சுடரேற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது

உடுப்பிட்டி - வல்வெட்டித்துறை வீதியில் வன்னிச்சி அம்மன் ஆலயத்துக்கு அண்மையில் அமைந்துள்ள லெப். சங்கரின் நினைவாலயத்தில் சிறப்பாக அமைக்கப்பட்ட இடத்தில் மாவீரர்களுக்கான முதல் ஈகச் சுடரினை வடமாகாண சபை >> 25



## பேர்க்குவரத்தை ஒழுங்குபடுத்தினர் பொலிஸார்

யாழ்ப்பாணம், நவ. 28

மாவீரர் துயிலும் இல்லங்களில் நடைபெற்ற மாவீரர் நினைவு நாளில் பங்கெடுத்து விட்டு, வெளியேறிய மக்களால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதன் போது போக்குவரத்துப் பொலிஸார், போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது. >> 25

## கல்லறைகள் முன்பாக கதறியழுத உறவுகள்

### துயிலும் இல்லங்களில் நெஞ்சுருக்கும் சம்பவம்



யாழ்ப்பாணம், நவ. 28

'என்ர செல்லக்குட்டி, என்ர ஐயா, என்ர தெய்வமே, அம்மா எண்டு கூப்பிடய்யா, இப்பிடி காடு பத்தினா நான் எங்க ஐயா உன்னை தேடிப் பிடிப்பன். அம்மா எண்டு கூப்பிடு ஐயா. எங்க இருந்தாலும் தேடி வாறன், அம்மா எண்டு கூப்பிடு ஐயா, அம்மா உடன் வாறன், வயிறு கொதிக்குதையா, கூப்பிடு ஐயா' என்று, கிளிநொச்சி முழங்காவில் மாவீரர் கல்லறை முன்பாக தாய் ஒருவர் கத்திக் கதறியழுதார். >> 25

## கண்காணிப்பும் தீவிரம்

யாழ்ப்பாணம், நவ. 28

தமிழர் தாயக தேசம் ஏழு ஆண்டுகளின் பின்னர் எழுச்சி கொண்டு மாவீரரை நினைவு கூர்ந்த நேற்றைய நாள் நிகழ்வுகளில், அரசின் சகல துறைகளினதும் புலனாய்வாளர்கள் சிவில் உடையில் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

மாவீரர் துயிலும் இல்லங்களில், பொலிஸாரின் புலனாய்வுப் பிரிவு, இராணுவப் புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றைச் >> 25

## இலங்கை விடயத்தில் ஐ.நாவின் நிலைப்பாடு ஒருபோதும் மாறாதாம்

யாழ்ப்பாணம், நவ. 28

போருடன் தொடர்புடைய சம்பவங்கள் சம்பந்தமான விசாரணைகள் விடயத்தில் ஐ.நாவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இருக்காது என்று ஐ.நா. பொதுச் செயலரின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்தார்.

பொறுப்புக்கூறல் செயல்முறைகள் தொடர்பாக எந்தப் பன்னாட்டு அழுத்தங்களும் இல்லை என்று அரசு >> 25

## நீரில் மூழ்கி மாணவன் சாவு

### நாவற்குழியில் பரிதாபச் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 28

நாவற்குழிப் பகுதியில் நீரில் மூழ்கி மாணவன் ஒருவன் உயிரிழந்தான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை 5.30 மணியளவில் நாவற்குழி 300 வீட்டுத்திட்டப் பகுதிக்கு அண்மையில் உள்ள மதகுப் பகுதியில் தனது நண்பனுடன் நீரில் இறங்கி நீந்திய போதே அவன் உயிரிழந்தான்.

இதன் போது இரு மாணவர்களும் சேற்றினுள் புதைந்துள்ளனர். அதில் ஒரு மாணவன் சேற்றிலிருந்து மீண்டு அங்குள்ள பொது மக்களிடம் தகவலைத் தெரிவித்துள்ளான். குறித்த இடத்துக்கு வந்த மக்கள் புதைந்த மாணவனை மீட்ட போதும் மாணவன் ஏற்கனவே உயிரிழந்திருந்தார்.

நாவற்குழிப் பிரதேசத்தை சேர்ந்த யேசுதாசன் அமிதாப் >> 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயிலுமில்லங்களின் பதிவுகள்...


கிளிநொச்சி- கனகபுரம்


முல்லைத்தீவு -வன்னிவிளாங்குளம்


கிளிநொச்சி-முழங்காவில்


கிளிநொச்சி -கனகபுரம்


கிளிநொச்சி -கனகபுரம்


கிளிநொச்சி- கனகபுரம்


முல்லைத்தீவு- மல்லாவி


கிளிநொச்சி- கனகபுரம்


கிளிநொச்சி- முழங்காவில் துயிலும் இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயநிர்ணய உரிமையுடனான தீர்வே மாவீரர்களின் கனவை நனவாக்கும்

## நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் உருத்திரகுமாரன் அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 28

சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான ஏற்பாடு ஒன்றே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக அமைய முடியும். அதற்கென உழைப்பதையே மாவீரர்கள் கனவை நனவாக்கும் என்று, நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் விசுவநாதன் உருத்திரகுமாரன் வெளியிட்டுள்ள மாவீரர் நாள் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது மாவீரர் நாள் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழீழ தேசத்தின் விடுதலைக்காய் தம் உயிரை ஆகுதியாக்கிய நமது மாவீரர்களை நாம் எமது இதயக்கோவிலில் வைத்துப் பூசிக்கும் நாள். மாவீரர்கள் நமது மக்களின் விடுதலைக்காய் களமாடினார்கள். நெருப்பாற்றைத் தாண்டினார்கள். புயலை வாயால் ஊதிக் கடந்தார்கள். காற்றுப் போகமுடியா வெளியில் கூடப் புகுந்து பகை அழித்தார்கள். அவர்கள் மண்ணில் வீழும் போதெல்லாம் நமது மண்ணின் விடுதலைக்காய் வித்தாய் வீழ்ந்து போவதாகவே எண்ணிக் கொண்டார்கள். தமிழீழ தேசம் தனது விடுதலைக்காய் இறுதிவரை போராடும் என்பதே மாவீரர்களின் இறுதி மூச்சின் நினைவாக இருந்தது.

மாவீரர்கள் ஆண்டபரம்பரை மீண்டுமொரு முறை ஆள்வதில் என்ன தவறு என்ற பழம் பெருமையினை மீட்டெடுக்கும் நோக்குடன் ஆயுதம் தரித்தவர்கள் அல்ல. மேடைகளில் வீரவசனம் பேசும் அரசியலை நடத்தியவர்களும் அல்ல. சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் திட்டமிடப்பட்ட தமிழின அழிப்பில் இருந்து தமிழர் தேசத்தைப் பாதுகாத்து எமது கௌரவமான இருப்பையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காகவே மாவீரர்கள் ஆயுதம் ஏந்தினார்கள்.

எந்தவித தேசிய சமூக ஒடுக்கு முறைகளுக்கும் அப்பாற்பட்டு அதியுயர் சமூகநீதி நிலவும் தேசம் ஒன்றினைப் படைக்க வேண்டும் என்ற இலட்சிய உறுதியின்பாற்பட்டே போராட்டத் தீயில் அவர்கள் குதித்தார்கள்.

மாவீரர்களின் போராட்டமே தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு பன்னாட்டுக் கவனத்தைப் பெற்றுத் தந்தது. தமிழ் மக்களின் நெஞ்சங்களில் எல்லாம் மாவீரர்கள் நீக்கமற நிறைந்திருக்கிறார்கள். அவர்களது நினைவுகள் தமிழ் மக்களின் மத்தியில் என்றும் நிலைத்திருக்கும். இந்த நினைவு எமது சுதந்திர வேட்கையைச் சுமந்து நிற்கும்.

நாம் இன்று வரலாற்று முக்கியத்துவம் மிக்கதொரு காலகட்டத்தில் நிற்கிறோம். மாவீரர்களின் கனவு சுமந்து சுதந்திர வாழ்வுக்காகத் தொடர்ந்து போராடுவதா அல்லது சிங்களப் பேரினவாதத்தின் மேலாண்மையினை ஏற்று அடிமைவாழ்வில் சிறுமைப்பட்டுப் போவதா என்பதைத் தமிழ் மக்கள் முடிவுசெய்ய வேண்டிய காலகட்டம் இது.

நல்லாட்சி என்ற பெயரிலும் தமிழ் மக்களுக்கு ஏற்புடையதான அரசியல்தீர்வு என்ற போர்வையிலும் மாயமான்கள் எம் முன்னால் உலவி வரும் காலம் இது. வெளித்தோற்றத்தில் காட்டப்படும் மினுமினுப்பையும் பளபளப்பையும் கண்டு ஏமாறாது தமிழீழ மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டிய தருணம் இது.

தற்போதைய ஆட்சியாளர்கள் தமது ஆட்சியினை நல்லாட்சி என்று அழைத்துக் கொள்கின்றனர். முன்னைய குடும்ப ஆட்சியின் அதிகார மையத்தை ஆட்டம் காணச் செய்தமையின் மூலம் ஆட்சிமாற்றம் சிங்கள மக்களுக்குச் சில நன்மைகளை வழங்கியிருக்கக்கூடும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்த ஆட்சியினை நல்லாட்சி என எவ்வாறு உணர முடியும்? தமிழ்மக்களுக்கு எதிரான இன அழிப்பை புரிந்தவர்களும் இனஅழிப்புக் குற்றவாளிகளும் நிறைந்தவொரு ஆட்சியே இது.

தமிழர் தாயகத்தினை ஆக்கிரமித்து நிற்கும் சிங்களப் படையினரைத் தமிழர் தாயகபூமியில் இருந்து அகற்ற மறுக்கும் ஆட்சியே இது. அரசியற் காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்ட போர்க் கைதிகளை விடுதலை செய்வதற்கு எவ்வித தயவுதாட்சணியமுமின்றி மறுத்துக்கொண்டிருக்கும் ஆட்சியே இது. இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிப்பதாகக் கூறிய, தமிழர் காணிகளை முழுமையாக விடுவிக்காது இழுத்தடிக்கும் ஆட்சியே இது. பல்கலைக்கழக மாணவர்களை வீதியில் வைத்துச் சுட்டுக் கொல்லும் ஆட்சியே இது.

இனவெறுப்பினை உமிழும் புத்தபிக்குகள் சட்டநடவடிக்கை எதுவுமின்றி சுதந்திரமாக உலவ இடம் தரும் ஆட்சியே இது. இத்தகை ஆட்சியை எவ்வாறு நாம் நல்லாட்சியெனக் கொள்ள முடியும்?

முன்னைய மகிந்த ராஜபக்ச ஆட்சியின் கொடூரம் காரணமாகவே தமிழ் மக்கள் ஆட்சி மாற்றத்துக்கு ஆதரவு வழங்கினர். ஆனால் இப்புதிய ஆட்சியினை நல்லாட்சி என்று அங்கீகரிப்பதற்குத் தமிழ் மக்கள் தயாராக இல்லையென்பதே உண்மை.

இந்த ஆட்சியாளர்கள் மட்டுமல்ல, சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் பிடியில் சிக்குண்டு இறுகிப் போய் இருக்கும் ஆட்சியாளர்கள் எவராலும் தமிழ் மக்களுக்கு நல்லாட்சியினை வழங்க முடியாது.

தமிழ்மக்களைப்பொறுத்தவரைதமிழ் இனத்தை ஒரு தேசமாக அங்கீகரித்து, இலங்கைத் தீவின் வடக்கு – கிழக்குப் பிரதேசங்களை தமிழர் தாயகப் பகுதியாக ஏற்றுக்கொண்டு, தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழீழத் தனியரசு உட்பட்ட தீர்வு வடிவங்களை உள்ளடக்கிய மக்கள் வாக்கெடுப்பினைத் தாயகத்திலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மத்தியிலும் நடத்தி, தேசியப் பிரச்சனைக்குத் தீர்வு காண எந்த ஆட்சி முன்வருகிறதோ அந்த ஆட்சி மட்டுமே நல்லாட்சியாக இருக்க முடியும்.



இவ்வகையான மேம்பட்ட சிந்தனைக்கு எந்த ஆட்சியாளரும் தயாராக இல்லை. தற்போதய ஆட்சியாளர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையுடன் பேசி ஒற்றையாட்சி ஆட்சிமுறையை கூட்டாட்சி போலக் காட்டும் வகையிலான ஓர் அரசமைப்பின் மூலம் தேசியப்பிரச்சினைக்குத் 'தீர்வு' காணும் முயற்சியில் இறங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் திட்டத்தின்படி வடக்கு – கிழக்கு இணைக்கப்படப் போவதில்லை. மத்தியில் குவிக்கப்பட்ட அதிகாரங்களில் சிலவற்றை மாகாணங்களுக்குக் கிள்ளித் தெளிக்கப்படவுள்ளன. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைக் கிஞ்சித்தேனும் எட்ட முடியாத ஒரு திட்டமாகத்தான் புதிய திட்டம் அமையப்போகிறது.

தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட வகையில் வடக்கு – கிழக்கு இணைந்த கூட்டாட்சி அடிப்படையிலான தீர்வு என்பதே கூட்டமைப்பினர் மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதி. இந்த வாக்குறுதிக்கு மாறான எந்தத் தீர்வுவடிவம் குறித்தும் அரச தலைவர்களுடன் கூட்டமைப்புத் தலைவர்கள் எவ்வகை அங்கீகாரத்தின் அடிப்படையில் பேச்சுக்கள் நடத்த முடியும்?

தமிழ் மக்களின் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் போன்ற அடிப்படை நிலைப்பாடுகளை அரசு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை யெனவும் இதுவே யதார்த்தம் எனவும் இக் காரணங்களுக்காகக் கிடைப்பவற்றைப் பெற்றுக்கொண்டு தமிழ் மக்கள் தம்மைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும் எனக் கருதுபவர்களும் எம் மத்தியில் உள்ளனர்.

தமிழ் மக்கள் தாயகத்தில் தம்மைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதில் எமக்கு முரண்பாடு எதுவும் கிடையாது. இதேவேளை தேசியப் பிரச்சினைக்கான தீர்வு என்ற பெயரில் அரசு முன்வைக்கவுள்ள அரைகுறைத் திட்டத்தை இனப் பிரச்சினைக்கான தீர்வாகத் தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதே எமது நிலைப்பாடு.

வடக்கு – கிழக்குப் பகுதியில் வாழும் முஸ்லிம் மக்களுக்கும் இப்பகுதி தாயகப் பிரதேசமே. முஸ்லிம் மக்களுடன் எத்தகைய அரசியல் ஏற்பாடுகளுக்கு வருதல் என்பது குறித்து தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தமக்குள் பேசி ஓர் உடன்பாட்டை எட்டிக் கொள்ள வேண்டும் – என்று தெரிவித்துள்ளார். (வ-5)

## இடது பக்கத்தால் முந்தி செல்லுதல் தண்டத்தைக் குறைக்க இணக்கம்

கொழும்பு, நவ.28

இடது பக்கத்தால் முந்திச் சென்று பாதை ஒழுங்குகளை மீறும் வாகனங்களுக்கு விதிக்கப்படவுள்ள 25 ஆயிரம் ரூபா தண்டப் பணச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவதற்கு அரசு கவனம் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் சங்கம் கொழும்பில் நிதி அமைச்சருடன் நடாத்திய பேச்சுவார்த்தையின்போது இந்த உடன்பாடு எட்டப்பட்டது.

இது தொடர்பில் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக நிதி அமைச்சர் கூறியுள்ளார்.

இடது பக்கத்தால் முந்திச் செல்லல் உட்பட 7 போக்குவரத்துக் குற்றச் செயல்களுக்கான தண்டப் பணத்தை அதிகரிக்கும் பிரேரணைகள் வரவு-செலவுத்திட்ட யோசனையில் அரசு முன்வைத்தது. (வ)

## ரயிலுடன் கார் மோதியதில் ஐவர் சாவு

வாத்துவ – பொதுபிட்டிய ரயில் கடவையில் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்ற விபத்தில் ஐவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காரும் ரயிலும் மோதியதனால் இந்த விபத்து இடம்பெற்றது. காரில் பயணித்த ஐவரே இவ்வாறு உயிரிழந்தனர். மேலும் ஒருவர் படுகாயமடைந்தார்.

உயிரிழந்தவர்கள் ஐவரும் ஆண்கள் எனவும், அவர்கள் அனைவரும் [illegible] சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (வ)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# துயிலுமில்லங்களின் பதிவுகள்...



கிளிநொச்சி -கனகபுரம்



கிளிநொச்சி -கனகபுரம்




முல்லைத்தீவு - மல்லாவி



கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக










கிளிநொச்சி -கனகபுரம்






முல்லைத்தீவுக் கடற்கரை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


முல்லைத்தீவு -வன்னிவிளாங்குளம்


யாழ். பல்கலைக்கழகம்


முல்லைத்தீவு -வன்னிவிளாங்கு...


உடுத்துறை துயிலும் இல்லம்


முல்லைத்தீவு கடற்கரை


கிளிநொச்சி கனகபுரம்


வவுனியா சுந்தரபுரம்


யாழ்ப்பாணம் பாசையூர்


இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வு


கிளிநொச்சி கனகபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துமீறி மீன்பிடிக்கும் கப்பல்கள் மீது இனிமேல் பல மில்லியன் ரூபா தண்டம்

கொழும்பு, நவ.28
கடல் வளங்களைப் பாதுகாக்கும் நோக்குடன், இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபடும் வெளிநாட்டுக் கப்பல்களுக்கு 175 மில்லியன் ரூபா வரை தண்டம் விதிக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அவர் தெரிவித்ததாவது:

இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்துக்குள் அத்துமீறி மீன்பிடியின் ஈடுபடும் வெளிநாட்டுக் கப்பல்களுக்கு அதிகூடிய தண்டப்பணத்தை விதிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் கடல் வளங்களை சூறையாடியமைக்கு 3 மில்லியன் ரூபா முதல் 150 மில்லியன் ரூபா வரை தண்டமும் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறியமைக்காக 5 மில்லியன் ரூபா முதல் 175 மில்லியன் ரூபா வரையும் தண்டம் விதிக்கப்படும்.

கடற்படையினரால் கைப்பற்றப்படும் கப்பலை விடுவிக்க நீதிமன்றில் முற்படும் கப்பல் உரிமையாளர் தண்டத் தொகையை செலுத்தவேண்டும். தற்போது இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் வெளிநாட்டு மீனவர்களுக்கு குடி வரவுச சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்படுகிறது. புதிய சட்டத்தின் பிரகாரம் அத்து மீறும் மீனவர் மற்றும் கப் பலுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் அதிகாரம் கடற்றொழில் திணைக்களத்துக்கு வழங்கப்படும்- என்றார். (வ)

## முள்ளியவளையில் மாவீரர் தினம் கடைப்பிடிப்பு

முல்லைத்தீவு, நவ. 28
முள்ளியவளையிலும் மாவீரர்களுக்கு பொதுமக்கள் சுடர்ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

முள்ளியவளையில் அமைந்த மாவீரர் துயிலும் இல்லத்தில் இராணுவத்தினர் முகாமிட்டு இருப்பதால் அங்கு விதைக்கப்பட்ட தங்கள் பிள்ளைகளுக்கு அஞ்சலி செய்வதற்கு ஒன்று கூடிய மக்கள் முள்ளியவளை பசிலன் வீதியில் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் உள்ள இராணுவத்தினர் வழமையாக வெளியில் ஒளிரவிடப்படும் மின்குமிழ்களை அணைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் கூழாமுறிப்பு தேவாலயத்திலும் பொதுமக்கள் தங்கள் பிள்ளைகளை நினைவுகூரும் முகமாக மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செய்துள்ளனர். (வ-7,102)

## வாசிப்பு மாத இறுதி நிகழ்வு

சாவகச்சேரிப் பிரதேச சபையின் நாவற்குழி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வு நாளை பி.ப.1.30 மணிக்கு பிரதேச சபையின் நாவற்குழி உப அலுவலக மண்டபத்தில் நடை பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பிரதேச சபை செயலாளர் திருமதி மு.கோடீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரி யர் பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் கலந்து கொள்வார். (வ - 9)

## ஊடகவியலாளர் ரி.ஐ.டியினர் இடையே முரண்

வவுனியாவில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினருக்கும் ஊடகவியலாளருக்கும் இடையில் மாவீரர் நாள் நிகழ்வின்போது முரண்பாடு ஏற்பட்டது.

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நேற்று மாலை வவுனியா நகரசபைக்கு முன்னால் உள்ள பொங்கு தமிழ் நினைவுத்தூபி முன்னால் மாவீரர் நாள் நினைவுகூரப்பட்டது. இதன்போது அங்கு கலந்துகொண்டவர்களையும் ஊடகவியலாளர்களையும் பயங்கரவாத விசாரணைப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் படம்பிடித்தார்.

இதனை அவதானித்த ஊடகவியலாளர்கள் அவரை யார்? எதற்காக படம் எடுக்கிறீர்? என வினவினர். அதற்கு குறித்த அந்தநபர் தன்னை பயங்கரவாத விசாரணைப் பிரிவு உத்தியோகத்தர் என்று தனது அடையாள அட்டையை காண்பித்தார். எனினும் ஊடகவியலாளர்கள் தம்மை பிடித்த படங்களை அழிக்குமாறு கூறினர். இதனையடுத்து அவர் தனது கமராவிலிருந்து ஊடகவியலாளர்களின் படங்களை அழித்தார். இதன் பின்னர் பயங்கரவாத விசாரணைப்பிரிவு உத்தியோகத்தர் குறித்த இடத்தை விட்டு அகன்றார். (வ-402)

## பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர் விவரங்கள் அனுப்பிவைப்பு

கொழும்பு, நவ.28
2015 - 2016 கல்வி ஆண்டுக்காக பல்கலைக்கழகங்களில் இணைத்துக்கொள்ளப் படவுள்ள மாணவர்களின் பெயர் பட்டியல் இன்று திங்கட்கிழமை முதல் பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரி வித்ததாவது:

மருத்துவ பீடம் மற்றும் பொறியியல் பீடங்களுக்குத்தகுதிபெற்ற மாணவர்களின் பட்டியல்கள் பல்கலைக்கழகங்களுக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றுக்கான கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடம் இன்னும் சில தினங்களில் ஆரம்பிக்கப்படும். ஏனைய கற்கை நெறிகள் அடுத்த மாதம் அல்லது ஜனவரி மாதத்தில் ஆரம்பிப்பதற்கு பல்கலைக் கழகங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

பல்கலைக்கழகங்களில் சேர்த் துக் கொள்ளப்படும் மாணவர் களை பதிவு செய்யும் பணிகள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு உட்பட்டதாக இடம்பெறுகிறது. முதலாவது சுற்று வெற்றிடங்கள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. பல்கலைக்கழகங்களில் வெற்றிடங்கள் தொடர்பில் அறிவிக் கப்பட்டால் மாத்திரமே இரண்டாவது சுற்றுக்கான வெற்றிடங்களை நிரப்பும் பணிகள் இடம்பெறும்.

பொதுவான மாணவர் அனுமதியின் அடிப்படையிலேயே மஹாபொல புலமைப்பரிசில்கள் மாணவர்களுக்கு வழங்கப்படும். ஏனைய மாணவர் களுக்கு பல்கலைக்கழகங்களின் ஆலோசனைகளுக்கு அமைய புலமைப் பரிசில்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தமுறை கல்வி ஆண்டுக்காக பல்கலைக்கழகங்களுக்கு 26 ஆயிரத்து 541 மாணவர்கள்சேர்த்துக்கொள்ளப்பட உள்ளனர். கலை, வர்த்தகம், பௌதீகம் உள்ளிட்ட கற்கை நெறிகளுக்கு மேலதிகமாக இம்முறை புதிதாக இரண்டு கற்கை நெறிகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. பொறியியல் தொழில் நுட்பம் மற்றும் பௌதீக கட்டமைப்பு தொழில் நுட்பம் என்ற கற்கை நெறிகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன - என்றார்.

கடந்த வருடத்திலும் பார்க்க இம்முறை 2208 மாணவர் கள் பல்கலைக்கழகத்துக்கு மேலதிகமாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். (வ)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி ஐயாத்துரை

(ஓய்வு நிலை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)



உசனைப் பிறப்பிடமாகவும் கொடிகாமம் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத் தம்பி ஐயாத்துரை நேற்று (26.11.2016) ஞாயிற் றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர்அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வீதி,
கொடிகாமம் மத்தி, கொடிகாமம். (J 6416) (16,17,19)

தகவல்:
குடும்பத்தினர்.
077 665 4107

### முத்தையா நாகராசா

( ஓய்வு நிலை அலுவலகர் - சாவகச்சேரி நகரசபை)



கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிட மாகவும், மட்டுவில் வடக்கு முடவன்வயலை வதிவிட மாகவும் கொண்ட முத்தையா நாகராசா நேற்று (27.11.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - தங்கம்மா ( ஓய்வு நிலை ஆசிரியர்கள்) தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற வர் களான வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காமாட்சி யின் அன்புக் கணவரும் கைலைநாதன், இராஜ ராஜேஸ்வரி, சாரதாம்பாள், சிறிதேவி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பரமேஸ்வரி, சிவசுப்பிரமணியம் (நாராயணன் ஹாட்வெயார்), சிவநாதன் (கனடா), சிவபாலன், மிஸ்கின், பரமானந்தன் ஆகியோரின் அன்புமைத்துனரும் மகாலிங்கம் (திருகோணமலை), தவநாயகம், மீனலோஜினி ஆகியோரின் அன்புச்சகலனும் சத்தியசொரூபனின் பெரியதந்தையும் கலையரசி, றெஜி (லண்டன்), மேகலா, மணிவண்ணன், கோபிநாத், சுகாசினி, முரளி, தயாளினி, தீசன், சிவகரன், வசீகரன், சனாய், சனோய், அச்சுதன், பிரியா, கௌசல்யா, செந்தூரன், காண்டீபன், கௌதமி, பிரசாந்த் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2016) திங்கட்கிழமை மு.ப. 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல் :
நா. காமாட்சி (மனைவி),
வே. சிவசுப்பிரமணியம் (மைத்துனர்)

முடவன்வயல்,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
(சி/26737)(17.20)

## மரண அறிவித்தல்

### ஜோஜ் கந்தையா ஜெயராஜசிங்கம்

(மாஸ்டர்)



உடுவில் டச் வீதியைப் பிறப்பிட மாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிட மாகவும் கொண்ட ஜோஜ் கந்தையா ஜெயராஜசிங்கம் (மாஸ்டர்) 26.11.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமுவேல் ஜோஜ் கந்தையா - ஜேன் மாரிமுத்தம்மா தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்ற லோறன்ஸ் வல்லிபுரம் சின்னத்தம்பி - மேசி தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான ஜேசுரட்ணம், கனகரட்ணம் மற்றும் தேவமலர் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் எட்னா தவமணியின் அருமைக்கணவரும் கிறிஸ்ரி ஜெயசீலன் (நூலகர் - யாழ்ப்பாணக் கல்லூரி), சாள்ஸ் ஜெயமோகன் (UK), கிறிஸ்ரீன் ஜெயச்சந்திரா (UK), ஜோஜ் ஜெயபாலன் (ஆசிரியர் - விக்ரோறியாக்கல்லூரி சுழிபுரம்), இவ்லின் ஜெயவதனி(UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும் டெபோறா தர்சினி, சுகந்தி (UK), ஜெயபால் (UK), ஜெயந்தி, கஜதேவன் (UK) ஆகியோரின் அன்பு மாமனும் ஜொஹானன், பிரியதர்ஷன், அஷான், டயான், செந்தூரன், நிலானி, ஷிரானி, றிச்சேட்ஸ், அலெக்ஸ், நித்திலா, கௌஷிகன், கஜானி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து நாளை (29.11.2016) செவ்வாய்க்கிழமை வட்டுகோட்டை தென்னிந்தியத்திருச்சபை பேராலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு மு.ப. 11 மணிக்கு நடைபெறும் இறுதி ஆராதனையைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை கிறிஸ்தவ சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவீன சந்தை வீதி,
வட்டுத்தென்மேற்கு, வட்டுக்கோட்டை.
(ஜே/6418)(17.20)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மன்னார் - பெரியபண்டிவிரிச்சானில் நேற்று மாலை 6.05 மணிக்கு மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில், மாவீரர்களின் பெற்றோர், உறவினர் மற்றும் பொது மக்கள், ஊடகவியலாளர் எனப் பலரும் கலந்து கொண்டு, கண்ணீர்மல்கி அஞ்சலி செலுத்தினர்.





# ஆள்காட்டிவெளி துயிலுமில்லத்தில் மாவீரர் தினம் நேற்றுக் கடைப்பிடிப்பு

மன்னார், நவ.28

தமிழ் மக்களின் விடுதலைக்காக தம் உயிரைத் தியாகம் செய்த வீரர்களை நினைவு கூரும் 'மாவீரர் தின நினைவேந்தல்' நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.05 மணிக்கு மன்னார் - ஆள்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் உணர்வு பூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வில், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இ.செபமாலை அடிகளார்,வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன்,வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான மருத்துவர் ஜீ.குணசீலன்,சட்டத்திரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா, அருட்தந்தையர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர், உபதலைவர்கள், உறுப்பினர்கள், ஈ.பி.ஆர்.எல்.எப்.அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர். குமரேஸ், மன்னார் சமாதான அமைப்பின் தலைவர் பீ.ஏ.அந்தோனி மார்க் உட்பட மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள்,பொது அமைப்பின் பிரதிநிதிகள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது மாலை 6.05 மணியளவில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள் உட்பட அனைவரும் தாங்கள் வைத்திருந்து தீப பந்தங்களை ஏற்றியதோடு, மலர் மாலை தூவி உணர்வுபூர்வமாக உயிர் நீத்த மாவீரர்களுக்கு கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

நாட்டில் இடம் பெற்ற போர் ஓய்ந்த நிலையில் 2009ஆம் ஆண்டு ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தினை கைப்பற்றிய இராணுவத்தினர் அங்கு காணப்பட்ட மாவீரர்களின் அனைத்துக் கல்லறைகளையும் உடைத்துச் சிதைத்து சேதப்படுத்தினர். (வ-56)



திருகோணமலை சிவன்கோவிலடியில் உள்ள தந்தை செல்வா நினைவிடத்தில் நேற்று மாலை நடந்த மாவீரர் தின நிகழ்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் மற்றும் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி ஆகியோர் நினைவுச் சுடர்களை ஏற்றி வைத்தனர். (வ)



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வின்போது...



விடுதலைக்காக வித்தாகிப்போன மாவீரர்களை நினைவுகூர்ந்து அம்பாறை மாவட்டத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் தவராசா கலையரசன் தலைமையில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள விநாயகர் ஆலயம் ஒன்றில் நேற்று மாலை மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி தீபச்சுடர் ஏற்றப்பட்டது. (வ)



மட்டக்களப்பு பார் வீதியில் உள்ள மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் அலுவலகத்தில் நேற்று மாவீரர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாட்டி துயிலுமில்லத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 28

தமிழீழ விடுதலைக்காகப் போராடி உயிர்நீத்த வீரத் தமிழ் மறவர்களான மாவீரர்களுக்கு வேலணை - சாட்டி வெள்ளைக் கடற்கரையை அண்மித்துள்ள துயிலும் இல்லத்தில் நேற்று அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், திருமதி சரவணபவன் உட்பட ஏராளமானோர் நேற்றைய மாவீரர் நிகழ்வில் கலந்து கொண்டு மாவீரர்களுக்கு ஈகச் சுடரேற்றி அஞ்சலி செலுத் தினர்.


சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் பல மாவீரர்கள் விதைக்கப் பட்டுள்ளனர்.

எனினும், அவ்வாறு விதைக்கப் பட்ட இடம் தெரியாத வகையில் நினைவுத் தூபிகள் சிதைக்கப்பட் டுள்ளன.

கடந்த 7 வருடங்களின் பின்னர் இவ்வாறு மாவீரர் நினைவு நிகழ்வு நேற்று இடம்பெற்றது. (வ-4,10,ஏ)











தமிழ் மக்களின் விடிவிற்காகப் போராடி உயிர் நீத்த மாவீரர்களின் நினைவான மாவீரர் தினம் தாயகமெங்கும் சிறப்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டது. அவற்றின் சில பதிவுகள் இவை...

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்- 12 முருகேசர் வளவு ஒழுங்கை ஆதன இல. 09 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் கனகமணி என ஆதனப்பதிவேட்டில் பதியப் பட்டுள்ளது.

இதன் மொத்த நிலப்பரப்பு 1 குளி 01 ஆகும். இதில் தெற்கு பக்கமாக நிலப்பரப்பு 00 குளி 8.97ஐ நல்லூர் காசிப்பிள்ளை சிவராம் கைம்பெண் கனகமணி தனது மகள் கந்தையா நாகசெல்வம் பெண் சீதாலட்சுமிக்கு பிரசித்த நொத்தரிசு க. குணரத்தினம் முகதாவில் நிறைவேறிய உறுதி இல. 551/29.11.1973 மூலம் சீதனமாக வழங்கியுள்ளார். இதன் மிகுதி ஆதனம் நில பர. 00 குளி 10.03ஐ நல்லூர் காசிப்பிள்ளை சிவராம் கைம்பெண் கனகமணி அவ்வூர் ஏகாம்பரம் இராசரத்தினம் பெண் இராசலட்சுமிக்கு பிரசித்த நொத்தாரிசு க.குணரத்தினம் முகதாவில் நிறைவேறிய அறுதி உறுதி இல. 570/01.02.1974 மூலம் அறுதியாக விற்றுள்ளார் எனவும். குறித்த ஏகாம்பரம் இராசரத்தினம் பெண் இலட்சுமியால பிரசித்த நொத்தாரிசு வேலுப்பிள்ளை மயில்வாகனம் முகதாவில் நிறைவேறிய நிபந்தனை அறுதி உறுதி இல.3874/31.01.1984 மூலம் ஜோசேப்பின் தங்கமலர் ஜோக்கியம் என்பவருக்கு நிபந்தனை அறுதியாக வழங்கப்பட்டிருந்தாலும் இவ்வாதனம் தனது தாயாரால் அறுதியாக்கப்பட்ட குறித்த நில.பர.00 குளி 10.03ஐ தனக்கு உறுதி இல.551/29.11.1973 மூலம் வழங்கப்பட்ட சீதனஆதனமான இதன் மிகுதி நில.பர.00குளி 08.97 உடன் 1973ஆம் ஆண்டிலிருந்து எவ்வித எதிர்ப்பும் இன்றி தங்குதடையற்ற தனது ஆட்சியில் உள்ளதாக பிரசித்த நொத்தாரிசு V.T.சிவலிங்கம் முகதாவில் நிறைவேறிய நன்கொடை உறுதி இல.3952/23.02.2016 மூலம் வெளிப்படுத்தியுள்ளார். பிரசித்த நொத்தாரிசு V.T.சிவலிங்கம் முகதாவில் நிறைவேறிய நன்கொடை உறுதி இல. 4022/19.04.2015 மூலம் நில.பர.1குளி 00.36 ஐ வட்டு தெற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நாகசெல்வம் செல்வகாந்தன். நாகசெல்வம் ராஜகாந்தன் ஆகியோரால் வட்டு தெற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நடராசா மகேஸ்வரன் பெண் கல்யாணிக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆதன விவரம்: வடமாகாணம் யாழ்ப்பாணமாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோயில் பற்று நல்லூர் இறை " சிங்கத்தின் வளவு " இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.பாலேந்திரன் அவர்களின் வரைபட இலக்கம் 2015/4/33 - 2015.01.25 இல் துண்டு - 1.2 எனக்காட்டப்பட்ட நிலபரப்பு 1குளி - 00.36 ஆகும். இதற்கு எல்லை கிழக்கு - V.இராம லிங்கம். வடக்கு - பொன்னுத்துரை மனோகரன். மேற்கு - ஒழுங்கை. தெற்கு - V.இராம லிங்கம்

தற்போது இவ்வாதனம் நடராஜா மகேஸ்வரன் பெண் கல்யாணி என்பவரால் தனது பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது நடராஜா மகேஸ்வரன் பெண் கல்யாணி என்னும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர்**
**மாநகரசபை.**

SUPER BALL
සුපර් බෝල්
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 581
சீட்டிழுப்பு திகதி 26.11.2016
சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
03 18 38 72 W
சுப்பர் ஜக்பொட்
ரூ.40,741 340/=
வெல்லப்படவில்லை
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 அழைக்கவும்
சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2821 திகதி 26.11.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
17 18 29 58 X 16
ரூ. 38,199,975/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## யாழ்ப்பாண மாநகர சபையின் முக்கிய அறிவித்தல்

2016.10.18,19 ஆந் திகதிய பத்திரிகையில் பிரசுரிக் கப்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், சிற்றுண்டிச் சாலைகளுக்கான கேள்வியில் சித்தி பெற்றவர்கள் நேரில் வருகைதந்து வதிவிடத்தினை உறுதிப்படுத்தி கேள்வித்தொகையின் 1/3 பகுதிப்பணத்தினை 2016.11.30 ஆந் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்பதாக சபையில் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்று கேள்வி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும். தவறின் மீள்கேள்வி கோரப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(c 26730) (16 17 19)

மணமகன் தேவை
இந்து கௌரவ குடும்பம் (NRC) 1990 பிரான்ஸ் PR உள்ள மணமகளுக்கு உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் மணமகன் தேவை.
சசி திருமணசேவை
5/1, புகையிரத வீதி, நீராவியடி, யாழ்
077 044 3589 (Viber)

அரைக்கும் ஆலை வாடகைக்கு
மில் மற்றும் அதனுடன் கூடிய கடையும் வாடகைக்கு உண்டு.
076 344 6798

சிறுநீரகம் தேவை
யாழ். நகரில் வசிக்கும் ஒருவருக்கு A அல்லது O இரத்த வகையிலுள்ள சிறுநீரகம் தேவை.
0775026827/
0775723236 / 0778730129

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரிலும் நேற்று மாவீரர் தினம்







*மாவீரர் நாள் வாசகங்கள் எழுதப்பட்டும், 'தமிழீழ தேசியத் தலைவரின் 62ஆவது இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள் கரிகாலன்' என வாசகம் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் கிளிநொச்சியில் வீதியோரங்களில் நேற்றுப் பரவலாகக் காணப்பட்டன. கிளிநொச்சி, விஸ்வமடு, ஏ-35 வீதிகளில் 50க்கும் மேற்பட்ட சுவரொட்டிகள் காணப்பட்டன. வட்டக்கச்சி சந்தையில் உள்ள விளம்பரப் பலகை மற்றும் தார் வீதிகளிலும் மாவீரர் நாள் தொடர்பான வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. (ரு-21,35)*



நீண்ட காலத்திற்குப் பின்னர் வடக்கில் நேற்று மாவீரர் தினம் கடைப்பிடிக்கப் பட்டது. இராணுவத்தினரின் பிடியிலிருந்து விடுவிக்கப் பட்ட துயிலும் இல்லங்களில்வழக்கம்போலமாலை 6 மணிக்கு நிகழ்வு நடந்தது. யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி கோயில் முன்பாக உள்ள தியாகி திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாகவும் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வையொட்டி அரசபுலனாய்வு அமைப்புகளின் கண்காணிப்பு அந்தப் பகுதியில் தீவிரப்படுத்தப்பட்டிருந்தது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மாகாணசபைஉறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் ஆகியோர் உட்பட அரசியல்வாதிகள் சிலரும் பொதுமக்கள் சிலரும் அங்கு சுடர் ஏற்றினர்.

நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் பந்தங்களைக் கொளுத்தியும் மெழுகு திரிகளைக் கொளுத்தியும் மலர் தூவியும் தமது அஞ்சலி களைச் செலுத்தினர். பின்னணியில் மாவீரர் நாள் என எழுதப்பட்ட பெரியளவிலான பதாகை கம்பங் கள் நட்டு கட்டப்பட்டிருந்தன. சுமார் அரை மணி நேரத்தில் அஞ்சலிநிகழ்வுமுடிவுக்குவந்தது.

இராணுவ, கடற்படைப் புலனாய்வாளர்களும் தேசிய புலனாய்வுச் சேவையைச் சேர்ந்தவர்களும் அந்தப் பகுதியில் தீவிர கண் காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். அஞ்சலியில் ஈடுபட்டவர்களை ஒளிப்படங்களும் எடுத்தனர். (உ-106)

# தமிழர்களின் புனித நாள்

யாழ்ப்பாணம், நவ.28

ஈழத் தமிழர்களுக்கு மாத்திரமல்ல, உலகத் தமிழர்கள் அனைவருக்கும் நவம்பர் 27 ஆம் திகதி ஒரு புனிதமான நாள்.

இவ்வாறு வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் வளாகத்திலுள்ள தியாகத் தீபம் திலீபனின் நினைவிடத்தில் நேற்றுக் காலை மாவீரர்களுக்கு நினைவுச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன்பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

தமிழர் தாயகத்தின் பல்வேறு இடங்களில் மாவீரர் நிகழ்வு முன்னெடுக்கப்படுகிறது.

நல்லாட்சி அரசு தமிழ் மக்கள் தங்களுடைய உறவுகளுக்காக அஞ்சலி செலுத்துவதற்கு அனுமதியளித்தது என்று கூறுவதற்கு முனையக்கூடும்.

தமது உயிர்களை ஆகுதியாக்கி கொடையாக வழங்கிய வீர மறவர்களினுடைய கனவை நனவாக்க வேண்டும். தமிழ் மக்கள் அனைவரினதும் நெஞ்சங்களில் மாவீரர்களின் நினைவு கூட்டாக எழுகின்ற போதே தமிழ் மக்களின்பி ரச்சினைக்கு நியாயமான தீர்வு கிடைக்கும்- என்றார். (ரு-21)

# பிரபாவின் பிறந்தநாள் கொண்டாடிய படைகள்

## பரவிய சிரிப்பு வதந்தியால் பரபரப்பான முகமாலை

யாழ்ப்பாணம், நவ. 28

தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்தநாள் படையினரால் கொண்டாடப்படுகிறது என்ற செய்தியால் நேற்றுமுன்தினம் - நவம்பர் 26ஆம் திகதி - முகமாலைப் பகுதி பரபரப்பானது.

7 வருடங்களுக்குப் பின்னர் விடுதலைப் புலிகளின் நினைவுகளை மீட்டுவதற்கான சுதந்திர வெளி ஒன்று இந்த ஆண்டு தோன்றியது. புலிகளினதும் மாவீரர்களினதும் நினைவு ஏற்பாடுகளைக் கண்டும் காணாதும் படையினர் ஒதுங்கியதை அடுத்து பல இடங்களிலும் பிரபாகரனின் பிறந்தநாள் வெளிப்படையாகக் கொண்டாடப்பட்டது.



யாழ். குடாநாட்டின் சில பகுதிகளில் இளைஞர்கள் சிலர் இனிப்புகளை வழங்கி பிரபாகரனின் பிறந்த நாளைக் கொண்டாடினர். ஊர்களின் உள்ளே உள்ள வீதிகளில் போவோர் வருவோருக்கு இனிப்புப் பொதிகளை உடைத்து அள்ளி அள்ளி மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வழங்கினர்.

முகமாலைப் பகுதியிலும் இவ்வாறு நடந்தது. திடீரென அந்தப் பகுதியில் பிரபாகரனின் பிறந்த நாளுக்காகப் படையினர் பொங்கல் வழங்குகிறார்கள் என்ற செய்தி பரவியது. வீதியில் போவோர் வருவோர் ஏனையவர்களுக்குச் சிரித்தபடியே இப்படிச் சொல்லிக் கொண்டு சென்றனர். இது அனைவருக்கும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் அளித்தது.

எனினும் அங்குள்ள ஆலயம் ஒன்றில் தமது வழிபாட்டுக்காகப் பொங்கல் பொங்கிப் படைத்த படையினர் அதனையே கோயிலுக்கு வந்த மக்களுக்கு வழங்கினர் என்று தெரியவந்தது. நவம்பர் 26ஆம் நாள் என்பதால் அதனை பிரபாகரனின் பிறந்த நாளுக்காகப் படையினர் பொங்கல் பொங்கினர் என்பதாக மக்கள் நகைச்சுவை உணர்வுடன் வியாக்கியானம் செய்து கொண்டனர் என்ற உண்மை பின்னரே தெரிய வந்தது. அனைவரும் அந்த நகைச்சுவையை ரசித்துக் கொண்டே படையினரின் பொங்கலையும் இளைஞர்களின் இனிப்பையும் ஒரு பிடிபிடித்தனர். (உ)

# இன்னுயிரை ஈந்த மாவீரர்களை இந்நாளில் நினைவு கூருகிறோம்

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ.28

தமிழீழ தேச விடுதலைப் போரில் தமது இன்னுயிர்களை ஈய்ந்த மாவீரர்களுக்கும், வீர மறவர்களுக்கும் நாம் மாவீரர் நாளில் வீர வணக்கத்தை செலுத்துகின்றோம்.

இவ்வாறு வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

மாவீரர் தினத்தினை முன்னிட்டு நேற்றுக்காலையில் நல்லூர் கந்தன் ஆலய மேற்கு வீதியில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவுத் தூபியின் முன்பாக இடம்பெற்ற நினைவு நிகழ்வில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஆயுதப் போராட்டத்தை விடுதலை இயக்கம் ஆரம்பித்தது. அதன்பின்பு 74ஆம் ஆண்டு புதிய தமிழ் புலிகள் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் அது 76ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளாக உருவாக்கம் பெற்றது.

விடுதலைப்புலிகள் அமைப்பில் 50 ஆயிரம் மாவீரர்கள் வீரச்சாவு அடைந்தனர். ஏனைய இயக்கங்களைச் சேர்ந்த வீர மறவர்களும் தங்கள் உயிர்களை தியாகம் செய்துள்ளனர். இறந்த அத்தனை மாவீர்களுக்கும், வீர மறவர்களுக்கும், மாமனிதர்கள், நாட்டுப் பற்றாளர்களுக்கும் சகோதரப் படுகொலையில் இறந்த அத்தனை இயக்க வீரர்களுக்கும் நவம்பர் 27ஆம் திகதியாகிய இன்று நாம் வீர வணக்கத்தைச் செலுத்துகின்றோம்.

ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட எமது மக்கள் தமது இன்னுயிர்களை நீத்துள்ளார்கள். அவர்களுக்கும் தலைசாய்த்து வீர வணக்கத்தைச்செலுத்துகின்றோம். எந்த சக்திகள் எமக்கு அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்தாலும் எதிர்காலத்தில் தமிழ் இனம் தன்னைத்தானே ஆளக்கூடிய தீர்வைப் பெற வேண்டுமென்பதற்காகவே வீர மறவர்களை அஞ்சலிக்கின்றோம். நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும். இறுதிப்போரின்போது நடை பெற்ற போர்க்குற்றங்கள், இனப்படுகொலைகள் மானிடத்துக்கு எதிரான குற்றங்களுக்கு சர்வதேச நீதி வேண்டுமென்ற கோரிக்கையில் இறுக்கமான முடிவுகளை எடுக்க வேண்டும்.

மாவீரர்களுக்கும், பொது மக்களுக்கும் அஞ்சலி செலுத்த மறப்போமானால் விடுதலை கோருவதற்கு தகுதியுடையவர்கள் இல்லை என்ற விமர்சனங்கள் எழுந்துவிடும். மாவீரர்களை ஆண்டாண்டு காலமாக நினைவில் போற்ற வேண்டும்.

தமிழர் தாயகத்தில் எந்தெந்த இடங்களில் சாத்தியமோ அந்தந்த இடங்களில் நினைவுகூருவதன் மூலம் ஒரு சபதத்தை ஏற்க முடியும்- என்றார். (ரு-106,101)





*மாவீரர் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பின் பல்வேறு பிரதேசங்களிலும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வந்தாறுமூலை வளாகத்தின் சுவர்களிலும் மாவீரர்களை நினைவு கூரும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. (ரு-ய-47)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெற்றிக் கட்சியாக சு.கவை மாற்றிக் காட்டுவதற்கு தயார்

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, நவ.28
சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றிக் கட்சியாக மாற்றுவதற்கு தயார் என ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.
காலியில் நேற்றுமுன்தினம்நடைபெற்றநிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
சிறிலங்கா சுதந்திரக் கட்சி வரலாற்றுக் காலம் முதல் சவால்களை வெற்றிகொண்டஒருகட்சியாகும். எதிர்காலத்திலும் இந்த நிலையில் மாற்றமிருக்காது. எதிர்வரும் ஆண்டு நடுப்பகுதியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களின் போது சுதந்திரக் கட்சியை வெற்றிக் கட்சியாக மாற்றும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ளப் போகின்றேன்.
இந்தத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிகை சின்னத்தில் போட்டியிடும்.
நாட்டின் அனைத்து இடதுசாரி முற்போக்குக் கட்சிகளையும் ஒன்றிணைத்து கூட்டணி அமைத்து தேர்தலில் போட்டியிட நடவடிக்கை எடுக்கப்படும்.
சாதாரண பொதுமக்களுக்கு நலன்களை வழங்கும் கட்சியாக சுதந்திரக் கட்சி செயற்படும்- என்றார். (ற)

## ஐ.தே.கவை சாடுகிறார் அமைச்சர் டிலான்



கொழும்பு, நவ.28
கூட்டு எதிரணிக்கு ஐக்கிய தேசியக் கட்சியினர் அதிக கவனிப்பு வழங்குவதை இந்தச் சபையில் அவதானிக்க முடிகின்றது.
இவ்வாறு இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.
நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
கூட்டு அரசில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கூறுவதை செவிமடுப்பதை விடவும், கூட்டு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வாய் திறந்தவுடன் அவற்றுக்கு பதிலளிக்கின்ற ஒரு நிலமையை காணமுடிகின்றது. பிரதமரின் நடவடிக்கைகளும் இதற்கு எந்த விதத்திலும் குறைத்து மதிப்பிட முடியாதுள்ளது – என்றார். (ற)

> சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கூறுவதை செவிமடுப்பதை விடவும், கூட்டு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வாய் திறந்தவுடன் அவற்றுக்கு பதிலளிக்கின்ற ஒரு நிலமையை காணமுடிகின்றது

## நிதி அமைச்சர் யோசனைக்கு நீதி அமைச்சர் கடும் எதிர்ப்பு

கொழும்பு, நவ.28
நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யும்போது அதற்குக் கட்டணம் அறவிடும் நிதி அமைச்சரின் யோசனைக்கு நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் தெரிவித்ததாவது:
நீதியை நிலைநாட்டுவதற்காக நீதிமன்றம் செல்லும் மக்களிடம் கட்டணம் அறவிடுவது நியாயமற்ற செயலாகும். இது குறித்து நிதி அமைச்சரிடம் தெளிவுபடுத்தியுள்ளேன்.
ஜனநாயக நாடுஒன்றில் பொது மக்கள் நீதியின் துணையை நாடுவதற்கான உரிமை இந்த நடைமுறையின் மூலம் வரையறுக்கப்படக்கூடும்.
இந்த யோசனை தொடர்பில் சட்டத்தரணிகளுக்கு இதுவரை போதியளவு தெளிவுகிடைக்கவில்லை. தெளிவுகிடைத்தால் கடுமையான எதிர்ப்புக் கிளம்பும் – என்றார். (ற)

# பொலிஸ் அதிகாரத்தை வழங்கினால் ஆபத்து

### தேசப்பற்று அமைப்பு அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, நவ.28
உத்தேச அரசியல் யாப்பில் முன் மொழியப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரத்தை வழங்கும் யோசனையை நடை முறைப்படுத்தினால்இலங்கைபொலிஸ் திணைக்களம் 9 பிரிவுகளாக பிரியும் ஆபத்து உள்ளது.
இவ்வாறு தேசப்பற்று அமைப்பு அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. இரகசியப்பொலிஸ் பிரிவு, பயங்கரவாத ஒழிப்பு பிரிவு, தேசிய புலனாய்வுத் துறை, போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு என்பனவும் செயலிழந்து போகும் நிலமை உருவாகும்.
வட மாகாணத்துக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால், இரகசியப் பொலிஸாரும், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவும், புலனாய்வுத் துறையும் பலாலி விமான நிலையத்துக்கு வெளியே சென்று விசாரணை முன்னெடுக்க முடியாத ஒரு நிலமை தோன்றும்.
வட மாகாண முதலமைச்சரிடம் கேட்காமல் பொலிஸாருக்கு வட பகுதிக்கு செல்ல முடியாமல் போகும்.
முன்னர் மேல் மாகாண முதலமைச்சராக சந்திரிகா குமாரதுங்க இருந்தபோது, பொலிஸ் அதிகாரத்தை மாகாணங்களுக்கு வழங்குமாறு கோரினார்.
அப்போதையஜனாதிபதியாகவிருந்த டீ.பீ. விஜேதுங்க அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தார் என்பது சுட்டிக்காட்த்தக்கது. -என்றுஅந்த அமைப்பு கூறியுள்ளது. (ற)

> பொலிஸ் அதிகாரம் வழங்கினால் வடக்குக்கு பொலிஸார் செல்ல முடியா நிலைமை தோன்றும்.



மாத்தளை, நாவலரில் நடைபெற்ற இளைஞர் பயிற்சி முகாமுக்கு வந்த கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அங்கிருந்த இளைஞர்களுடன் புகைப் படம் எடுத்துக் கொண்டார்.

## புதிய கட்சி உறுப்பினர்கள் ஆட்சிக்கு வந்து பயனில்லை

### சு.க. பொதுச் செயலாளர் கூறுகின்றார்

கொழும்பு, நவ.28
புதிய கட்சியின் உறுப்பினர்களை ஆட்சி அதிகாரத்துக்குத் தெரிவு செய்வதால் எந்தப் பலனும் கிடைக்காது.
இவ்வாறு சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார். காலியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. தொகுதி வாரி முறையில், அதிகாரம் இல்லாதவர்களின் சகாக்களை தெரிவு செய்து எந்த பயனும் இருக்குமா?.
எதிர் வரும் தேர்தலில் வெல்ல வேண்டியவர்கள் ஒன்றில் சிறி லங்கா சுதந்திரக் கட்சியினர் அல்லது ஐக்கிய தேசியக் கட்சியினர்.
அப்படியில்லை என்றால், தற்போதைய தேசிய அரசின் மூலம் கிராமத்துக்கு பொரல் மண்ணைக் கூட போட முடியாது போகும். கிளைகள் முளைப்பது போல் முளைக்கும் புதிய கட்சிகள் மூலம் உறுப்பினர்களை தெரிவு செய்து என்ன செய்ய முடியும்.- என்றார். (ற)

## பன்னாட்டு கவிதைப் போட்டியில் முதலிடம்

மூதூர், நவ.28
ஆஸ்திரேலிய வானமுதம் ஒலிபரப்புச் சேவையின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பன்னாட்டு ரீதியில் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் இலங்கையின் மூத்த கவிஞர் மூதூர் முகைதீனுக்கு முதலிடம் கிடைத்துள்ளது.
இப்போட்டியில் உலகின் பல நாடுகளிலிருந்தும் கவிஞர்கள் பங்கு பற்றியிருந்தனர்.
'உலக மொழியாக உயர்ந்த தமிழ் என்ற தலைப்பில் இவர் எழுதிய கவிதைக்கே முதற் பரிசு கிடைத்தது.
மூதூர் முகைதீன் கடந்த காலங்களில் பல இலக்கியப் போட்டி களில் கலந்துகொண்டு தேசிய ரீதியாக விருதுகள் பலவற்றைப் பெற்றுக் கொண்டுள்ளார்.
நான்கு கவிதை நூல்களை இதுவரை வெளியிட்டுள்ள இவர். ஓசை காலாண்டு கவிதைச் சிற்றிதழின் ஆசிரியராகவும் இருந்து வருகின்றார். (ய-40)

## 48 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது

கொழும்பு, நவ.28
எம்பிலிப்பிட்டிய, சிலுமினி கம பிரதேசத்தில் 48 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.
பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொண்ட சோதனையின்போது குறித்த நபர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.
அதேவேளை, கதிர்காம முகாமின் அதிரடிப்பிரிவு அதிகாரிக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில்தணமன்வில, எம்பிலிப்பிட்டியவில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் கஞ்சா பயிரிடப்பட்ட பண்ணைஒன்று அழிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## போதைப் பொருள் தொடர்பில் இதுவரை 800 சுற்றிவளைப்புகள்

கொழும்பு, நவ.28
வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் போதைப் பொருள தொடர்பில் 800இற்கும் அதிகமானசுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளனஎன்றுபோதைப் பொருள் ஒழிப்புப் பணியகம் தெரிவித்தது.
பாடசாலைகளை அண்மித்த பகுதிகளில் முன்னெடுக்கப்படும் சுற்றிவளைப்புகள் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று பணியகத்தின் பொறுப்பதிகாரி நந்தன பெரேரா குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது: இவ்வாறான சுற்றிவளைப்புகளுக்கு விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.
சுற்றிவளைப்புக்களில் கைதுசெய்யப்படுவோர் தொடர்பில் நீதிவான் மற்றும்மேல் நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்படுகின்றது - என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யுனிசெப் பிரதிநிதி திருமலைக்கு வருகை

மூதூர், நவ.28
அண்மையில் நியமனம் பெற்ற யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டிமொத்தி சட்டன் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் என்.ஏ.ஏ.புஸ்பகுமாரவை சந்தித்துக் கலந்துரையாடினார்.
இந்தச் சந்திப்பின்போது திருகோணமலை மாவட்டத்தின் மீள்குடியேற்றம், கல்வி சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் தொடர்பான அபிவிருத்திச் செயற்பாடுகள் உட்பட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (க-ய-40)

# விரியும் விம்பங்கள் கவிதைநூல் வெளியீடு

மூதூர், நவ.28
கலாபூசணம் கவிஞர் த.சிதம்பரப்பிள்ளை எழுதிய 'விரியும் விம்பங்கள்' கவிதை நூல் வெளியீட்டுவிழா நேற்றுமுன்தினம் திருகோணமலை பெருந்தெரு விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.
திருகோணமலை முத்தமிழ்ச் சங்கத்தின் தலைவர் இரா.ஸ்ரீஞானேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் நூலாசிரியரிடமிருந்து முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். (க-ய-40)

# சட்டவிரோத மணல் ஏற்றிய நால்வருக்கு தண்டம்

தென்மராட்சி, நவ. 28
அனுமதிப் பத்திரமின்றி ஒரு உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்ற நால்வருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 28 ஆயிரம் ரூபா வீதம் ஒரு லட்சத்து 12 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
தென்மராட்சி தெற்குப் பகுதியி லிருந்து அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த உழவு இயந்திரத்தை மடக்கிய கொடிகாமம் பொலிஸார் குறித்த நால்வருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.
வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது 4 பேரும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அவர்களுக்குத் தண்டம் விதிக்கப்பட்டது.
இதேவேளை வழித்தட அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை ஏற்றி வந்த வாகனச் சாரதிக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ற-9)



மாவீரர் தின நினைவேந்தலை முன்னிட்டு மன்னார் கரிசல் கப்பலேந்தி மாதா ஆலயத்தில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. நேற்று மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை அடிகளார் தலைமையில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன், தமிழ் மக்களின் விடுதலைக்காகத் தம் உயிரைத் தியாகம் செய்த மாவீரர்களை நினைவு கூர்ந்து தீபம் ஏற்றி அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (ற-56)

# சிறிலங்கா சுதந்திரக் கட்சியை காப்பாற்றியவர் மைத்திரியே

## மகிந்த அமரவீர கூறுகின்றார்

கொழும்பு, நவ.28
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தோல்வியடைந்த நிலையில் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை விடவும் ஏனைய யாராவது ஜனாதிபதியாகியிருந்தால் சுதந்திரக் கட்சி மீள முடியாத வீழ்ச்சியை அடைந்திருக்கும்.
இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர இவ்வாறு தெரிவித்தார்.
காலியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
முன்னைய காலங்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தோல்வியடைந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களை விடவும் இந்த முறை கட்சியின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ற)

# ரயில் நிலைய மேடை அமைப்பில் தாமதம்

மட்டக்களப்பு, நவ.28
ஏறாவூர் ரயில்நிலையத்தின் புனரமைப்பு வேலைகள் மந்தகதியில் இடம்பெற்றுவருவதாக பயணிகள் விசனிக்கின்றனர்.



பயணிகள் மேடை அமைக்கும்பணிகள் தொடங்கப்பட்டுப் பல மாதங்கள் கடந்துவிட்டபோதிலும் இன்னமும் வேலைகள் நிறைவுறாமல் அரைகுறையாக விடப்பட்டுள்ளதால் தாம் சிரமங்களை எதிர்நோக்குவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.
மேடை அமைப்பு வேலைகளுக்கெனக் கிளறி விடப்பட்டு கொட்டப்பட்ட கிரவல் மண் மழை நீரோடு கலந்து சேறும் சகதியுமாகியுள்ளது.
இதனால் ரயிலில் ஏறி - இறங்கும் பயணிகள் வழுக்கி விழுந்து காயம்படவோ அல்லது உயிராபத்தை எதிர்நோக்கவோ வேண்டி வரும் என அச்சம் தெரிவிக் கப்படுகின்றது.
எனவே, இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-ய-46)

# மாவீரர் நாளை நினைவுகூர்ந்து மட்டக்களப்பில் துண்டுப்பிரசுரம்

செங்கலடி, நவ.28
மாவீரர் தினமான நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மாவீரர் நாள் நவம்பர் 27 என தலைப்பிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் போடப்பட்டுள்ளன.



சனிக்கிழமை நள்ளிரவு வேளையில் இவை போடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.
மாவீரர்களை நினைவு கூரும் வகையிலான வாசகங்கள் அச்சிடப்பட்டுள்ள இந்த துண்டுப்பிரசுரங்கள் மட்டக்களப்பு நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வீடுகளிலும், வீதிகளிலும் போடப்பட்டிருந்ததாக மக்கள் தெரிவிக்கின்றனர்.
சம்பவத்தை அடுத்து குறித்த பகுதிகளுக்கு வந்த மட்டக்களப்புப் பொலிஸார் உட்பட்ட பாதுகாப்புத் தரப்பினர் இதுதொடர்பில் விசாரணைகளை நடத்தியுள்ளதுடன் துண்டுப் பிரசுரங்களையும் எடுத்துச் சென் றுள்ளனர். (க-ய-47)

# மழைகாலப் பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், நவ. 28
மழைகாலத்தில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளக்கூடிய கட்டமைப்பு என்ற தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்காக மாகாண விவசாயத் திணைக்களத்தால் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் இருந்து 1.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.
மழைகாலத்தில் மழைத்துளிகளின் தாக்கம் காரணமாக பூ அரும்புகள் உதிரல் மற்றும் பூக்கண் அடைத்தல் என்பன நிகழும். பூக்களின் உற்பத்தி பாதிக்கப்பட்டு மரக்கறிகளின் செய்கை வீழ்ச்சியடைகின்றன. மரக்கறிகளின் விலையும் உச்சத்தை அடைகின்றன.
மழைகாலத்தில் மரக்கறிகளின் செய்கையை அதிகமாக்குவதற்கு பயிற்செய்கையை மேற்கொள்ளக்கூடிய கட்டமைப்பு என்ற தொழில்நுட்பத்தின் கீழ் தற்போது 24 பயனாளிகள் இணைத்து கொள்ளப்பட்டுள்ளனர்.
நெடுந்தீவு, கரவெட்டி, புலோலி, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, புத்தூர், உடுப்பிட்டி, நல்லூர் ஆகிய விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் இருந்து குறித்த பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு விவசாயப் போதனாசிரியர்கள் மூலம் தொழில்நுட்ப வழிகாட்டல் பயிற்சிகள் வழங்கப்படும்.
இந்த மரக்கறிச் செய்கையின் கட்டமைப்பின் பெறுமதி ஒரு லட்சம் ரூபா ஆகும். பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. முதற்கட்டமாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இதன் வேலைகள் பூரணமான பின் மிகுதி 25 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.
இந்தக் கட்டமைப்பின் 80 வீதமான நடவடிக்கைகள் பூரணமடைந்துள்ளன - என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)

# சிறுவர் பாதுகாப்புத் தொடர்பில் செயற்றிட்டம் ஒன்று தேவை

## திருமலை மாவட்டச் செயலாளர் தெரிவிப்பு

மூதூர், நவ.28
சிறுவர் பாதுகாப்புத் தொடர்பில் எதிர்வருகின்ற 2017ஆம் ஆண்டிலாவது பிரதேச செயலக ரீதியாக பொருத்தமான செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்திச் செயற்படுத்த வேண்டும். அதன் மூலம் சிறுவர்கள் எதிர்நோக்குகின்ற பல பிரச்சினைகளுக்கு குறிப்பிட்ட சதவீதத்திலாவது தீர்வுகளை வழங்க முடியும்.
இவ்வாறு திருகோணமலை மாவட்டச் செயலாளர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார தெரிவித்தார்.
திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் அண்மையில் திருகோணமலை சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டது. அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் தெரிவித்ததாவது:
சிறுவர்களின் நலன் தொடர்பில் சகல துறைசார் நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஜனாதிபதி கூட சிறுவர்களின் நலன் தொடர்பில் கூடிய கவனம் செலுத்துகின்றார். சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை மேற்கொள்ளல் வேண்டும்.
பெண்கள் வெளிநாட்டுக்கு வேலை வாய்ப்புக்கு செல்வதால் சில பிள்ளைகளின் கல்வி மற்றும் பாதுகாப்பு என்பன கேள்விக்குறி யாகியுள்ளன. சில பிரதேசங்களில் சிறுவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுவதுடன் தொடர்ச்சியாக பாடசாலைக்கு வருகை தராமலும் இருக்கின்றார்கள். இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வாக சிறந்த முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும்- என்றார்.
இந்த நிகழ்வில் மேலதிக மாவட்டச் செயலாளர் எஸ்.அருள்ராசா மற்றும் பிரதேச செயலாளர்கள் சிறுவர் அபிவிருத்தி தொடர்பான உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லசந்த கொலை வழக்கில் பொலிஸாருக்குச் சிக்கல்

## தடயங்கள் கிடைக்காததால்



கொழும்பு, நவ.28
பிரபல ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் தொடர்பான தடயங்கள் கிடைக்காமையால் கொலையாளியை பிடிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சண்டே லீடர் பத்திரிகையின் பிரபல ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரின் புகைப்படம் போன்ற மாதிரி ஓவியப்படம் ஒன்றை பொலிஸார் நேற்று வெளியிட்டனர்.

குறித்த சந்தேகநபர் 35 வயதுடையவர் என்றும், தடிப்பமான 5.8' உயரமான மனிதர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவத்தை நேரில் பார்வையிட்ட சாட்சியங்கள் தெரிவித்த விளக்கங்களின் அடிப்படையில் குறித்த மாதிரி ஓவியப் படம் ஒரு கலைஞரால் வரையப்பட்டது என பொலிஸார் குறிப்பிட்டனர்.

குறித்த மாதிரிச் சித்திரத்தின் அடிப்படையில், சந்தேகநபர் பற்றிய தகவல் தெரிந்தால் 071-8305528, 071-8349505, 077-3291500, 071-8070207 அல்லது 011-2422176, 011-2380380 என்ற இலக்கங்களுக்கு அழைப்பை மேற்கொண்டு தெரிவிக்கவும் எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

பொது மக்களின் உதவி மீண் டும் மூன்றாவது முறையாக எதிர்பார்க்கப்பட் டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

2009ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி தெஹிவளைப்பகுதியில் ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க சுட்டுக் கொலை செய்யப்பட்டார். (ற)

# கொக்கெய்ன் கடத்தலுக்கு கேந்திர நிலையம் இலங்கை

கொழும்பு, நவ.28
கொக்கெய்ன் என்ற போதைப் பொருளை விநியோகிக்கும் கேந்திர நிலையமாக இலங்கையைப் போதைப் பொருள் கடத்தற்காரர்கள் பலகாலமாக பயன்படுத்தி வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐரோப்பிய நாடுகள், கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு இலங்கையில் இருந்து கொக்கெய்ன் போதைப் பொருள் விநியோகிக்கப்படுகின்றது என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பிரேசில் உலகில் பெருமளவில் கொக்கெய்ன் போதைப் பொருளை உற்பத்தி செய்யும் நாடாக உள்ளது. பிரேசில் நாட்டில் இருந்தே இலங்கைக்கு அதிகளவில் சீனி இறக்குமதி செய்யப்படுகிறது. இறக்குமதி செய்யும் சீனிக்குள் மறைத்து கொக்கெய்ன் போதைப் பொருள் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. கொள்கலன் பெட்டிகளில் மறைத்து அனுப்பி வைக்கப்படும் இந்த கொக்கெய்ன் இலங்கையில் இருந்து உலகம் முழுவதும் விநியோகிக்கப்படுகின்றது என்று விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்படும் பொருள்கள் மற்றும் போதைப் பொருள் பொதிகள் பெரும்பாலும் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதில்லை. கடத்தற்காரர்கள் இலங்கையைத் தமது நிலையமாகப் பயன்படுத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த வருடத்தில் மாத்திரம் சீனி இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன் பெட்டிகளில் மறைத்துக் கொண்டு வரப்பட்ட 600 கிலோ கிராம் கொக்கெய்ன் 4 சந்தர்ப்பங்களில் கைப்பற்றப்பட்டமை தெரிந்ததே. (ற)

# தமிழ் இளைஞர்களும் ஒழுக்கத்தைக் கட்டிக் காக்க வேண்டும்

## நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அரியநேத்திரன்



கொக்கட்டிச்சோலை, நவ.28
இளைஞர்கள் ஒழுக்க முள்ளவர்களாக உருவாகி எமது சமூகத்தின் மரபுகளைக் கட்டிக்காக்க வேண்டும் – என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அ. அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - மண்முனை தென்மேற்கு பிரதேச இளைஞர் முகாமின் இரண்டாம் நாள் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் முதன்மை அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:

தற்போதைய இளைஞர்கள் மதுபாவனை, புகைத்தல் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். தமிழ்பேசுமக்களின் இருப்பிடமாக இருக்கின்ற வடக்கு, கிழக்கில் உள்ள இளைஞர்களும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

அதேவேளை, யாழ். மாவட்டத்தில் இளைஞர்களைக் குழுக்களாகப் பிரித்து மோதவிடும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

இதற்கு உதாரணமாக இன்று உருவெடுத்திருக்கின்ற ஆவா குழுவைக் குறிப்பிடமுடியும்.

இது இளைஞர்களிடையே குரோதங்களை வளர்ப்பதற்கான செயற்பாடாக இருக்கின்றது.

> “இளைஞர்கள் ஒழுக்கக்கேடான செயற்பாடுகளில் ஈடுபடாமல் தங்களது கிராமங்களையும் சிறந்த சமூகமாக மாற்றுவதற்கேற்ற சமூக சேவையில் ஈடுபட வேண்டும்

எனவே, இளைஞர்கள் இவ்வாறான செயற் பாடுகளில் ஈடுபடாமல் சிறந்த ஒழுக்கப் பண்புகளுடன் தங்களது கிராமங்களையும் சிறந்த சமூகமாக மாற்றுவதற்கேற்ற சமூக சேவையில் ஈடுபட வேண்டும் – என்றார். (க-ய)



# அடுத்த வருட இறுதிக்குள் மலையகத்தில் 14,000 வீடுகள்

## அமைச்சர் திகாம்பரம் தெரிவிப்பு

நுவரெலியா, நவ.28
அடுத்த ஆண்டுக்குள் மலையகத்தில் 14,000 தனிவீடுகள் கட்டிமுடிக்கப்படும் என மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

200 வருட லயத்து வாழ்வில் இடர்களை அனுபவிக்கும்தோட்டத்தொழிலாளர்களுக்கு தனிவீடுகளை அமைத்துக் கொடுக்கும் வேலைத்திட்டம் 2020 ஆண்டில் பூர்த்தியாக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

மலையகத்தில் 25,000 தனி வீடுகளைக் கட்டும் பணி தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் ஊடாக அமைத்துக் கொடுக்கப்படும் 7 பேர்ச் காணியுடனான வீடுகளுக்கு அடுத்த வருடம் ஒக்டோபர் மாதத்துக்கு முன்பதாக காணி உறுதிப்பத்திரமும், வீட்டு உரிமைப் பத்திரமும் வழங்கப்படும். என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ய-43)

# கழிவுத் தேயிலையுடன் இரண்டு பேர் கைது

நுவரெலியா, நவ.28
மஸ்கெலியாப் பகுதியில் நேற்றுமுன்தினம் சுமார் 1,500 கிலோ கழிவுத்தேயிலையுடன் இருவர் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

அனுமதிப்பத்திரமின்றி மஸ்கெலியா - மவுசாகலைப் பகுதியிலிருந்து கழிவுத் தேயிலையைப் பிறிதொரு களஞ்சிய சாலைக்குக் கொண்டு செல்லும்போது பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் கைப்பற்றப்பட்ட கழிவு தேயிலையுடன், மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

சந்தேகநபர்களை நிபந்தனையுடன் பொலிஸ் பிணையில் விடுதலை செய்துள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (க-ய-43)

# மாணவர்கள் 16 பேருக்கு வகுப்புத் தடை கல்வி நடவடிக்கையும் இடைநிறுத்தம்

## கிழக்குப் பல்கலைக்கழகத்தில்

செங்கலடி, நவ.28
கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவபீட கல்விநடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முதல் கால வரையறையின்றி இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், 16 மாணவர்களுக்கு தற்காலிக வகுப்புத்தடையும் விதிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் பதிவாளர் விஸ்வநாதன் காண்டீபன் தெரிவித்தார்.

மருத்துவபீட மாணவர்களின் பகிடிவதை சார் நடவடிக்கைகள் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

கடந்த 15ஆம் திகதி மருத்துவபீடத்துக்கு உள்வாங்கப்பட்டிருந்த மாணவர்கள் மீதான பகிடிவதை காரணமாகவே இந்த முடிவுஎடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2ஆம், 3ஆம் வருட மாணவர்கள் நேற்றைய தினம் நண்பகல் 12 மணிக்கு முன்னர் விடுதிகளில் இருந்து வெளியேற வேண்டும் என்றும் அறிவிக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ய-47)

# கடலில் மாயமான மாணவனைத் தேடும் நடவடிக்கைகள் தீவிரம்

## புன்னைக்குடா மீனவர்கள் நேற்றும் தொழிலைக் கைவிட்டனர்



மட்டக்களப்பு, நவ.28
மட்டக்களப்பு, ஏறாவூர் புன்னைக்குடா கடலில் காணாமற்போன மாணவர்களில் ஒருவர் இன்னமும் கண்டுபிடிக்கப்படாத நிலையில் நேற்றும் சுமார் ஆயிரத்து 500 மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்தவெள்ளிக்கிழமை நீராடிக் கொண்டிருந்த வேளையில் சுழியொன்றியில் சிக்கிக் காணாமற் போன மூன்று மாணவர்களில் ஒருவர் உயிருடனும் மற்றையவர் சடலமாகவும் மீட்கப்பட்டார். இன்னொரு மாணவன் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. கடலில் மீனவ சுழியோடிகளும், கடற்படைச் சுழியோடிகளும் தேடி வருகின்றனர்.

அந்தப் பகுதி மீனவர்கள் இரண்டாவது நாளாகவும் கடலுக்குச் செல்வதிலிருந்து விலகித் தமது தொழிலைக் கைவிட்டுள்ளனர்.

தமது மீனவக் கலாசாரத்தின்படி கடலில் எவராவது மூழ்கிக் காணாமற் போனால் அவர் கண்டு பிடிக்கப்படும் வரை கடல் தொழிலுக்குச் செல்வதில்லை என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

கடல் தொடர்ந்தும் சீற்றமாகவும் கொந்தளிப்பாகவும் இருப்பதால் தேடும் முயற்சி சிரமம் மிக்கதாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண மரநடுகை மாதம்

"அடர்ந்த காட்டின் நடுவில் ஏற்படக்கூடிய அபாயம். சனநெருக்கமுள்ள நகரத்தின் தெருவைக் கடக்கும் ஒரு பாதசாரிக்கு ஏற்படக்கூடிய அபாயத்தை விடக் குறைவானதாகவே இருக்கும் என்று அடித்துச் சொல்லலாம்."

-ஹென்னத் அன்டர்சன் (வேட்டைக்காரராக இருந்து இயற்கையியலாளராக மாறியவர்)

கார்த்திகை
01-30, 2016
"சொந்த மண் சொந்த மரங்கள்"
"ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்"

# கிழக்குப் பல்கலையில் மாவீரர்களுக்கு அஞ்சலி




செங்கலடி, நவ.28
கார்த்திகை 27 ஆம் நாள் மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நேற்று உணர்வுபூர்வமாக முன்னெடுக் கப்பட்டது.
கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறு மூலை வளாகத்திலுள்ள பிள்ளையார் ஆலயத்தில் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த தமிழ் மாணவர்கள் கலந்துகொண்டனர்.
ஈகச்சுடர் ஏற்றப்பட்டு உயிர்நீத்த அனைத்து உறவுகளுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது. அமைதியான முறையில் சுடர் ஏற்றிவணக்கம் செலுத்தப்பட்டது. மாவீரர்தின நினைவேந்தல் தொடர்பாக கடந்த காலங்களில் பாதுகாப்புத் தரப்பினரின் பல்வேறுபட்ட கெடுபிடிகள் காணப்பட்ட போதிலும் வருடா வருடம் தொடர்ந்து கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு தொடர்ச்சியாக நடத்தப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.(ந-ய-47)

## அரசைக் கவிழ்ப்பதற்காக சீனா பயணமாகவில்லை


### மகிந்த கூறுகின்றார்

கொழும்பு, நவ.28
எனது சீனப் பயணம் தற்போதைய அரசைக் கவிழ்ப்பதற்காக அல்ல.
இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
அரசைக் கவிழ்க்க வேண்டுமாயின் சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயற்பட மாட்டேன். நாட்டை மாற்ற வேண்டுமாயின் பொது மக்களின் ஆதரவைத் திரட்டி அரசுக்கு அழுத்தம் கொடுத்து மாற்றத்தை மேற்கொள்வேன்.- என்றார்.
சீன அரசு மற்றும் அதிகாரிகளுடன் பேச்சில் ஈடுபடுவதற்காக மகிந்த சீனாவுக்கு உத்தியோகப்பூர்வ பயணம் மேற்கொண்டுள்ளார். சீன அரசின் அழைப்பின் பேரிலேயே சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளேன் என்று முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.(ற)










உதயன் பத்திரிகையின் 3. ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும், உயிர்நீத்தவர்களை நினைவுகூர்ந்தும் நேற்று குருதிக் கொடை வழங்கப்பட்டது. (ற)



# கிளிநொச்சியில் நேற்று ஒரு கிலோ கஞ்சா மீட்பு




யாழ்ப்பாணம், நவ.28
கிளிநொச்சியில் மோட்டார் சைக்கிளில் கொண்டு செல்லப்பட்ட ஒரு கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.
155 ஆம் கட்டை, பாரதிபுரம் பகுதியில் நேற்று அதிகாலை கஞ்சா மீட்கப்பட்டது என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.
கிளிநொச்சிப் பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற பிரதீஸ் பியங்கர கஜேந்திரன் அடங்கிக் குழுவின் சோதனையின்போது சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த மோட்டார் சைக்கிள் சோதனைக்குட்படுத்தப்பட்டது. அதில் ஒரு கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது. கஞ்சாவை கொண்டுவந்தவர் என்ற சந்தேகத்தில் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்படார். குறித்த நபர் பயணித்த மோட்டார் சைக்கிளும் பறிமுதல் செய்யப்பட்டது. மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன. விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று ஊழல் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தர்சன தெரிவித்தார்.
நேற்று முன்தினம் குறித்த பகுதியில் 500 கிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார் எனவும் அவர் குறிப்பிட்டார்.(ற-21,6)

## அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைப்பு அடுத்தவாரம்

கொழும்பு, நவ.28
ஏழு அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளது என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்தது.
வரவு செலவுத் திட்டத்தினூடான விலைக் குறைப்புக்கு ஏற்ப இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஹசித திலகரத்ன தெரிவித்தார்.
பயறு ஒரு கிலோகிராம் 15 ரூபாவாலும் பருப்பு ஒரு கிலோகிராம் 10 ரூபாவாலும், உருளைகிழங்கு, மண்ணெண்ணெய் மற்றும் நெத்தலி என்பவற்றின் விலைகள் 5 ரூபாவால் விலை குறைக்கப்பட்டுள்ளதுடன், வெள்ளைச் சீனி ஒரு கிலோகிராம் 2 ரூபாவாலும் விலை குறைக்கப்பட்டுள்ளது.
12.5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயு 25 ரூபாவால் விலை குறைக்கப்பட்டுள்ளது என்றும் நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஹசித திலகரத்ன தெரிவித்தார்.(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எங்கள் அண்ணன் பிரபாகரன் என்று எழுதப்பட்டும், புலி முக படம் வரையப்பட்ட சுவரொட்டிகளும், மாவீரர் நாள் குறித்த வாசகங்களும் பருத்தித்துறைப் பகுதியில் காணப்பட்டன. பருத்தித்துறை இன்பர்சிட்டி, பருத்தித்துறை வியாபாரிமூலை, பருத்தித்துறை சிவன்கோயிலடி, கொட்டடி ஆகிய பகுதிகளில் அவை காணப்பட்டன. (ற-21,26)

# தைரொயிட் ஓமோன் சோதனை அவசியம்

## குழந்தை மருத்துவ நிபுணர் ஜெயபாலன் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 28

பிறக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் தைரொயிட் ஓமோன் தொடர்பான ரி.எஸ்.எச். சோதனை நடத்தப்பட வேண்டும். ரி.எஸ்.எச். சோதனைக்கு உட்படுத்தாமல் குழந்தைகளை வீடு செல்ல அனுமதிக்க வேண்டாம். பெற்றோர், சுகாதார அதிகாரிகள் இதில் கூடிய கவனம் எடுக்கவேண்டும்.

இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலை குழந்தை மருத்துவ நிபுணர் சி.ஜெயபாலன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தில் கடந்த 4 மாதங்களில் 4 குழந்தைகள் பிறக்கும்போது தைரொயிட் ஓமோன் குறைபாட்டுடன் பிறந்துள்ளமை இனங் காணப்பட்டது. பிறக்கும் குழந்தைகளுக்கு பிறந்த 24 மணி நேரத்திலிருந்து 72 மணி நேரத்துக்குள் குதிக்காலின் குருதி எடுக்கப்பட்டு ரி. எஸ்.எச். சோதனைக்காக கொழும்பில் உள்ள அவசர எம்.ஆர்.ஐ. ஆய்வு கூடத்துக்கு அனுப்பப்படுகின்றது. இந்த நடைமுறை வடக்கு மாகணத்தில் கடந்த நான்கு மாதங்களாக நடைமுறையில் உள்ளது.

குழந்தை எந்த மருத்துவமனையில் பிறந்தாலும் (யாழ். போதான வைத்தியசாலை, மாவட்ட பொது வைத்திய சாலைகள், ஆதார வைத்தியசாலை தனியார் வைத்திய சாலை) பிறந்த 24 மணி நேரத்திலிருந்து 72 மணி நேரத்துக்குள் இந்த ரி.எஸ்.எச். சோதனை கட்டாயமாக செய்யப்பட வேண்டும். பெற்றோர்கள் குழந்தை பிறந்த 24 மணிநேரத்தில் உங்களை பாராமரிக்கும் மருத்துவரிடம் உரிமையுடன் கேட்டு இதனை உறுதிசெய்ய வேண்டும்.

தைரொயிட்டு ஓமோன் குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு இன்றியமையாதது. இதன் குறைபாடு காரணமாக பிள்ளைகளின் மூளை வளர்ச்சிகுன்றி மந்த புத்தி நிலைக்கு ஆளாகலாம். நாங்கள் தைரொக்சின் மாத்திரையை குழந்தை பிறந்த 2 வாரத்துக்குள் வழங்கத் தொடங்குவதன் மூலம் பிள்ளையின் மூளை வளர்ச்சிப் பாதிப்பதைத் தடுக்கலாம்.

இலங்கையில் ஆயிரத்து 500 குழந்தைகள் பிறக்கும் போது அவற்றில் ஒரு குழந்தைக்கு இந்த நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனாலும் யாழ்ப்பாணத்தில் கடந்த 4 மாதத்தில் சுமார் 2ஆயிரத்து 500 குழந்தைகளுக்கான ரி.எஸ்.எச். சோதனை செய்யப்பட்ட போது 4 குழந்தைகள் தைரொயிட் ஓமோன் குறைபாட்டுடன் பிறந்துள்ளமை கண்டறியப்பட்டது.

இவர்களுக்கான சிகிச்சை (தைரொயிட் மாத்திரை) உடனடியாக வழங்கப்பட்டது. குறித்த குழந்தைகளுக்கு தொடர்ச்சியாக குழந்தை வைத்திய நிலையத்தில் கிளினிக் தொடரும். அதன்மூலம் தைரொயிட் ஓமோன் குறைபாட்டில் இருந்து மீள்வதுடன் நல்ல மூளை வளர்ச்சியையும் குழந்தைகள் பெற்றுக் கொள்கின்றன - என்றார். (ற-7)

# விவசாயிகளது காணிகளை மீட்டெடுக்க ஒருங்கிணைக

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ். சுபைர் அழைப்பு

மட்டக்களப்பு, நவ.28

ஏறாவூர் விவசாயிகளின் ஆயிரத்து 500 ஏக்கர் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. அவற்றை மீட்டெடுக்க ஒருங்கிணைந்த அரசியல் நடவடிக்கை தேவை. இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.

ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மரப்பாலம் 'பி' கமநல அமைப்பு விவசாயிகளால் காணி மீட்பு ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு - பதுளை வீதியை அண்டியுள்ள விவசாயிகள் 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தனர். பூர்வீகமாக பயிர்ச் செய்கையிலும், நெற் செய்கையிலும் ஈடுபட்ட அவர்களின் ஆயிரத்து 500 ஏக்கர் காணிகள் தற்போது அதிகாரிகளால் அபகரிக்கப்பட்டுள்ளன. அவற்றை மீட்க அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட போராட்டம் தேவையாகவுள்ளது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட், முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானா, பஷீர் சேகு தாவூத் உட்பட அனைவரும் ஒருங்கிணைய வேண்டும் என்று நான் விநயமாகவும் பகிரங்கமாகவும் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

காணிகளை இழந்து கடந்த 30 வருடகாலமாக அலைந்து திரியும் இந்த ஏழை விவசாயிகளிடத்தில் காணி உரித்துக்கான 3 வகை யான ஆவணங்கள் கைவசம் இருக்கின்றன. நாட்டின் ஜனாதிபதி அவர்களால் கையொப்பமிட்டு வழங்கப்பட்ட சொர்ணபூமி உறுதிப் பத்திரங்கள், காணி ஒப்பம், வருடா வருடம் புதுப்பிக்கின்ற மற்றும் வரி செலுத்துகின்ற ஆவணங்களும் விவசாயிகளிடம் உள்ளன.

இடம்பெயர்வின் பின்னர் அவர்களது காணிகள் அதிகாரிகளாலும் அரசியல் வாதிகளாலும் மிக சூட்சுமமான முறையிலே நன்கு திட்டமிட்டு அபகரிக்கப்பட்டன. தமக்குரித்தான காணிகளில் மீண்டும் விவசாயச் செய்கையில் ஈடுபடுவதற்கு உதவுமாறு விவசாயிகள் ஏறாவூர் பற்று பிரதேச செயலாளரிடம் வேண்டுகோள் விடுத்த பொழுது, குறிப்பிட்ட காணிகள் மேய்ச்சல் தரைக்கு ஒதுக்கப்பட்டன - என்று கூறியுள்ளார் பிரதேச செயலாளர்.

காணிகள் தங்களுக்குச் சொந்தமானதுதான் என உறுதிப்படுத்த சகல ஆவணங்களின் மூலப் பிரதிகளையும் போட்டோப் பிரதிகளையும் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலாளர் காணியை இழந்துள்ள விவசாயிகளிடத்தில் எழுத்து மூலம் கேட்டுள்ளார். இது விவசாயிகள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. காணிகளின் ஆவணங்களையும் அபகரித்து அழித்தொழிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கையோ என விவசாயிகள் தமது நியாயமான சந்தேகத்தை வெளிப்படுத் துகின்றனர். இந்த விடயத்தில் காணிகளை இழந்த விவசாயிகளுக்கு அரசியல் வாதிகள் மற்றும் சட்டத் தரணிகள் முன்வந்து, ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ற-21)

# மின்சாரம் தொடர்பான நடமாடும் சேவை

வவுனியா, நவ.28

வடக்கு மாகணத்தில் மின்சாரம் பெற்றுக்கொள்வதில் பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான தேசிய மின் செயற்பாட்டு நடமாடும் சேவை நேற்று வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டது.


மின்வலு மற்றும் மீள் புத்தாக்கல் சக்தி அமைச்சின் ஏற்பாட்டில் வவு னியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் ஐயாத்துரை மண்டபத்தில் ஆரம்பமான நிகழ்வில், மின்வலு மற்றும் மீள் புத்தாக்கல் சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய கலந்துகொண்டார்.

நடமாடும் சேவையில் மக்களின் முறைப்பாடுகளுக்கு உடனடித் தீர்வு கள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. காலை முதல் மாலை 4 மணிவரை இடம்பெற்ற சேவையில் வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் உள்ள மின்சாரம் இல்லாத வீடு ஒன்றுக்கு அமைச்சரால் மின் இணைப்பு வழங்கப்பட்டது. வவுனியா மாவட்டத்தில் நூற்றுக்கு நூறு வீதம் மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் - நடமாடும் சேவையில் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் மின்வலு மற்றும் மீள் புத்தாக்கல் அமைச்சின் செயலாளர் பி. எம். ஏஸ். வட்டகொட, வவுனியா மாவட்ட மேலதிக செயலாளர் த.திரேஸ்குமார், வன்னி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் றொஹனகமகே, சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர் சமிந்த வாசன், வட மாகாண மின் பாவனையாளர் சேவை நிலையத்தின் பொது முகாமையாளர், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய பாடசாலையின் அதிபர் த.அமிர்தலிங்கம், சர்வமதத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற-21)

# மின்சார சபையினர் அசமந்தம்: மாணவர்களின் கற்றல் பாதிப்பு

## ஸ்கந்தபுரம் மக்கள் குற்றச்சாட்டு



கிளிநொச்சி மின்சார சபையினரின் அசமந்தப் போக்குக் காரணமாக 30 குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிப்படைந்தன என்று- ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த மக்கள் குற்றஞ்சாட்டினர்.

ஸ்கந்தபுரம் 2ஆம் குறுக்கு வீதியோரம் நின்ற பாலைமரம் ஒன்று கடந்த வியாழக்கிழமை பெய்த மழையால் முறிந்து, வீதியின் குறுக்கே வீழ்ந்தது. மின்சார வயரின் மீதும் வீழ்ந்ததால் அப் பகுதியில் வசிக்கும் 30 வீடுகளுக்கான மின்சாரம் முழுமையாகத் தடைப்பட்டது. மின்சார சபையினருக்கு இது குறித்துத் தெரியப்படுத்தினோம். மரத்தை அப்புறப் படுத்தித் தருமாறு அவர்கள் எம்மையே கோருகின்றனர். பாலை மரத்தைத் தறித்தால் வனவளத் திணைக்களத்தினர் எம்மை கைதுசெய்யக் கூடும். தற்போது 3ஆம் தவணை பரீட்சைகள் ஆரம்பித்துள்ளன. மாணவர்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டும் உடனடியாக இந்த மரத்தை அகற்றித் தர வேண்டும் - என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பில் எமது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. குறித்த மரத்தை அகற்றிய பின்பு, தொடர்பு கொள்ளுமாறு கூறினோம். பெரிய மரம் என எமக்குத் தெரியப்படுத்தவில்லை. இது தொடர்பில் உடன் ஆராய்கின்றோம் - என்று மின்சார சபையின கிளிநொச்சி மாவட்டக் கிளையினர் தெரிவித்தனர். (ற-10)

# குடு பேபி கைது

180 மில்லிகிராம் குடு வைத்திருந்த குற்றச்சாட்டில் பிரபல குடு பேபி என அழைக்கப்படும் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை குறித்த இளைஞர் கைதுசெய்யப்பட்டார் என்று யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.ஆறுகால்மடம் பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞர் யாழ். பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் கைதுசெய்யப்பட்டார். அவர் பயணித்த சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசு நெல்லை விடுவித்ததும் அரிசி விலை வீழும்

நடப்பாண்டின் முதல் அரை யாண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் அரிசியின் விலை அதிகரித்ததாக தெரியவருகிறது.

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் விற் பனை, உணவு கொள்கை மற்றும் விவசாய வர்த்தக பிரிவின் பணிப்பாளர் துமிந்த பிரிய தர்சனவால் இந்த தகவல் வெளியிடப்பட்டது.

இதன்பிரகாரம் விலை நிர்ணய அதிகரிப்பை கட்டுப் படுத்துவதற்கு அரசிட மிருந்து 150,000 மெற்றிக் தொன் நெல்லை சந்தைக்கு விடுவிப்பதற்கு நெல் கொள்வனவு சபை தீர்மானித் துள்ளதாகவும் தெரியப்படுத்தப்பட்டது.

இந்த அதிகரிப்பு தொடர்பில் அண்மையில் இடம்பெற்ற பொருளாதார முகா மைத்துவக் குழுவின் கலந்துரையாட லின்போதும் தீர்மா னம் ஒன்று முன்வைக்கப்பட்டது. சந்தைக்கான நெல் வருகையை தொடர்ந்து அரிசியின் விலை மீண்டும் வீழ்ச்சியடையு மெனச் சுட்டிக்காட்டப்பட் டது.

## மாதாந்த பண வீக்கம் சராசரியிலிருந்து அதிகரித்துள்ளது

நடப்பாண்டில் கடந்த ஒக்ரோ பர் மாதத்தின் பணவீக்கமா னது 5 சதவீதமாகப் பதிவாகி யுள்ளது. முன்னதாக செப்ரெம்பர் மாதத்தில் 4.7 சதவீதமாக பதிவு செய்யப் பட்டிருந்த பண வீக்கமானது 0.3 சதவீதத்தினால் அதிகரித் துள்ளமை நோக்கத்தக்கது.

ஆண்டு அடிப்படையிலான சராசரியான தேசிய நுகர் வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்டுள்ள மாற்றம் என்பது நடப்பாண்டில் செப்ரெம்பர் மாதத்தில் 3.8 சதவீதத்தி லிருந்து ஒக்ரோபர் மாதத்தில் 4 சதவீதத்துக்கு அதிகரித் துள்ளது. அந்த வகையிலே பண வீக்கத்தில் ஏற்பட்டுள்ள மாதாந்த மாற்றங்களைக் கருத்தில்கொள்ளும் போது, தேசிய நுகர்வோர் விலைச் சுட் டெண் மேற்படி மாதங்களில் 113.5 சுட் டெண் புள்ளியி லிருந்து 114.7 புள்ளியாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆண் ஆடையலங்காரக் காட்சி டிசெம்பர் 3இல் கொழும்பில்



கொன்செப்ட் 2017 - இன்பினி-8 (infini- 8) என்ற தொனிப்பொருளின் கீழாக இடம்பெறவுள்ளது.

இலங்கையில் ஆண்கள் ஆடையலங்காரத்தை மெருகூட்டும் நோக்கோடு புகழ்பூத்த ஆண் கள் ஆடையலங்கார நிபுணர் பௌசுல் ஹமீட் இன் ஏற்பாட்டில் நான்காவது முறையாகவும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள வருடாந்த ஆடை யலங்கார நிகழ்வானது எதிர்வரும் டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி இன்பினி 8 (infini- 8) என்ற தொனிப்பொருளின் கீழாக இடம்பெற வுள்ளது.

இந்த நிகழ்வின்போது இலகு தன்மையா னதும்- நேர்த்தியானதுமான மிகச்சிறந்த எட்டு புதிய ஆடைய லங்கார வடிவமைப்புகள் காட் சிப்படுத்தப்படவுள்ளது. இதன் பிரகாரம் கருநீல நிறத்தில் அச்சு வடிவங் களைக் கொண்ட ஆடைகள், கவுண் ஸ்ரூத் துணிகள், புதுப் பாணியில் அமைந்த பிரித்தா னிய வடிவமைப்புக்கள், கைத்தறிகள் மற்றும் லினன்கள், மண் சாயல்கள், மிலன் ஸ்ட்ரீட் ஸ்டைல்கள், கலாசார சடங்கு உடைகள் போன்ற தான அம்சங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.


வணிகம்

"தனித்துவமான முறையிலே உலகத்தரத்துக்கு அமைவாக கருத்தாக்கம் செய்யப்பட்டு அறிமுகப்படுத்தப்படவிருக்கும் ஆடையலங்கார நிகழ்வாக இது காணப்படுகிறது".

அந்த வகையிலே புதிதான நவீனத்துவங்களு டன் கூடியதான உள்நாட்டு மற்றும் உலகளா விய ஆடையலங்கார வடிவமைப்புக்களை ஒரு வருடத்துக்கு முன்பாகவே இலங்கைக்கு அறி முகப்படுத்தும் ஒரே வர்த்தக நாமமாக ஹமீ டியா திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.




# மின்கலங்களுக்கு மாற்றீடான விசேட கொள்ளளவிகள் ஆய்வின் மூலம் விஞ்ஞானிகள் கண்டறிவு



மின்கலங்களுக்கு பதிலீ டான விசேட கொள்ளளவி களை ஆய்வின் மூலம் விஞ் ஞானிகள் கண்டறிந்ததாக தெரிய வருகிறது.

இந்த விசேட கொள்ளளவி களை ஓரிரு செக்கன் களில் சார்ஜ் செய்ய முடிவதுடன் தனது பாவனைக் காலத்தை ஒருவார காலத்துக்கு தொடர்ச் சியாக கொண்டிருப்பதான தகவல் சென்றல் புளோறிடா பல்கலைக்கழக ஆராய்ச்சி யாளரான நிற்றின் சவுண்ட் கரியினால் சுட்டிக்காட்டப்பட் டது.

பிரதானமாக சிமாட் கைபேசி பாவனையாளர் களிடையே இருந்து வருகின்ற மின் கலங்களில் அதிக நேரம் மின்சக்தியை சேமிக்க முடியாத தன்மைகளைக் கருத்தில் கொண்டு, அதற்கான தீர்வாக இந்த புதிய தொழில்நுட்பத்தைக் கொண் டமைந்த இலத்திரனியல் சாதனத்தை விஞ் ஞானிகள் கண்டுபிடித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

இதுவரை காலமும் பயன்பாட்டில் இருந்து வந்த கொள்ளளவிகள் அதிக அளவிலான மின்சக் தியை சேமித்து வைத்திருக்காத போதும் அதிக வினைத்திறனுடன் மின்சக்தியை வெளிவிடக் கூடியதாக இருந்து வந்தது. எனினும் புதிய தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அதிகளவு மின்சக்தியை சேமித்து வைத்திருக்கக்கூடிய விசேட கொள்ளளவிகளை உருவாக்க முடியும் என விஞ்ஞானிகளால் தெரியப்படுத்தப்பட்டது.

# முதல் 30இல் டி.எவ்.சி.சி வங்கிக்கும் இடம்

## பிஸ்னஸ் ருடே விருதுகளில்

இலங்கையின் மிகச் சிறந்த பொதுப் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் ஒன்றாக டி.எவ்.சி.சி. வங்கி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 16 ஆம் திகதி கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்ற 2015/16 நிதியாண்டுக்கான பிஸ் னஸ் ருடே றொப் 30 (Business Today Top 30) விருது வழங்கல் நிகழ்வின்போதே இந்தக் கௌர வத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. வங்கியின் பிரதம நிறைவேற்று அதி காரி அர்ஜுன் பெர்னாண்டோ நிதி யமைச்சர் ரவி கருணா நாயக்காவிட மிருந்து விருதைப் பெற்றுக் கொண் டார். தற்போது வங்கியானது 21ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டுள் ளதுடன், அதன் பன்முக வர்த்தக மற்றும் அபி விருத்தி வங் கியியல் செயற்பாடு களின் பேண் தகைமையை வெளிப்படுத் தியமையைக் கருத்தில் கொண்டே, இவ்விருதைத் தன் வசப்படுத்தி யுள்ளது.

DFCC BANK

வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி அர்ஜுன் பெர் ணாண்டோ நிதியமைச்சர் ரவி கருணா நாயக்காவிட மிருந்து விருதி னை பெற்றுக் கொண்டார்.

விருது தொடர்பில் வங்கியின் பிரதம நிறை வேற்று அதி காரி அர்ஜுன் பெர் னாண்டோ கருத் துரைக்கையில், ''மிகச் சிறந்த செயற்பாடுகளை வெளிப்படுத்தும் 2015/16 நிதி யாண்டுக்கான முதல் 30 பொதுப் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் ஒன்றாக பிஸ்னஸ் ருடே இனால் நாம் தெரிவு செய்யப்பட்டுள் ளமை எமக்கு மிகுந்த பெருமையளிக் கின்றது.

வாடிக்கையாளர்களுக்கு அதிநவீன தொழில்நுட்பத்தின் பின்புலம் கொண்ட தீர்வுகளை அளிப்பதுடன் அவர் களின் வாழ்க்கைத் தரத்தை மேம் படுத்து வதற்கான நிதிசார் தொழில் நுட்ப தீர்வுகளை அளித்து வாடிக்கை யாளர்களின் வங்கியியல் சேவை களை பலப்படுத்துவது தொடர்பில் நாம் தீவிர கவனம் செலுத்துகின் றோம். நுகர்வோர் வங்கியியல் எமது எதிர்கால வங்கி நடவடிக்கைகளில் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொள் ளும். வாடிக்கையாளர்கள் தமது வாழ்க்கையை மேலும் சிறப்பாக்கும் வகையிலான தொழில் நுட்பம் சார்ந்த தீர்வுகளை எம்மிட மிருந்து எதிர்பார்க்கமுடியும்.

இந்த கௌரவங்கள் எமது நிறு வனத் தின் முழுமையான செயற் பாடுகளை மேலும் சிறப்பானதாக மேற்கொள்ள வும், அதன்வழியே முன்னோக்கி நகர் வதற்கும்தன்னம்பிக்கையைதந்துள்ளது. வடிக்கை யாளர் நலன் சார்ந்து முன் னோக்கிபயணிப்பதற்கானவலிமையை நாம் கொண்டுள்ளோம்"- என்றுள் ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீனாவில் கட்டுமான விபத்து: பொறியியலாளர்கள் கைது

சீனாவின் ஜியாங்சி மாகாணம், பெங்செங்கில் மின்உற்பத்தி நிலையத்துக்காக நடைபெற்ற கட்டுமானம் அண்மையில் உடைந்து வீழ்ந்ததில் 74 பேர் சாவடைந்தனர்.

அதிக எடை கொண்ட சிமெந்துப் பலகைகள், இரும்பு கம்பிகள் திடீரென சரிந்து விழுந்ததினாலேயே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது. முறையற்ற கட்டுமானத் திட்டங்களே இதற்குக் காரணம் என்று-முதல் கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து கட்டட பொறியியலாளர்கள், அதிகாரிகள் என மொத்தம் 17 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டது என சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)

# மக்கள் வெள்ளத்தால் முடங்கியது சியோல்




தென்கொரிய ஜனாதிபதி பார்க் கியுன் ஹை பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி, 13 லட்சம் மக்கள் ஒன்று திரண்டு சியோல் நகரில் மிகப்பெரும் போராட்டத்தை நடத்தினர்.

ஜனாதிபதியின் தோழியான சோய் சூன் சில், அரச விவகாரங்களில் தலையீடு செய்து வருகிறார் எனவும், அரசின் மிகமுக்கிய ரகசிய கோப்புகளை ஆய்வு செய்து வருகிறார் எனவும், குற்றச்சாட்டுக்கள் கிளம்பின. மேலும், ஜனாதியதியுடன் தனக்கு இருக்கும் நெருக்கத்தை பயன்படுத்தி, பல நிறுவனங்களிடம் இருந்தும் நன்கொடைகளைப் பெற்று, இவர் ஆதாயம் அடைந்து வருகிறார் என அந்த நாட்டின் எதிர்க்கட்சிகள் ஆதா ரங்களுடன் நிரூபித்தன.

இதையடுத்து, கடந்த முதலாம் திகதி சோய் சூன் சில் கைது செய்யப்பட்டார். அவர்மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் வழக்குகள் தொடரப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. தனது தோழியின் செயலுக்கு வருத்தம் தெரிவித்த பார்க் கியுன் ஹை, இந்த விவகாரத்தில் மக்களிடம் வெளிப்படையாக மன்னிப்பும் கேட்டார். ஆனால் மன்னிப்பை மக்கள் ஏற்கவில்லை. அவர் பதவி விலகவேண்டும் என்று தெரிவித்து ஒவ்வொரு வாரமும் போராட்டங்கள் நடைபெற்று வருகிறன்றன. தலைநகர் சியோலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போராட்டத்தில் 13 லட்சம் மக்கள் பங்கேற்றனர். சியோலின் இயல்பு வாழ்க்கை முழுவதுமாக முடங்கியது என்று அந்த நாட்டின் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)

# மீண்டும் எண்ணப்படவுள்ளன வாக்குகள் தொங்கு நிலையில் டொனால்ட் ட்ரம்ப்

அமெரிக்காவின் விஸ்கான்சின் மாகாணத்தில் வாக்குகள் மீண்டும் எண்ணப் படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டது.



அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் அண்மையில் நடைபெற்றது. குடியரசுக் கட்சியின் வேட்பாளரானடொனால்ட் ட்ரம்ப், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான ஹிலாரி கிளிங்டனை வீழ்த்தி ஜனாதிபதியாகத் தெரிவானார். வாக்குகளின் எண்ணிக்கையில் ஹிலாரிக்கு அதிகம் கிடைத்தாலும் தொகுதிப் பிரதிநிதித்துவத்தில் ட்ரம்ப்புக்கு அதிகம் என்பதால் அவர் ஜனாதிபதியானார். ஆனால் வாக்குகளின் எண்ணிக்கையில் தவறு நடந்திருக்கலாம் என்று சில தரப்பினால் சந்தேகம் வெளியிடப் பட்டது. ஏனெனில் ஹிலாரியின் கோட்டைகள் என வர்ணிக்கப்பட்ட விஸ்கான்சின், மெக்சிக்கன், பென்சில்வேனியா ஆகிய 3 மாகாணங்களில் டிரம்ப் வென்றார். எனவே அங்கு வாக்குகளை மீண்டும் எண்ணும்படி கோரிக்கை விடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் விஸ்கான்சின் மாகாணத்தில் மறு எண்ணிக்கை கேட்டு முறைப்பாடு வழங்கும் கடைசி நாளான நேற்றுமுன்தினம் கிரீன் கட்சி வேட்பாளர் ஸ்ரெய்னால் வாக்குகளை மீண்டும் எண் ணும் படி மீண்டும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. அநேகமாக இன்னும் சில நாள்களில் குறித்த மாகாண வாக்குகள் மீண்டும் எண்ணப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மெக்சிக்கன், பென்சில் வேனியா ஆகிய மாகாணங்களிலும் மீண்டும் வாக்குகளை எண்ணுமாறு கோரிக்கை விடப்போவதாக ஸ்ரெய்ன் தெரிவித்தார். பென்சில்வேனியாவில் மறு வாக்கு எண்ணிக்கைக்கு முறைப்பாடு வழங்கும் இறுதிநாள் இன்றாகும். மெக்சிக்கனில் நாளைமறுதினம் வரை வழங்கலாம்.

இந்த முடிவுக்கு ட்ரம்ப் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார். தேர்தல் முடிந்துவிட்ட நிலையில் வாக்குகளை மீண்டும் எண்ணுவதென்பது தேவையற்றது. மக்கள், முடிவுகளை ஏற்றுவிட்ட நிலையில் நாட்டின் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் முயற்சி என ட்ரம்ப் தெரிவித்தார். (ம-எ)



# கொல்லப்பட்டன 190,000 வாத்துக்கள்

அம்ஸ்ரடாம், நவ. 28

வட ஐரோப்பாவில் பறவைக் காய்ச்சல் பரவிவருகிறது என்ற தகவலை அடுத்து, நெதர்லாந்தில் ஒரு லட்சத்து 90 ஆயிரம் வாத்துகள் கொல்லப்பட்டன. சுவீடன், பின்லாந்து, டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளில் பறவைக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப் பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. நெதர்லாந்தின் கிராமப் பகுதிகளில் உள்ள ஆறு பண்ணைகளில் இருந்த வாத்துக்களே அவ்வாறு கொல்லப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-எ)

# இந்தியா – பாகிஸ்தான் தீர்வை எட்ட வேண்டும்

## பான் கீ-மூன் வலியுறுத்தல்



இந்திய-பாகிஸ்தான் நாடுகள் தமது எல்லைப் பகுதியில் முறுகல் நிலைகளைத் தவிர்த்து, உரிய தீர்வை எட்டுவதற்கு முன்வர வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ-மூன்.

காஷ்மீர் எல்லைப் பகுதியில் உள்ள இந்தியாவின் ஊரி இராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து 19 இந்திய இராணுவச் சிப்பாய்கள் சாவடைந்தனர். சில தினங்கள் கழித்து பாகிஸ்தான் எல்லைக்குள் ஊடுருவி இந்தியா இராணுவம் தாக்குதல் நடத்தி, ஆயுததாரிகள் 7 நிலைகளை தகர்த்தது. இதையடுத்து இரு நாடுகளின் எல்லையிலும் பதற்றம் நிலவி வலுகிறது. இதனையடுத்தே பான் கீ-மூன் இவ்வாறு வலியுறுத்தினார்.

காஷ்மீர் எல்லைப் பகுதிகளில் இந்திய-பாகிஸ்தான் இராணுவங்களுக்கு இடையே கடும் சண்டை நடைபெறுவது கவலையளிக்கிறது. இருநாடுகளும் அமைதித் தீர்வு காண முயற்சிக்க வேண்டும். அமைதி நடவடிக்கைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை முழு ஆதரவு வழங்கும். எல்லையில் இனியும் உயிரிழப்புக்கள் ஏற்படாமல் தடுத்து, தெற்காசிய பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என பான் கீ-மூன் மேலும் தெரிவித்தார். (ம-எ)



கிரீஸ் நாட்டின் லெஸ்பொஸ் பகுதியில் அமைந்துள்ள அகதிகள் முகாமி... பேர் உயிரிழந்தனர். ஆயிரத்து 500 பேர் முகாமை விட்டு வெளியேறும் ... ஆயிரம் அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 5,000 வருடங்கள் பழைமையான நகர் எகிப்தில் கண்டுபிடிப்பு

கைரோ, நவ. 28



எகிப்தில் 5 ஆயிரம் வருடங்கள் பழைமை வாய்ந்த நகரம் நிலத்துக்குக் கீழ் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.

சொகாக் மாகாணத்தில் லக்சோர் நகரில், நைல் நதிக்கு அருகிலேயே இந்தப் மிகப் பழைமையான நகரம் கண்டுபிடிக்கப் பட்டது. இந்த நகரத்தில், பொருகள், மட்பாண்டங்கள், ஏனைய சில கருவிகள், உடல் அடக்கம் செய்த குழிகள் ஆகியன இனங்காணப்பட்டன. பல முக்கிய வரலாற்றுச் சின்னங்கள் நிறைந்துள்ள பகுதியில் இந்தக் கண்டுபிடிப்புக்கள் இடம் பெற்றுள்ளது எனத் தொல்பொருள் ஆராய்சசியாளர்கள் குறிப்பிட்டனர். (ம-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அலெப்போ மீண்டது

டமஸ்கஸ், நவ. 28
சிரியாவின் இரண்டாவது பெரிய நகரான அலெப்போ பெருநகர் ஆறு வருடங்களின் பின்னர் அரச படைகளால் முழுவதுமாக மீட்கப்பட்டது என பிராந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. சிரிய அரசு இருமுனைப் போராட்டத்தில் சிக்கித் தவித்தது. ஒன்று, ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர். இரண்டாவது, அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுக்களுக்கு இடையிலான போர். கிளர்ச்சிக் குழுக்களின் பிடியில் சிரியாவின் இரண்டாவது பெரிய நகரும்-வர்த்தக மையமுமான அலெப்போ சிக்கித்தவித்தது. இந்த நிலையில் அலெப்போவை மீண்டும் கைப்பற்றும் முயற்சியில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் களமிறங்கியது சிரியா. சிரியாவுக்கு ஆதரவாக ரஷ்யா களமிறங்கியது. வான் தாக்குதல்களும், தரைவழித் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

> “ ரஷ்யாவுக்கு எதிராக பிரான்ஸ் கொண்டுவந்த தீர்மானத்தை அந்த நாடு தனது வீட்டோ அதிகாரத்தால் தவிடு பொடியாக்கியது. ஆனால், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பிலிருந்து உலக நாடுகள் ஒன்றிணைந்து ரஷ்யாவை வெளியேற்றின. ஆனால் இன்னும் சில தினங்களில் அலெப்போ மீட்கப்படும் என்று தெரிவித்து தனது தாக்குதலை இரட்டிப்பாக்கியது ரஷ்யா. ”

அலெப்போவில் ரஷ்யா கடும் தாக்குதல்களை நடத்துகிறது. இதனால் பல பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர் என்று அமெரிக்கா குற்றஞ் சுமத்தியது. ஐக்கிய நாடுகள் சபையும் தனது கண்டனத்தை பல முறை ரஷ்யாவுக்குத் தெரிவித்தது. ஆனால் ரஷ்யா அடிபணியவில்லை. ரஷ்யாவுக்கு எதிராக பிரான்ஸ் கொண்டுவந்த தீர்மானத்தை அந்த நாடு தனது வீட்டோ அதிகாரத்தால் தவிடு பொடியாக்கியது. ஆனால், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பிலிருந்து உலக நாடுகள் ஒன்றிணைந்து ரஷ்யாவை வெளியேற்றின. ஆனால் இன்னும் சில தினங்களில் அலெப்போ மீட்கப்படும் என்று தெரிவித்து, தனது தாக்குதலை இரட்டிப்பாக்கியதுரஷ்யா. ரஷ்யாவுடன் ஈரானும் இணைந்து வான் தாக்குதல்களை நடத்தியது. இந்த நிலையில் அலெப்போ நகர் ஆயுததாரிகளிடமிருந்து நேற்று முன்தினம் முழுவதுமாக மீட்கப்பட்டது என அறிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் மாத்திரம் 212 பொது மக்கள் கொல்லப்பட்டனர். அவர்களில் 27 பேர் சிறுவர்கள். மனிதக் கேடயங்களாக பயன்படுத்தப்பட்ட 2 லட்சத்து 75 ஆயிரம் பேர் காப்பற்றப்பட்டனர். (ம-எ)

# அலெப்போ நகருக்காக அன்றாடம் அழும் குரல்

சிரியாவின் அலெப்போ நகரில் கொடும் தாக்குதல்கள் அரங்கேற்றப்பட்ட நிலையில், அலெப்போ நகரச் சிறுமி ஒருவர் தனது ருவிற்றரில் வெளியிட்ட பதிவுகள் உலகையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளன.
சிரியாவில் அரசு படைகள் மற்றும் கிள்ர்ச்சியாளர்களின் தாக்குதல்களுக்கு இடையே சிதைந்து கொண்டிருக்கும் முக்கிய வர்த்தக நகரம் அலெப்போ.
ஆயுததாரிகளின் வசமிருந்த இந்த நகரை ரஷ்யாவின் உதவியுடன் அரச படை கைப்பற்றியது. இந்த நிலையில், கிழக்கு அலெப்போ நகரைச் சேர்ந்த பானா அலபெத் என்ற 7 வயதுச் சிறுமி, குண்டு மழை பொழியும் தங்கள் நகரின் அன்றாட வாழ்க்கையை தனது ருவிட்டரில் தொடர்ந்து பதிவு




செய்து வருகிறார்.
அலெப்போவில் இருந்து மதிய வணக்கம். போரை மறப்பது குறித்து நான் படித்து வருகிறேன்.
தயவு செய்து என்னை எவராவ இப்பொழுது காப்பாற்றுங்கள்.
துப்பாக்கிச் சன்னங்களுக்கு பயந்து நான் கட்டிலுக்கு அடியி மறைந்து கொண்டிருக்கிறேன்.
என் அன்புக்குரிய உலகே, நா இன்றிரவு அழுதுகொண்டிருக்கிறேன், என்னுடைய தோழி இரவு இடம் பெற்ற வெடிகுண்டு தாக்குதலி கொல்லப்பட்டுவிட்டாள். என்ன அழுவதை நிறுத்த முடியவில்ல எனது நண்பர்களே!
அலெப்போவை நோக்கி வரு நிலா அல்ல வெடிகுண்டுகள்.
இன்றிரவு எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள். நா அச்சத்தில் மூழ்கியுள்ளேன்.
ஏன் அவர்கள் எங்கள் மீது குண்டுகளை வீசி அப்பாவி மக்களை தினமும் கொல் கிறார்கள். போன்ற வசனங்கள அந்தச் சிறுமியின் உருக்கமா ஒருசில ருவிட்கள்.



...ில் வாயு சிலிண்டர் வெடித்தச் சிதறியதில் 2 ...ம் சூழ்நிலை ஏற்பட்டது. குறித்த முகாமில் 66 (ம-எ)

# 120 நாக பாம்புகள் வியட்நாமில் மீட்பு

வியட்நாமின் டக்நாங் மாகாணத்தில் பஸ்ஸில் 120 நாக பாம்புகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
சந்தேகத்துக்கு இடமாக இருந்த குறித்த பஸ்ஸை பொலிஸார் மறித்துச் சோதனை செய்தனர்.
பஸ்ஸில் நால்வர் மட்டுமே இருந்தனர். 15 பிளாஸ்ரிக் பெட்டிகளை அவர்கள் வைத்திருந்தனர். அவற்றைக் கைப்பற்றி சோதனை செய்ததில் அதில் உயிருடன் 120 நாக பாம்புகள் இருந்தன. பஸ் போன்ற வாகனங்களில் நாக பாம்பை கொண்டுசெல்ல (பொதுமக்களுக்கு இடையூறாக) வியட்நாமில் தடையுள்ளது. எனவே அத்தனை பாம்புகளும் பறிமுதல் செய்யப்பட்டன. அவற்றின் மொத்த எடை 220 கிலோ. வியட்நாமில் நாக பாம்புகள் இறைச்சிக்காகவும், பாரம்பரிய மருந்துகளுக்காகவும் அதிக அளவில் கொன்று அழிக்கப்படுகின்றன. அதற்காக இவை கடத்தப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (ம-எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இனவெறுப்பைத் தூண்டுவோர் கட்டுப்பாட்டுக்குள் வருவரா?

கிழக்கு இலங்கையில் மஞ்சள் உடை தரித்தவரும் தலையை மழுங்கச் சிதைத்தவரும் பௌத்த சமயத்தின் கௌரவமிக்க குருமார்களில் ஒருவராகக் காட்சியளித்தவருமான ஒரு பிக்கு வானவர் நடந்து கொண்ட முறையும் தர்மத்தைப் போதிக்கும் வாயால் வெளியிட்ட வார்த்தைகளும் உள்ளூர் ஊடகங்களில் மட்டுமல்ல, சமூக வலைத்தளங்களிலும் வைரசாகப் பரவி, சகலரது கவனத்தையும் ஈர்த்திருந்தன. உள்ளூர் அரச அடிநிலை அதிகாரி ஒருவரைப் பார்த்து – வேறு உயர் அரச அதிகாரிகளும், பொலிஸ் உயர் மட்ட அதிகாரிகளும் பார்த்திருக்கும் நிலையில் கையை உயர்த்தியும், கை விரலைக்காட்டியும் உதிர்த்த வார்த்தைகள் இங்கு எழுத்தில் பதியக் கூடாதவையே. வலைத் தளங்களில் நேரடியாகப் பார்த்தவர்களின் மனங்கள் புழுங்கியிருக்கும். அதே விதத்தில் ஒரு சிறு துளியளவிலாகுதல் சிறுபான்மை மகன் ஒருவர் பேசியிருந்தால் இந்த நாட்டில் என்ன நடந்திருக்கும் என்பதை எண்ணியும் பார்க்க முடியாமல் இருக் கிறது.

இதனை தெற்கில் உள்ள பேரினவாதிகள் எவரும் கருத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. அவர்கள் அளிக்கும் ஊக்கத்தில்தான் இவ்வாறான சம்பவங்கள் நாட்டில் ஆங்காங்கே நடைபெறுகின்றன என்பதை அறியாதவர்கள் அல்லர் அவர்கள். விசித்திரம் என்னவென்றால், அவ்வாறு நடந்துகொண்ட பிக்கு மீது அரச தரப்பிலும் எந்தவித காத்திரமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பதுதான். குறைந்தது சட்டத்தை மீறி நடந்தவர் மீது நடவடிக்கை எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்துள்ள அதிகாரிகள் மீதாவது ஏதும் விசாரணைகள் நடந் ததா என்பதும்கூடத் தெரி யவில்லை.

இந்தச் சம்பவம் மட்டுமல்ல, இவ்வாறான வேறுபல சம்பவங்களைப் பற்றியும் அறிந்து கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இனங்களுக்கிடையில் அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் இனவெறுப்புக் கருத்துக்களை வெளியிடு பவர்கள் மீது தயவு தாட்சண்யமின்றி நவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்குக் கட்டளை பிறப்பித்தார். எனவே இனக் குரோதத்தைக் கிளப்பும் வகையில் பேசுகிறவர்கள் எதிர்காலத்தில் கவனமாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கவேண்டும்.

நாட்டில் நல்லிணக்கத்தைத் தோற்றுவிக்கவும் புரையோடிப் போயிருக்கும் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வொன்றை உருவாக்குவதற்கும் அரசும் அதனோடு இணைந்து செயற் படும் தரப்புகளும் முழுமூச்சில் ஈடுபட்டிருக்கும் வேளையில் அதற்கு ஆப்புவைத்து நாட்டில் மீண்டும் ஒரு கலவரத்தை அல்லது இனங்களுக்கிடையில் மோதல்களை உருவாக்க சிலசக்திகள் முனைந்திருப்பதாகக் கிடைத்துள்ள செய்களே அரசை இப்போது வியப்படையச் செய்துள்ளன. இவை தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள முன் னாள் ஜனாதிபதியும், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கப் பணிமனையின் தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இன மற்றும் சமய அடிப்படையில் குடிமக்கள் மத்தியில் பிரிவினைகளையும் அமைதியின்மையையும் தூண்டிவிடுவதற்கு எத்தனிக்கும் தனிநபர்கள் அல்லது குழுக்கள் மீது கடுமையான நடவடிக்கைகள், தாமதம் காட்டா மல் எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றார்.

சகல தரப்பு மக்களதும் குறைபாடுகளை தீர்த்துவைப்பதற்கு குறுகியகால நடுத்தரகால மற்றும் நீண்டகால அடிப்படையில் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் நாட்டில் வாழும் குடிமக்கள் ஒவ்வொருவரும் பெருமையோடும் சமத்துவமாகவும் வாழ்வதற்கான கௌரவ உணர்வை ஏற்படுத்த முடியும் என்று தெரிவித்துள்ள திருமதி பண்டாரநாயக்க, வெறுப்பூட்டும் உரைகள் இனக்குரோதத்தைத்தூண்டும் செயல்கள் போன்ற பல சம்பவங்கள் குறித்த ஆதாரங்களோடான தகவல்கள் கிடைத்துள்ளன. இவைகள் தொடர்பாக விரைந்து நடவடிக்கைகள் எடுக்கும்படி சட்டத்தை நடைமுறை செய்யும் தரப்பினரை வலியுறுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார். நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பணிமனையின் தலைவர் என்ற முறையில் முன்னாள் ஜனாதிபதி குமாரதுங்கவின் கருத்துக்கு அதிக மதிப்பு இருக்கும் என்று நம்பலாம். எனவே இனங்களுக்கிடையில் வெறுப்பைத்தூண்டும் சக்திகள் விரைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுவோர்கள் என்று எதிர்பார்ப்போம்.



# தேசியத்துவ அலை தலைதூக்கினால் மைத்திரிபால சிரமப்பட நேரும்

சிங்கள மூலம்:
சந்துன் ஜீவன்த (மவ்பிம)
தமிழில் – வி.எஸ்.ரீ

அண்மைய அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஹிலாரி கிளிங்டனே வெற்றியீட்டுவாரென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் நம்பிக்கை கொண்டிருந்தார். அதற்கான முக்கிய காரணமும் ஒன்றிருந்தது. இலங்கையின் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்சவைத் தோல்வியுற வைக்க அமெரிக்காவும் இந்தியாவும் கணிசமான பங்களிப்பை வழங்கியிருந்தன. தமது தாளத்துக்கு ஆடத்தக்க ஒருவரையே ஜனாதிபதிக் கதிரையில் அமர்த்தி வைக்கும் தேவை அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் இருந்தது.

இவ்விரு நாடுகளையும் மகிந்த துரும்பாகக்கூட மதிக்காது செயற்பட்டதால், அவ்விரு நாடுகளும் மகிந்தமீது வைராக்கியம் பாராட்டி வந்தன. இவ்விரு நாடுகளது நிபந்தனைகளுக்குக் கீழ்படியாது, மகிந்த சீனா மற்றும் ரஷ்யாவுடன் நெருக்கமான உறவுகளைப் பேணி வந்தார். இந்தியாவுடன் மேற்கொள்ளவிருந்த 'எட்கா' ஒப்பந்தத்தை மகிந்த கைவிட்டார்.

அதேபோன்று, நாட்டின் வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு சமஷ்டி ஆட்சி முறையிலான தீர்வை வழங்குவதைக்கூட மகிந்த புறம்தள்ளி வைத்தார்.

மகிந்தவின் இத்தயை போக்கு அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. இதனால் மகிந்தவை அதிகாரத்திலிருந்து அகற்ற இந்தியாவும் – அமெரிக்காவும் – ஒபாமாவும் – மோடியும் ஒன்றிணைந்து செயற்பட்டனர்.

அன்று, மகிந்தவைப் பதவியில் இருந்து அகற்றச் சதிசெய்த ஒபாமா தரப்பும் அவரது ஜனநாயகக் கட்சியும் இன்று போக்கிடமற் றுப் போயுள்ளன. ஹிலாரி கிளிங்டன் ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர். ஜனாதிபதித் தேர்தலில் ஹிலாரி கிளிங்டனே வெற்றி பெறுவாரெனப் பலரும் நம்பினர். ஹிலாரியை எதிர்த்துப் போட்டியிட்ட டொனால்ட் ட்ரம்ப் ஒரு பைத்தியக்காரரென விமர்சித்தனர். கடைசியில் ஆச்சரியப்படத்தக்க வகையில் ஹிலாரியைத் தோற்கடித்து ட்ரம்ப் வெற்றிவாகை சூடினார். ட்ரம்பின் வெற்றி, ஜனாதிபதி மைத்திரிபால தரப்பினருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியதென்னவோ உண்மைதான்.

> ட்ரம்ப்பின் வெற்றியால் உலக அரசியல் நிலவரம் தலைகீழாகிப் போயுள்ளது. ட்ரம்ப் காரணமாக உலக அரசியலில் இன்று புதிய அலையொன்று உருவாகியுள்ளது. இந்தத் தேசி யத்துவ அலை பிரித்தானியாவிலிருந்தே முதலில் உருவாகியுள்ளது.

## டொனால்ட் ட்ரம்ப் மகிந்தவை ஒத்தவர்

ட்ரம்ப் மகிந்தவைப் போன்ற இயல்புடையவர். அவர் ஒரு மென்போக்கு அரசியல்வாதியல்லர்; ஒரு தீவிரப் போக்குடையவர். தமது தேர்தல் பரப்புரையின் போதும் தீவிரப் போக்கான கருத்துவெளிப்பாட்டையே ட்ரம்ப் வெளிப்படுத்தினார். அவர் மகிந்தவைப் போன்றே ஒரு இனவாதி. அமெரிக்க இனவாத நிலைப்பாட்டையே ட்ரம்ப் கடைக் கொண்டார். ட்ரம்ப்பின் வெற்றி யால் உலக அரசியல் நிலவரம் தலைகீழாகிப் போயுள்ளது. ட்ரம்ப் காரணமாக உலக அரசியலில் இன்று புதிய அலையொன்று உருவாகியுள்ளது. இந்தத் தேசியத்துவ அலை பிரித்தானியாவிலிருந்தே முதலில் உருவாகியுள்ளது.

ட்ரம்ப் ஜனாதிபதியானதையடுத்து, ஐ.எஸ். தீவிரவாதத் தலைவர்கள் அமெரிக்கர்கள் தமது முடிவை நெருங்கியுள்ளதாகக் கருத்து வெளியிட்டிருந்தனர். மகிந்த ஜனாதிபதியாகத் தெரிவான வேளையில் பிரபாகரன்கூட, சிங்கள மக்கள் தமது முடிவை நெருங்கியுள்ளதாகவே எண்ணினார். ஆனால், விடுதலைப்புலிகள் அமைப்பையும் பிரபாகரனையும் மகிந்தவால் தோற்கடிக்க முடிந்தது. பிரபாகரனைத் தோற்கடிக்க மகிந்தவால் முடிந்தமை போன்று, ஐ.எஸ். தீவிரவாதிகளை ட்ரம்ப்பால் தோற்கடிக்க முடியுமானால், ட்ரம்ப்பின் பெயர் உலக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வாய்ப்புக் கிட்டும். அன்று மகிந்த பயங்கரவாதத்துக்கு எதிராக கையில் எடுத்த தேசியத்தின் பதாகையையே இன்று ட்ரம்ப் தமது கையில் எடுத்துள்ளார்.

## புதிதாகப் பரவியுள்ள தேசியத்துவ அலை

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனை வீட்டுக்கு அனுப்பிய சம்பவத்துடனேயே இந்தப் புதிய அலை ஐரோப்பாவில் பரவ ஆரம்பித்தது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினது பன்னாட்டு நண்பர்களில் இருவரான டேவிட் கமரூன் மற்றும் ஹிலாரி கிளிங்டன் ஆகியோர் இன்று அரசியலில் இருந்து ஓய்வுபெற நேர்ந்துள்ளமை பிரிட்டன் மற்றும் அமெரிக்கப் பொது மக்கள் பயங்கரவாதத்துக்கு எதிராக தேசியத்துவ நிலைப் பாட்டின் மீது நம்பிக்கை வைத்த மையின் காரணமாகவே ஆகும். அது சரி. இந்த தேசி யத்துவ அலை இலங்கையிலும் உருவாக ஆரம்பித்தால் நிலமை என்னவாகும்?

இது இலங்கைக்கு புதிதான ஒன்றல்ல. இது ஏற்கனவே பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் முன்னரே இலங்கையில் நிலவி யிருந்தது. தற்போதைய புதிய அலை மீண்டும் இலங்கையில் தலைதூக்குமானால் டேவிட் கமரூனுக்கும் ஹிலாரி கிளிங்டனுக்கும் ஏற்பட்ட நிலையே ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கும் ஏற்படலாம்.

இன்று சிறிலங்கா பொதுஜன முன்னணி என்ற பெயரில் புதிய கட்சியொன்றை ஆரம்பித்து மகிந்தவும் அரசியல் களத்தில் மீண்டும் இறங்கியுள்ளார். மகிந்தவின் செயற்பாடுகள் காரணமாக பிரிட்டன் மற்றும் அமெரிக்காவில் இடம்பெற்றமை போன்ற நிலை தான் இலங்கையிலும் ஏற்படுமா என்பது குறித்துத் தற்போது எதனையும் கூற இயலாதுள்ளது. அதற்காகப் பொறுமையுடன் காத்திருந்துதான் ஆக வேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ வந்தியத்தேவர்

# பிளவுபடாத நாட்டைத் தீர்மானிக்கப் போவது யார்?

தென்னிலங்கை மக்களின் முழுமையான அங்கீகாரத்துடன் உருவாக்கப்படும் அரசமைப்பே நாட்டில் நிரந்தர அமைதிக்கு வழி வகுக்கும். இனவாதிகளின் நடவடிக்கைகளுக்குச் சாவு மணியடிக்கும் என்பதால் சம்பந்தன் சர்வசன வாக்கெடுப்பு அவசியமானது எனக் குறிப்பிட்டிருக்கலாம்.

புதிய அரசமைப்பின் மூலம், சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் அதனை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையும் வெளிப்பட்டு வருகின்றது. இதற்குச் சர்வசன வாக்கெடுப்பு அவசியமில்லை என்பது அமைச்சர் சம்பிக்க ரணவக்க போன்றவர்களின் கருத்து. சர்வசன வாக்கெடுப்புக்குச் செல்லாமல், பொலிஸ் காணி அதிகாரங்களுடன் பெரும்பான்மை ஆதரவுடன் அரசமைப்புத் திருத்தமே சிறந்த தென்பதும் அமைச்சர் டிலான் பெரேராவின் கூற்றாகும். அதாவது சர்வசன வாக்கெடுப்புக்குச் செல்லாமல் புதிய அரசமைப்பை நிறைவேற்ற வேண்டும்என்பதுஅரசின்நோக்கம்போலும். எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் அரசமைப்புத் தொடர்பாக சர்வசன வாக்கெடுப்புத் தேவை எனக் குறிப்பிட்டுள்ளார். தென்னிலங்கை மக்களின் முழுமையான அங்கீகாரத்துடன் உருவாக்கப்படும் அரசமைப்பே நாட்டில் நிரந்தர அமைதிக்கு வழி வகுக்கும். இனவாதிகளின் நடவடிக்கைகளுக்குச் சாவுமணியடிக்கும் என்பதால் சம்பந்தன் சர்வசன வாக்கெடுப்பு அவசியமானது எனக்குறிப்பிட்டிருக்கலாம். நீண்டகாலப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு தேவையெனில் இது தவிர்க்க முடியாதது கூட.


**பொது வாக்கெடுப்புக் குறித்த அரச தரப்பின் அச்சம்**

புதிய அரசமைப்பு, பொதுவாக்கெடுப்புக்குக் கொண்டு செல்லப்படும் பட்சத்தில் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அதியுச்ச அதிகாரப் பகிர்வை வழங்க இயலாது போகலாம் என்பதும் அரச தரப்பின் வாதமாக இருக்கலாம். புதிய அரசமைப்பைத் தடுப்பதற்கும்- குழப்பியடிப்பதற்கும் இனவாத பிக்குகளைத் தூண்டி விடுவதிலும் அரசுக்கு எதிரான சக்திகள் முயற்சிப்பதாகவும் தெரிகின்றது. அத்துடன் இராணுவப் புரட்சியையும் நாடு சந்திக்கவேண்டி வரும் என்ற அச்சுறுத்தல்களையும் தினேஷ் குணவர்த்தன போன்ற இனவாதிகள் வெளிப்படுத்தியுள்ளனர். புதிய அரசமைப்பைத் தடுத்து சிறுபான்மைத் தமிழ்மக்களை நெருக்கடிக்குள் தொடர விடுவதே குழப்பவாதிகளின் நோக்கமாகும். இதனால் தென்பகுதி மக்கள் ஒரு நியாயமான தீர்வை வழங்க முன்வருவார்களா என்பதும் கேள்விக்குறியே.

போரின் வடு எப்படி இருக்கும் என்பதை மக்களால் தற்போது உணர முடிவதால், பொது வாக்கெடுப்பின் மூலம் சரியான தீர்வு எட்டப்படும் என்று எதிர்க்கட்சித்தலைவர் தனது கருத்தை வெளியிட்டுள்ளதை எதிர்பார்க்கலாம். பொது வாக்கெடுப்பினாலோ அல்லது மூன்றில் இரண்டு பெரும்பான்மையினாலோ எதுவாக இருந்தாலும், நாட்டை மீண்டும் ஒரு போருக்கு இழுத்துச் செல்லாத நிலையை உருவாக்கும் பொறுப்பும் கடமையும் அரசுக்கு மட்டுமன்றி அனைத்து சமூகங்களுக்குமே உண்டு. அரசமைப்பு விடயத்தில் இந்தக் கடமையை வலியுறுத்துவது அவசியமாகும். கடந்த காலத்தில், இனரீதியில் இடம்பெற்ற போராட்டங்களால் செக்லோவாக்கியா, கிழக்கு திமோர் சேர்பியா, கொசோவா, பொஸ்னியா, எரித்திரியா, தென்சூடான் போன்ற நாடுகள் புதிதாக மலர்ந்துள்ளன. இவற்றில் சில நாடுகள் அமைதி வழியிலும், தென்சூடான் போன்ற நாடுகள் உள்நாட்டுப் போர் காரணங்களாலும் பிளவுபட்டிருந்தன. பிளவுபடாத நாட்டை உருவாக்குவதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நல்லாட்சியின் குறிக்கோளாகக் காணப்படுகின்றது. அதற்கான அடிப்படையே புதிய அரசமைப்பாகும்.


**புதிய அரசமைப்புக்கு எதிர்ப்பு வெளியிடும் தரப்புக்கள்**

எதிரணியினரும் சில பிக்குமாரும் நாட்டைத் தூண்டாட முயற்சிக்கும் சூழ்ச்சி நடவடிக்கையாகவே வரப்போகும் அரசியல் யாப்புக்கு எதிரான பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



நீதி மற்றும் சம உரிமைகளை அடிப் படையாகக் கொண்டு பிளவுபடாத ஒன்றிணைந்த நாட்டுக்குள், நிரந்தர சமாதானத்தையும் நல்லிணக்கத் தையும் ஏற்படுத்தும் விடயத்தில் தொடர்ந்தும் தமது ஆதரவு இருக்கும் என்பதை புதிய ஐ.நா.செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டெரெஸுக்கு அனுப்பிய கடிதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். இதன்மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபடாத ஒரு நாட்டின் உருவாக்கத்துக்கு இறங்கி வந்துள்ளது. அதாவது 1976 ஆம் ஆண்டின் வட்டுக் கோட்டைத் தீர்மானத்தில் விட்டுக் கொடுப்பைச் செய்துள்ளது. அதே போன்று இனவாதத்தில் இருந்து சிறிது விலகி தென்னிலங்கையின் இரு பிரதான அரசியல் கட்சிகளும் இணைந்து தேசிய அரசொன்றின் மூலம் பிளவுபடாத நாட்டை உருவாக்க புதிய அரசியல் யாப்பை முன்வைக்கவுள்ளன. பிளவுபடாத நாட்டைத் தீர்மானிக்கப்போவது பொது மக்களா? அரசியல் வாதிகளா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாசகர் திருமுகம்

### திருமுறைகளை முறையாக ஓதுவோம்

இந்தத் தலைப்பில் 20.11.2016 உதயன் வாசகர் திருமுகத்தில் வெளியான வேண்டுதலை எழுதிய பன்னாலை ச.ஏழூர்நாயகத்தின் ஆதங்கம் நியாயமானதே. ஆயினும் இங்கு கூறப்படும் விடயங்களும் சற்று குழப்பமாகவே உள்ளன.

தேவார, புராணங்கள் அனைத்தும் இறையருள் பெற்ற அனுபூதிமான்களால் பாடப்பெற்று அது எவர் மீது பாடப்பட்டதோ அவராலேயே அங்கீகரிக்கப்பட்டு இதுவரை ஓதப்பட்டு வருகின்றன. எனவே இறையருள் பெற்றவர்களால் பாடப்பட்டு இறை அங்கீ காரம்பெற்ற பாடல்களில் எழுத்துக்களோ சொற்களோ கூட்டி யும் குறைத்தும் அல்லது மாற்றியோ பாடுவதால் நாம் அதற்கான பயனைப் பெறுவதிலும் பதிலான பாவத்தையே ஈட்டிக் கொள்கிறோம் என ஆன்றோர்கள் கூறியுள்ளார்கள். எனவே பஞ்சபுராணங்களில் மாற்றம் செய்து ஓதுதல் குற்றமா கும். இது அறியாமற் செய்யும் போது இறைமன்னிப்புண்டு. ஆனால் வேண்டுமென்று செய்யும் போது குற்றங்கள் அதிகரிக்கின்றன. ஏனெனில் இவர்கள் மேற்கொள்ளும் மாற்றத்தையே பிற்காலச் சந்ததி கடைப்பிடிக்கும். எனவே பஞ்சபுராணங்களில் மாற்றம் செய்வதற்கு எவருக்கும் உரிமையில்லை என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். தாம் பிழையாகப் பாடிக் கொண்டு அதுவே சரியான முறை என மற்றவர்களுக்குப் போதிப்பது மகாபாவமாகும்.

இங்கு காட்டப்பட்ட பாடல்களின் சரியான வடிவம் தெளிவற்றதாகவே காணப்படுகிறது. பாடல் வரிகளில் ஓசை நயத்துக்காகச் சில சொற்கள், சில சொற்களின் முன்னும் பின்னுமுள்ள சொற்களுடன் சேர்த்து உச்சரிக்கப்படுகிறது. இங்கு கருத்து வேறுபடாது ஓசை நயத்தைக் கவனிக்க வேண்டும். ஆனாலும் எழுத்துக்களை மாற்றம் செய்யக் கூடாது.

"உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" என்பதும் "ஓதுதற்கரியவன்" என்பதும் கருத்தில் முரண்பாடில்லையாயினும், எழுத்துக்கூட்டி இருப்பது தவறாகும். இன்னும் உலகெலாமுணர்ந்தோதற்கரியவன் என்பதே சரியான வடிவமாகும்.

சொற்களைப் பிரித்து பாடலின் கருத்தை விளங்குவதே ஒழிய பாடலை அப்படியே பாடவேண்டும் என்பதே விதி. தேவாரங்களைத் தங்கள் இஷ்டம் போல் பாடுபவர்களின் கவனத்துக்கு இது சமர்ப்பணம்.

*ஆ.த.குணத்திலகம் ஜே.பி.*
*ஓய்வு நிலை ஆசிரியர்*
*சில்லாலை.*

# வரலாற்றில் இன்றைய தினம்

1821 - பனாமா சுதந்திர தினம் இன்றாகும். ஸ்பெயினிடமிருந்து பிரிந்து கிரான் கொலம்பி யாவுடன் பனாமா இணைந்து கொண்டது.
1893 - தேசிய தேர்தல் ஒன்றில் பெண்கள் வாக்களித்த முதலாவது நாடாகியது நியூசிலாந்து.
1895 - முதலாவது அமெரிக்க கார்ப் பந்தய ஓட்டப்போட்டி நடைபெற்றது. இலியானோய் பிராங் டுரியா வெற்றி பெற்றார்.
1908 - பெனிசில்வேனியா மரியன்னாவில் சுரங்க வெடி விபத்தில் ஒரே ஒருவர் தப்பிக் கொள்ள மீதி 154 ஆண்கள் உயிரிழந்தனர்.
1912 - ஒட்டமான் பேரரசிலிருந்து சுதந்திரமடைந்ததாக அல்பேனியா பிரகடனப்படுத்தியது.
1942 - பொஸ்டன் மசாசூட்ஸ் கோக்கனட் குறூங் இரவு விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 492 பேர் உயிரிழந்தனர்.
1966 - புரூண்டியில் மைக்கல் மைக்கொம்பரோவால் முடியரசு அகற்றப்பட்டு அவரே ஜனாதிபதியானார்.
1971 - ஜோர்தான் பிரதமர் வஸ்வி அல் தல் பலஸ்தீன விடுதலை ஸ்தாபன கறுப்பு செப்ரெம்பர் பிரிவினரால் படுகொலை செய்யப்பட்டார்.
1975 - போர்த்துக்கல்லிடமிருந்து கிழக்கு திமோர் சுதந்திரமடைந்தது.
1987 - தென் ஆபிரிக்க விமான சேவைக்குரிய விமானம் 295 இந்து சமுத்திரத்தில் விபத்துக்குள்ளாகி மூழ்கியதில் அதிலிருந்த 159 பேர் உயிரிழந்தனர்.
1988 - வடக்கு கிழக்கு முதலமைச்சராக வரதராஜப் பெருமாள் தெரிவானார். டிசெம்பர் 5 முதல் மாகாண சபை இயங்கும்; தலைநகராக திருகோண மலை என அறிவிப்பு.
- வட்டக்கச்சி புதுக்காட்டில் காட்டுக்குச் சென்ற 5 பேர் கண்ணியில் சிக்கி உயிரிழப்பு.
1991 - ஜோர்ஜியாவிலிருந்து தென் ஒஸ்ஷேவியா சுதந்திரமடைந்ததாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.
1992 - நீதியான தீர்வு ஏற்படுவதை வைத்து அரசியல் லாபம் தேட மாட்டோமென வவுனியாவில் பிரேமதாசா உரை.
- அராலி நோக்கி எறிகணைத் தாக்குதல் சுழிபுரத்தில் சேதம்.
1996 - வடக்குத் தேர்தல்கள் குறித்து தமிழ்க் கட்சிகள் முடிவில்லை. உடன் தீர் மானிக்க முடியாத நிலை.
- மகாத்மா காந்தியின் அஸ்தியை பேரனிடம் ஒப்படைக்க உத்தரவு.
2006 - போர் நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்க புலிககள் தயாரென கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் தெரிவிப்பு.
- ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழருக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். இதுவே இந்தியாவின் நிலைப்பாடென மகிந்தவுக்குத் தெரிவிப்பு.

அச்சமே எமக்குத் துயரத்தைத் தருகின்றது. அச்சமே கேட்டை விளைவிப்பது. அச்சமே சாவைத் தருவது. எமது உண்மை இயல்பை நாம் அறிந்து கொள்ளாமல் இருப்பதனால்தான் எமக்கு அச்சம் ஏற்படுகின்றது.


சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற் கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது **361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

# மன்னனை ஏமாற்றிய சிற்றரசர்கள்

மன்னன் மகிபாலனுக்கு பல சிற்றரசர்கள் திறை செலுத்த வேண்டியிருந்தது. அவர்களிடம் நல்ல நட்புறவு கொண்டதால் திறையை வாங்காமல் நண்பனைப்போல் பழகினான். அந்தச் சிற்றரசர்கள் எமக்கு உற்ற துணையெனக் கருதி முழுமையாக நம்பியிருந்தான்.

பல சிற்றரசர்களின் துணை இருக்கும் போது, நாம் வெற்றி கொள்வதில் ஐயமில்லை என்னும் எண்ணத்தால், அந்த மன்னன் வேற்றரசன் ஒருவனோடு பகை கொண்டு போர் தொடங்கினான்.

அவ்வேற்றரசன் மிகவும் வலிமை மிக்கவனாக இருந்தான். அவனுடைய படை எதிர்க்கும் ஆற்றல் உடையதாக இருந்தது. இரு பக்கத்துப் படைகளும் கை கலந்து கடும்போர் தொடங்கின. வேற்றரசன் படை, ஆற்றல் மிகக்கொண்டு தாக்கியது. சிற்றரசர்களின் படை அஞ்சி நடுங்கியது. சிற்றரசர்கள் பலரும் பேந்தப் பேந்த விழித்தனர். தம் உயிரை எப்படியேனும் காப்பாற்றிக் கொண்டால் போதுமென்று முடிவு செய்தனர்; உடனே தத்தம் படையோடு மூலைக்கொருவராக அஞ்சியோடி விட்டனர்.



சிற்றரசர்கள் அனைவரும் ஓடி விடவே, அவர்களை முழுமையாக நம்பியிருந்த மன்னன் தனித்தவனானான். அவனுடைய படையும் சிறியதுதான். ஆகையால் அம்மன்னனால் நீண்டநேரம் எதிர்த்து நிற்க முடியவில்லை.

வேற்றரசன் மிக விரைவில் அம்மன்னனைச் சிறைபிடித்து விட்டான்.

பகைவர்கள் கையில் சிக்கிய மன்னன் மிகவும் வருந்தினான். "ஐயோ! சமயத்தில் தக்கவாறு உதவி செய்யாதவர்களை நம்பிக் கெட்டோமே! நாம் மட்டும் தனித்திருந்தாலும், இந்தப் போர் ஏற்படாமல் முதலிலேயே தடுத்திருக்கலாமே! என்று பலவாறு வருந்தினான்.


அவ்வாறு வருந்திய மன்னன், வேற்றரசனோடு ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டு விடுதலையடைந்தான்.

மன்னன் விடுதலையடைந்த பின், அந்தச் சிற்றரசர்கள் மன்னனைக் காண்பதற்காக வந்தனர்.

மன்னன் அந்தச் சிற்றரசர்களைக் கண்டதும், "உங்களை நம்பியதால் நான் துன்பத்துக்கும் இழிவுக்கும் ஆளானேன். போர்க்களத்தில் உதவி செய்யாமல் தலைவனை விட்டுவிட்டு ஓடிப்போகும், கல்வியற்ற குதிரையைப் போன்றவர்கள் நீங்கள். உங்கள் உறவு எனக்கு வேண்டாம். வழக்கம்போல் நீங்கள் திறைப் பொருளை முறைப்படி செலுத்திக் கொண்டு தொலைவிலேயே இருங்கள்..." என்று இடித்துரைத்தான்.


களத்தில் கைவிட்டோடிய அந்தச் சிற்றரசர்கள், நாணம் அடைந்து திரும்பிச் சென்றனர்.

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....




## பூனை அண்ணா

எங்கள் வீட்டுப் பூனை
இருட்டில் உருட்டும் பூனை
அங்கும் இங்கும் தேடும்
ஆளைக் கண்டால் ஓடும்
தாவி எலியைப் பிடிக்கும்
தயிரை ஏறிக் குடிக்கும்
நாவால் முகத்தை நக்கும்
நாற்காலியின் கீழே படுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்சத்திரப் பலன்கள்

**மகம் நட்சத்திரப் பலன்கள்**

நவக்கிரகங்களில் சுபக் கிரகமான அசுரர்களுக்கு எல்லாம் குலகுருவான சுக்கிரபகவான் பிறந்த நட்சத்திரம் இது. இந்த நட்சத்திரத்தின் அதிபதிக் கிரகம் கேது ஆகும். இதில் பிறந்தவர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் இருப் பார்கள். மற்றவர்களால் விரும்பப்படும் இவர்கள் கலைத்துறையில், எழுது வதில் ஆர்வமும் உற்சாகமும் உடையவர்கள். நல்ல வசதியுடனும் செல்வாக்குடனும் விளங்குவார்கள். ஆடை ஆபரண பொருள்கள் சேர்ப்பதில் உற்சாகம் உடையவர்கள். சுயநலவாதிகளான இவர்கள் பெருந்தன்மையும், இரக்க குணமும் உடையவர்கள் மற்றவர்களை அடக்கி ஆளும் தன்மை உடையவர்கள்.

**மகம் : 1ஆம் பாதம்**

வாக்குச் சாதுரியத்தால் இவர்கள் மற்றவர்களைத் தன்பால் ஈர்த்து விடுவதில் விருப்பம் உடையவர்கள். மிகப் பெரிய விடயங்களை மிகச் சுலபமாகக் கையாள்வார்கள். பிறருக்குத் தீங்கு செய்யும் எண்ணம் இல்லாதவர்கள். தங்களுடைய திறமையைத் தாங்களே அறியாதவர்கள். அதிகமான பேராசை உடையவர்கள்.

**மகம் : 2ஆம் பாதம்**

தெய்வபக்தி நிறைந்த இவர்கள் எவ்வளவு கஷ்டம் வந்தாலும் தாங்கும் இதயம் உடையவர்கள். நன்றாகச் செலவு செய்வார்கள். தவிர்க்க முடியாத காரணத்தால் தீய செயல்களில் ஈடுபடுவார்கள். காது கேளாத தன்மை அல்லது கண்பார்வை குறைபாடு ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. மற்றவர்களுடன் நெருங்கிப் பழகமாட்டார்கள்.

**மகம் : 3ஆம் பாதம்**

பிடிவாத குணமும், முரட்டு சுபாவமும் உடையவர்கள், பிறர் சொல்லும் சூட்சமத்தைப் புரிந்து நடப்பர். நல்ல புத்தி கூர்மையுள்ள இவர்கள் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருப்பர். சிறுவயதில் பல கஷ்டங்களை அனுபவிக்கும் இவர்கள் வளர வளர சகல சந்தோங்களையும் அடைந்து வாழ்வர்.

**மகம் : 4ம் பாதம்**

முன் கோபம் உடையவர்கள் பிறர் கஷ்டத்தை அறியாதவர்கள் கெட்ட நடத்தை உள்ளவர்கள் பெண்களால் அவமானப்பட நேரிடும் மனைவியிடம் கோபம் உள்ளவர்களாக இருப்பார்கள். தெய்வ அனுகூல, உள்ள இவர்கள் பிறரிடம் தேவை இல்லாமல் சண்டையிடுவர். தோல் வியாதியால் அவதியுறுவர்.

## நாளை

**கார்த்திகை-14**

செவ்வாய்க்கிழமை -28.11.2016

திதி: அமாவாசை பி.ப.06.02

நட்சத்திரம்: அனுசம் பி.இ.12.34

ராகுகாலம்:03.13-04.43 வரை

சுபநேரம்:10.[illegible] வரை

அமாவாசை விரதம்

# விடுதலையின் உறுதி!

## அறுபத்தியிரண்டின் எதிரொலியாய் இருபத்தியாறு.! சிந்தித்தபடி நித்தமும் செயலாற்றுங்கள்!

அழகான மழையுதிர்காலம் கார்த்திகை.எங்கும் மஞ்சள் சிவப்பாய் அன்பின் வண்ணங்களைச் சூடிய படி காந்தள் மலர்களின் ஒத்திகை.நீள் துயில்வின் விழிப்பாய் சுடர்விடும் ஒளியின் மிளிர்கை.தென்றலோடு ஆர்ப்பரிக்கும் பாக்களின் இடைவிடாத இசையின் அளிக்கை. நெஞ்சங்கள் படபடக்க ஆன்மங்கள் எழுந் தருளும் கோலமாய் ஒப்பில்லாத கண்ணீர் மழையின் பொழிகை.தேசம் எங்குமாய் உறவுகளின் கூடுகை. இத்தனையும் விடுதலையின் வரலாற்றுப் படிகளாய் எம்மோடு-எம்மூடு பயணப்படுகின்றது.வீர தீரங்களாய் அழிவுகளைச் சுட்டெரித்த தீயிடலாய் எப்போதுமாய் பொருள் கூறப்பட்டுக் கொண்டேயிருக்கிறது.தமிழ்ச் சமூக விடுதலையின் இலக்கணமாக உவமான உவமேயங்கள் கடந்த உச்சமாக, சிந்தனையின் எச்சமாக உயர்வு பெற்றிருக்கின்றது.

இதனிடையாய் காலங்கள் கரைந்து கொள்கிறது.நீண்ட வழித்தடங்களின் போக்கை ஞாபகங்களின் உள்ளாய் நிஜத்தின் வெளியாய் திரையிட்டுச் செல்கிறது. அந்த வகையிலே தமிழினத்தின் உரிமை விடியல் என்ற உன்னத இலக்கின் அடைதலுக்கான உறுதியின் பற்றுதல் நகர்வுகள் என்றும் மறந்து போகவோ மரித்துப்போகவோ முடியாதவை. கலை,கலாசாரம்,ஒழுக்க விழுமியங்கள்,தனித்துவமான தமிழ்த் தாய் மொழியின் சிறப்பு,பொருண்மிய மேம்பாட்டின் குறிகாட்டிகள்,நீதி செய்தலின் காப்பகங்கள்,காவல்பணியின் தீட்சிதங்கள் இவை அத்தனையையும் கடந்துமாய் தாய் மண் பற்றுதியின் மையமாய் காத்து இரட்சித்து நின்ற முப்படைகளின் பரிமாணம்.அதன் மொத்த உருவமாய் வானுயர்ந்து நின்ற கரிகாலத் தம்பி என்ற தலைமகனின் திருவுருவம் என்றென்றும் விழித்திரைய கன்று போகாதவை. எதிரியின் விழி பிதுங்க தலை சாய்ந்திடாத செயலுருவானவை.!

இந்தச். சந்தர்ப்பத்திலே போர் முடிவுற்றதன் பின்பான ஆறாண்டு ஒழிவினுள் அரசு என்று வரையறை கொள்ளப்படுகின்ற பொறிமுறைகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழர்களுக்கான தீர்வை நாட முன்வரவில்லை.மூன்று தசாப்தகாலங்கள் சுமந்திருந்த மாட்சிமை பொருந்திய வேட்கை என்பது சிறைப்பட்டிருக்கின்றது. இழைக்கப்பட்டதான குற்றங்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லை.வெறுமனே காலத்திற்குக். காலம் ஆட்சியில் அமர்ந்து கொள்ளுகின்ற பெரும்பான்மையினம் என்பதான முகமாற்றங்களின் சுழற்சி என்பது செயலூட்டமற்ற வறட்சியாக தமிழ் மக்களோடு தொடர்புறுகிறது.




இலங்கைத் திருநாட்டின் வடக்காயும் கிழக்காயும் பூர்வீகம் கொண்டுள்ள ஒரு தனித்துவ இனமான தமிழ்க் குடிகளுக்கு நல் விடியலின் மொழிவுதரல் என்பது வேறுபட்ட திசை காட்டிகளை நம்பியிருக்கிறது. அவை அகிம்சை,ஆயுதம் என்ற பரிணாமங்கள் தாண்டி தற்போது வாக்குரிமையின் நடைமுறைத் தொனிப்பாக ஜனநாயகப் பண்பின் வேகமற்ற தொனிப்பாக அசைந்திருக்கிறது, அமைந்திருக்கிறது.இந்த அசைவுகளுக்கு உற்சாகமான திட்டமிடலும் செயல் முனைவான கூட்டிணைவும் தேவைப்படுகின்றது. விறுவிறுப்பான வார்த்தைகள் களைந்த சுறுசுறுப்பான இலக்கு நிர்ணயப் பாய்ச்சலின் இடைவிலகலற்ற பங்காற்றல் வேண்டப்படுகிறது. உரிமை என்ற உயர்வை அடைய வேண்டுமெனில் நடந்து வந்த பாதைகளின் மீள்பார்வையும் அவற்றின் உள்ளாய் கருத்துக்களை எடுத்தியம்புகின்ற பக்கங்களின் வாசிப்பையும் மிகைப்படுத்திக் கொள்ள வேண்டும்!

ஆக,ஒரு புரட்சியின் வித்தகமான தானைத் தமிழனின் நாமங்களும் அவன் ஆயுளின் அதிப்படுத்தலும் உச்சரிக்கப் பட்டும் ஞாபகம் கொள்ளப்பட்டும் விட்டது.ஆயிரம் ஆயிரம் உயிர் தியாகங்களின் ஓவியம் மனத் திரைகளிடை வரைந்துகொள்ளப்பட்ட நிகழ்வுகளின் தருணங்களும் நகர்ந்துவிட்டன. இருந்த போதும் தமிழினம் எதிர்கொண்ட, எதிர்வுகூறுகின்ற துன்பங்கள் அழிந்துபோகவில்லை. வெற்றி என்ற இலக்கிற்கான செயல் உறுதியோடு நகர்வுற வேண்டிய கணப்பொழுதுகளை உச்சரித்து ஓய்கிறது. அறுபத்தியிரண்டின் எதிரொலியாய் இருபத்தியாறு தமிழர் எதிர்காலத்தின் நிலைத்திருப்பை ஜனநாயகப் பண்பின் செயல்வடிவங்களிடம் விடுதலையின் உறுதியாய் நம்பிக்கையோடு ஒப்புவிக்கிறது. சிந்தித்தபடி நித்தமும் செயலாற்றுங்கள்.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# பெண்மையும் சமூகமும்


**பெண்ணோ – ஆணோ வளர்க்கப்படும் போது அவரவர் கடமைகளைச் செய்ய வேண்டும் என்ற முறையில் அறிவூட்டி வளர்க்கப்படுதல் வேண்டும். அன்றாடத் தேவைகளை நிறைவேற்ற ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற பங்களிப்புக்களைச் செய்து பழக்கப்படுவார்களேயானால் சமூக கட்டமைப்பைத் திறம்பட இயங்க வைக்க முடியும். எந்த வேலையையும் ஆணாலும் செய்ய முடியும் பெண்ணாலும் செய்ய முடியும் என்ற மனப்பாக்குவத்தை சிறுவயதிலிருந்தே பழக்கப்படுத்தி வருவார்களேயானால் சமூகக் கட்டமைப்பைத் திறம்பட இயங்கவைக்க முடியும்.**

தெல்லியூர்த்தேவி

மங்கையராய் பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டுமம்மா" என மகாகவி பாரதியாரும் "உலகம் எனும் ஓவியம் பெண்ணினால் எழில் பெறுகிறது" என உலக மகா கவி அல்லா மா இக்பாலும் "இல்லாள் இல்லத்திருக்க இல்லாதது ஒன்றுமில்லை" எனவும் எனவும் பெண்ணின் பெருமையைப் பெருமையுடன் சிறப்பித்துக் காட்டியுள்ளார்கள்.

இத்தகைய சிறப்புக்கள் மட்டுமல்ல முக்கியத்துவமும் பெற்ற பெண்ணானவள் இந்த விஞ்ஞான தொழில்நுட்ப உலகிலே எத்தனையோ துன்பங்களுக்கும் மிரட்டல்களுக்கும் வன்புணர்வுகளுக்கும் ஆளாகிறாள். சில வேளைகளில் கொலையும் செய்யப்படுகிறாள் என்றால் இதற்கு காரணகர்த்தாக்கள் யாராக இருக்கலாம்? இன்று பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முதலாவது காரணமாகத் திகழ்வது விழிப்புணர்வு இன்மையே என்றால் மிகையாகாது. அதாவது பெண்ணோ - ஆணோ வளர்க்கப்படும்போது அவரவர் கடமைகளைச் செய்ய வேண்டும் என்ற முறையில் அறிவூட்டி வளர்க்கப்படுதல்வேண்டும். அன்றாடத் தேவைகளை நிறைவேற்ற ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற பங்களிப்புக்களைச் செய்து பழக்கப்படுவார்களேயானால் சமூக கட்டமைப்பைத் திறம்பட இயங்க வைக்க முடியும். எந்த வேலையையும் ஆணாலும் செய்ய முடியும் பெண்ணாலும் செய்ய முடியும் என்ற மனப்பக்குவத்தை சிறுவயதிலிருந்தே பழக்கப்படுத்தி வருவார்களேயானால் சமூகக் கட்டமைப்பைத் திறம்பட இயங்க வைக்கமுடியும்.

மேலும் நாங்கள் தேர்ந்தெடுக்கின்ற வழிமுறைகள் சரியானவைதானா? இதன் மூலம் சரியான பெறுபேறுகள் பெற முடியுமா? என்ற சிந்தனை மூலம் தவறுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். இன்று ஒரு சிறுமியைத் தனியே வீட்டில் விட்டுச் செல்கிறார்கள் என்றால், சிறுமி மேல் தப்பில்லை. அவளை விட்டுச் செல்பவர்கள் மேல்தான் தப்பு. அந்தச் சிறுமிக்குத் தனிமையில் எப்படியான ஆபத்துக்கள் வரலாம் என்ற விழிப்புணர்வு வழங்கப்படாதவிடத்து அவரைத் தங்களுடன் அழைத்துச் செல்லலாம் அல்லது அயல்வீட்டில் உள்ளவர்களுடன் அவரைப் பாதுகாப்பாக விட்டுச் செல்லலாம். இத்தகைய விழிப்புணர்வுடன் வாழ்வதற்கு வேண்டிய ஆக்கபூர்வமான அறிவூட்டல் தேவைப்படுகிறது.



அடுத்ததாக வன்புணர்வு என்பது தற்போது மிக மலிந்து காணப்படுவதற்கான காரணங்களை ஆராயுமிடத்து முதல் நிலையில் தோன்றுவது விரோதம். ஏதோ ஒரு நிலையில் விரோதம் தலையெடுக்குமிடத்து ஒருகை பார்த்துவிட வேண்டும் என்ற வக்கிர புத்தி தலை தூக்குவதைக் காணமுடிகிறது. இந்த விரோதத்தை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். எவரோடும் பகை கொள்ளா வாழ்வைத் தா என்பது ஒரு பாடலடி. பகைக்க வருபவர்களையும் அவர்களுக் கான பகைக்குரிய காரணங்களையும் கண்டறிந்து அவற்றை முற்றாக நீக்க முயல வேண்டும். இல்லையேல் பகையை வளரவிடாது பார்த்து விலகி நடத்தல் மூலம் இரு பகுதியினருமே சீராக வாழக்கூடியதாக இருக்கும். வன்புணர்வுக்கு ஆளானவரும் ஆளாக்குபவரும் வாழ்வில் ஏற்படப்போகும் துன்பங்களை முன்கூட்டியே உணர்வார்களேயானால் அவற்றிலிருந்து விலகுவதற்கான முன்னேற்பாடுகளை முன்னிறுத்தி அவலங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

வன்புணர்வு அதற்குப்பின்னான கொலை அவற்றைச் செய்தவர்களை அந்தப்பாவம் சும்மா விடப்போவதில்லை. செல்வாக்கைப் பயன்படுத்தி தண்டனையிலிருந்து தப்பித்து விடலாம். ஆனால் அந்தப்பாவத்துக்கான முழுப்பயனையும் செய்தவர் அனுபவிக்கும்போது தெரியும் வன்புணர்வுக்கு ஆளாகியவள் எவ்வாறு வேதனைப்பட்டாள் - துன்பப்பட்டாள் என்பது. சட்டங்களில் உள்ள ஓட்டைகளுக்குள்ளால் தப்பிவிட்டோம் என்றாலும், தர்மத்தின் பிடியிலிருந்து தப்பவே முடியாது என்பது நியதி.

அது மாத்திரமன்றி தங்களுக்கும் குடும்பம், தாய், சகோதரி, பிள்ளைகள் என்று உள்ளார்கள். அவர்களுக்கு இப்படியான நிலை ஏற்பட்டால் என்ன செய்வார்கள். அவர்கள் பாதிக்கப்படுவதால் தங்களுக்கு ஏற்படும் வேதனையைத்தாங்குவார்களா என்ற சிந்தனை எழ வேண்டும். தனக்கொரு நீதி மற்ற வர்களுக்கு ஒரு நீதி என்றில்லாமல் எல்லோரும் மனிதர்கள் என்ற எண்ணம் எழ வேண்டும்.

மேலும் கூட்டு வன்புணர்வு என்பது மிருகங்களால் கூட மேற்கொள்ளப்படாத ஓர் அநாகரிக அருவருப்புமிக்க செயல். இதனால் ஏற்படப்போகும் நோய்கள் பற்றி அறியாதவர்களா இவர்கள். அது மட்டுமன்றி இவர்களது வாழ்க்கைத் தராதரம் மனித மதிப்பீடு சுய கௌரவம் போன்ற எல்லாவற்றையுமே இழந்து விடுகிறார்கள் என்பதைக் கூட ஒரு கணம் சிந்திக்கத் தவறுகிறார்களே.

இறுதியாகப் பிரச்சினைகள் வராமல் நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வதற்கான பின்வரும் வழிகளை அமைத்து, அவற்றைப் பின்பற்றி வாழமுற்படுதல் வேண்டும்.

முதலாவதாக ஆணோ பெண்ணோ தனி மையில் எந்தச்சந்தர்ப்பத்திலும் வாழ முற்படக் கூடாது.

இரண்டாவதாக பிரச்சினைக்கு ஆளாகாதவாறு வாழ்வதற்கு அறிவூட்டப்பட்டு சிந்தனை விழிப்புணர்வு ஏற்பட வேண்டும்.

மூன்றாவதாக எந்தச் சந்தர்ப்பத்திலும் வாக்குவாதங்களைத் தவிர்த்து யாருடனும் பகை கொள்ளாது வாழப் பழகுதல்? நான்காவதாக மானிடராய்ப் பிறந்த அனைவருக்கும் சமஉரிமை, சம சந்தர்ப்பங்கள் உள்ளன என்பதை உணர்ந்து நடத்தல்.

ஐந்தாவதாக முடிந்தவரை நேர்மையாக உழைத்து தன்கையே தனக்கு உதவி என்று வாழப்பழகுதல்.

ஆறாவதாக இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்ற முதுமொழிக்கு அமைய பிள்ளைகள் கல்வியிலே ஆர்வமும் ஊக்கமும் உடையவர்களாக விளங்குவதற்கு கல்வியைக் கற்றல் வேண்டும். ஏழாவதாககூட்டுக்குடும்ப முறையில் நெறி தவறாது வாழ்தல்.

எட்டாவதாக வன்முறைக்கு தூபமிடாது இறைவனால் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட அழகுடன் அன்பு, பாசம், பரிவு, பகிர்ந்துண்ணல்,மானங்காக்கும்உடையுடன்வாழப்பழகுதல்.

ஒன்பதாவதாக கற்ககசறட கற்பவை கற்றபின் நிற்க அதற்கு தக" என்ற வள்ளுவனார் வாய்மொழிப்படி கல்வியை ஐயம் திரிபறக் கற்று அதன்படி வாழ்வோமானால் எந்த வித துன்பங்களுக்கும் இடமிருக்காது. துரதிர்ஷ்டவசமாக கல்வியறிவு கிடைக்கப் பெறாதவர்கள்கூட கேள்விஞானம், கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களைக்கடைப்பிடித்துவாழ்ந்து நல்ல சமூக சூழலைக் கட்டியெழுப்பி, நல்வாழ்வு வாழ்ந்தவராகி தெய்வத்தை அடைய முடியும் என்ற வள்ளுவரின்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"
என்ற வாக்கை மெய்ப்பிப்போமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனைக்கு மதிப்பளித்தால் பணநிலை உயரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி திருப்திகரமாக இருக்கும். கொடுக்கல், வாங்கலில் முன்னேற்றம் ஏற்படும். புத்தாடை, நகை வாங்குவர்.

**இடபம்:** திட்டமிட்ட பணிகளை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரம் புதிய வாடிக்கையாளர்களின் ஆதரவில் முன்னேற்றம் பெறும். ஆதாய பணவரவு உண்டு. வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**மிதுனம்:** சில நிகழ்ச்சிகள் வருத்தம் தந்தாலும், குடும்பத்தினர் தரும் ஆதரவு ஆறுதல் தரும். தொழில், வியாபார இலக்கை எட்டிப்பிடித்து லாபம் பெறுவீர்கள். முக்கிய செலவுக்குக் கடன் வாங்க வேண்டி வரலாம்.

**கடகம்:** மனதில் பதற்றமில்லாமல் செயற்படுவது நன்மை தரும். தொழில், வியாபாரம் சுமாராக இருக்கும். பிறர் பார்வைபடும் இடங்களில் பணத்தை வைக்க வேண்டாம். வெளியூர் பயணத் திட்டத்தில் மாற்றம் செய்வீர்கள்.

**சிங்கம்:** உங்கள் மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் செழித்து வளர இஷ்ட தெய்வ அருள் துணை நிற்கும். கொடுக்கல், வாங்கலில் முன்னேற்றம் உண்டு.

**கன்னி:** சிலர் சுயலாபத்திற்காக உங்களுக்கு உதவ முன்வருவர். அவர்களை அடையாளம் கண்டு ஒதுங்கி விடுங்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க சில மாற்றங்களைச் செய்வீர்கள்.

**துலாம்:** நண்பர்களின் கருத்தை ஏற்றுச் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை அதிகரித்து லாபத்தில் புதிய சாதனை படைப்பீர்கள்.

**விருச்சிகம்:** பொறுமையுடன் செயற்படுவதால் நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். முக்கிய செலவுக்கு சேமிப்பில் கை வைக்க வேண்டி வரலாம். உடல்நிலையில் கவனம் கொள்வது நல்லது.

**தனுசு:** புதிய நண்பர்களின் உதவி கிடைக்கும். சில விடயங்களில் பெருந்தன்மையாக நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி திட்டமிட்டபடி நிறைவேறும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**மகரம்:** பொதுநல சிந்தனையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்கும். பணவரவு திருப்திகரமாகும். அன்புக்குரிய ஒருவர் பரிசுப்பொருள் தருவார். சுகமான தூக்கம் வரும். பெண்கள் நகை, புடவை வாங்க யோகமுண்டு.

**கும்பம்:** வேண்டாதவர்களின் பார்வை உங்கள் மீது படலாம். கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணிகள் தாமதமாகலாம். அவற்றை விரைவுபடுத்துவது நல்லது. பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**மீனம்:** எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் இடையூறுகளைத் தாமதமின்றிச் சரி செய்வது நல்லது. அளவான லாபம் கிடைக்கும். பொருள்கள் வாங்கும் வகையில் பணம் வீணாகலாம்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | | | 9 | | | | |
| 4 | | | 7 | | | 3 | | |
| 3 | | | | | 1 | | | |
| | | 3 | | | 6 | 5 | 4 | |
| | 4 | | | 5 | | | 3 | |
| | 9 | 7 | | | | 6 | | |
| | | | 4 | | | | | 2 |
| | | 2 | | | 7 | | | 3 |
| | | | | 1 | | | 7 | 5 |




தெலுங்கில் நாகார்ஜுனா நடித்து வரும் படம் 'ஓம் நமோ வெங்கடேசாய'. ராகவேந்திரராவ் இயக்கி வரும் இந்தப் படத்தில் நாகார்ஜுனாவுடன் அனுஷ்கா, பிரக்யா ஜெய்ஸ்வால், விமலாராமன் உட்படப் பலர் நடித்துள்ளனர். கீரவாணி இசையமைத்துள்ள இந்தப் படத்தின் பிரக்யா ஜெய்ஸ்வால் சம்பந்தப்பட்ட முதல் பார்வை நேற்று வெளியானது. அதில் நாயகிகளில் ஒருவரான பிரக்யா ஜெய்ஸ்வால் 14 கிலோ தங்கத்தில் செய்த ஆடை அணிந்து நடித்துள்ள காட்சி அனைவரையும் கவர்ந்துள்ளது.

அதுகுறித்து தெலுங்கு சினிமா உலகினர் பலரும் தங்களது ஆச்சரியத்தை வெளிப்படுத்தி வரும் நிலையில், அந்தப் பட நாயகன் நாகார்ஜுனாவும், 14 கிலோ தங்கத்தில் செய்த ஆடையைக் கட்டிக்கொண்டு ஆடுவது கடினம். ஆனபோதும் அவர் அற்புதமாக ஆடியிருக்கிறார். அவரது நடனம் அந்தத் தங்கத்தைவிட சுத்தமானதாகவுள்ளது என்று தனது வியப்பையும் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

முன்னாடி எல்லாம் காதல் தோல்வினா photos கிழிப்பாங்க



ஆனா... இப்ப PHOTOS, MESSAGES அழிச்சிட்டு போய்ட்டே இருக்காங்க

என்னதான் வாழ்க்கைய பற்றி கலர் கலரா கனவு கண்டு வச்சிருந்தாலும்,



கடைசில 'அண்ணனுக்கு ஒரு ஊத்தப்பம்' எண்டு ஆகுது விதி...!

என்னங்க எந்தப் புடவைய செலக்ட் பண்றதுன்னு கஷ்டமா இருக்குங்க...



சீக்கிரம் ஏதாவது ஒரு புடவைய எடுடி... கடைய திறந்துட் போறாங்க...?

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 1 | 8 | 2 | 5 | 9 | 4 | 6 |
| 9 | 8 | 5 | 6 | 1 | 4 | 2 | 7 | 3 |
| 6 | 2 | 4 | 7 | 9 | 3 | 5 | 8 | 1 |
| 5 | 7 | 8 | 3 | 4 | 9 | 1 | 6 | 2 |
| 4 | 9 | 2 | 5 | 6 | 1 | 7 | 3 | 8 |
| 3 | 1 | 6 | 2 | 7 | 8 | 4 | 5 | 9 |
| 2 | 4 | 7 | 1 | 8 | 6 | 3 | 9 | 5 |
| 1 | 6 | 3 | 9 | 5 | 7 | 8 | 2 | 4 |
| 8 | 5 | 9 | 4 | 3 | 2 | 6 | 1 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**பெண்:** "ஹலோ அம்புலன்ஸ் சேவையா?"

**ஊழியர்:** "ஆமா மேடம் என்னாச்சு?"

**பெண்:** "காபி குடிக்கும் போது கை தவறி காபி என் புது சேலையில கொட்டிடுச்சு"

**ஊழியர்:** "மேடம்.. இதுக்கெல்லாம் போயி கூப்புடுறீங்க...? அம்புலன்சு எதுக்குனு தெரியாதா?"

**பெண்:** "அதெல்லாம் தெரியுமுங்க! சேலையில காபி கொட்டினதும் என் புருஷன் கொஞ்சம் சத்தமா கைகொட்டி சிரிச்சாரு"

**ஊழியர்:** "ஓகே... ஓகே.. புரியுது மேடம். இதோ உடனே வர்றோம்! நீங்க விலாசத்தை சொல்லுங்க"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் உடலோடு கதையாடும் பாகங்களின் (வி) வேகமான அறிகுறிகள்

**கண்களும் மூளையும்**

கண்களுக்கு பின்னாக அமையப்பெற்ற குருதி நாளங்களைக் கொண்டு, மூளையின் ஆரோக்கியத்தைச் சொல்ல முடியும். அதிலும் கண்களில் உள்ள நரம்புகள் பரந்த அளவில் இருந்தால், அது ஒருவரின் நுண்ணறிவில் குறைபாடு இருப்பதை காட்டுகிறது.

**பற்களும் மனநிலையும்**

பற்கள் ஒருவரின் நினைவுத்திறனையும் மனநிலையையும் வெளிக்காட்டும். இந்த விடயம் எந்தவொரு ஆய்வுச் செயற்பாட்டின் போதும் நிரூபணமாகாத போதும் மனநிலையில் ஏற்படும் பாதகமான எதிர்மறை எண்ண வீழ்ச்சி வாய் ஆரோக்கியம் தொடர்பில் பாதிப்பினை ஏற்படுத்துவதாகவும் அதேவேளை உணவினை மெல்லுவதற்கு சிரமமாக இருக்கும் சந்தர்ப்பங்கள் மூளைப் பாதிப்பினை ஏற்படுத்துவதாகவும் நிபுணர்களால் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

**குரலும் உயரமும்**

ஒருவரின் குரல் வெளிப்பாட்டின் தொனிப்பினை அடிப்படையாகக் கொண்டு அவரது உயரத்தைக் கணிக்க முடியும்.
உரத்த குரல் உள்ளவர்கள் உயரமாகவும், மென்மையான மற்றும் தாழ்ந்த குரலைக் கொண்டவர்கள் சற்று உயரம் குறைவாகவும் இருப்பதனை ஆய்வின் முடிவுகள் உறுதிசெய்துள்ளது.

**சருமமும் குருதி அழுத்தமும்**

ஒருவரின் சருமம் சுருக்கமின்றி இருந்தால், அவரது உடலில் குருதி அழுத்தமானது கட்டுப்பாட்டுடன் இருப்பதோடு, இதய செயற்பாடும் ஆரோக்கியமாக உள்ளது என்பது அர்த்தம்.
வயதானவர்களுக்கு ஏற்படும் நோய்கள் தொடர்பில் ஆய்வினை மேற்கொள்ளும் நிபுணத்துவ துறை சார்ந்தவர்கள் மேற்கொண்ட ஆய்வில் சருமத்தின் இளமைத்தன்மைக்கும், இதய நோய்க்கும் தொடர்புள்ளமை தெரிய வந்துள்ளது.
ஆக, வயதான பின்பு சருமத்தில் சுருக்கங்கள் ஏற்படும் போது குருதி அழுத்த பிரச்சினையும், இதய நோயும் அதிகம் ஏற்படுகிறது

**தூக்கமும் கண்களும்**


உடல் உழைப்பற்ற வாழ்க்கைமுறை மற்றும் இன்ன பிற காரணங்களால் ஏற்படும் தூக்கமின்மையால் ஏராளமான உடல் உபாதைகள் ஏற்படுகின்றது.
தூக்கத்தின் போது மூச்சுத்திணறல் ஏற்பட்டால் இரண்டு மடங்கு அதிகமாக கண் நோய்கள் உருவாவதோடு அதன் தாக்கம் என்பது கண் பார்வையை பாதிப்பதுடன் குளுக்கோமா போன்ற நோய்களை எற்படுத்தும் வாய்ப்புள்ளது.

**உதடுகளும் ஞாபக சக்தியும்**

உதடுகளில் புண்களும், வெடிப்புக்களும் அதிக அளவில் காணப்படுமாயின் அல்சைமர் எனும் ஞாபக மறதி நோய் வருவதற்கான அதிக சந்தர்ப்பங்கள் காணப்படுவதாக அர்த்தம்.
இவைதவிர அதிகமாக வைரஸ் தொற்று உடையவர்களுக்கு அறிவாற்றலின் திறன் குறைவாக இருக்கும் என ஆய்வுகள் தெரியப்படுத்தியுள்ளது.

**கால்களும் விறைப்புத்தன்மையும்**

பெண்களை விட ஆண்கள் அதிகமாக கால் சம்பந்தமான நோய்களால் அவஸ்தைப்படுகின்றனர். இதற்கான காரணங்களாக அதிகம் நடக்காமை, கால்களுக்கு போதிய ஓய்வு அளிக்காமை போன்றவற்றை சொல்லமுடியும்.
ஆண்களுக்கு கால் தொடர்பான பிரச்சினைகளின் அறிகுறிகள் தென்படும்போதே அதனை சரிசெய்துவிட வேண்டும். இல்லாது போனால் நாளடைவில் விறைப்புத்தன்மை படிப்படியாக ஏற்படும் வாய்ப்புள்ளது.
குறிப்பாக கால்களுக்கான ஓய்வு கிடைக்காமை என்பது நல்ல மன நிலையை உணர வைக்கும் டோபமைன் என்னும் பதார்த்தங்களின் குறைபாடாக இருக்கும்.







பெண்களுக்கான நீளமான டொப்கள் அறிமுகமாகியுள்ளன. இரு பக்கமும் வெட்டுக் கொண்ட இவை, முக்கால் கையுடன், கொலர் வைத்த கழுத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. பருத்தித் துணியில் கற்கள் வேலை பாட்டுடன் உருவாகியுள்ளன. கட்டையான தோற்றம் கொண்டவர்களுக்கு இவ்வாறான ரொப்கள் உயரத்தை அதிகரித்துக் காட்டும். இந்த ரொப்கள் ஆயிரத்து 800 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

# அரிசி வடை



## தேவையான பொருள்கள்

புழுங்கல் அரிசி - ஒரு கோப்பை
தேங்காய் துருவியது - ஒரு கோப்பை
புளித்த தயிர் - ஒரு கோப்பை
உளுத்தம்பருப்பு - ஒரு தேக்கரண்டி
பச்சைமிளகாய் - 2
சிவப்புமிளகாய் - 2
உப்பு - தேவையான அளவு
பெருங்காயம் - சிறிது
கொத்தமல்லி - சிறிது
கறிவேப்பிலை - சிறிது
எண்ணெய் - பொரிப்பதற்கு

## செய்முறை

அரிசியையும் பருப்பையும் சுத்தப்படுத்தி தயிரில் கலந்து சுமார் ஆறு மணிநேரம் ஊற வைக்கவும்.
அதை அப்படியே மிக்சியில் போட்டு அரைக்கவும். உப்பு, பெருங்காயம், தேங்காய்த் துருவல் மற்றும் மிளகாய்களையும் போட்டு, தண்ணீர் ஊற்றாமல் மென்மையாக அரைக்கவும்.
தேவையானால் தயிர் சிறிது தெளித்துக் கொள்ளலாம். நீர் ஊற்றக்கூடாது.
கறிவேப்பிலை, கொத்தமல்லியை பொடியாய் நறுக்கி அரைத்த மாவில் கலக்கவும்
சட்டியில் எண்ணெய் ஊற்றி, காய்ந்ததும், மாவினை சிறிய, கனமில்லாத வடைகளாகத் தட்டிப் போட்டு பொரித்து எடுக்கவும்.
இந்த அரிசி வடை இரண்டு நாள்களுக்கு கெடாமல் இருக்கும். மிகவும் சுவையாகவும் இருக்கும்.

# நகப் பூச்சு வர்ணம்

1 அடிப்படை நிறமாக வெள்ளை நிறத்தை பூசிக் கொள்ளவும்.
2, 3, 4 பல வர்ணத்தை பிரதிபலிக்க முதலாவது ஒரு வர்ணத்தில, அடுத்தடுத்து விரும்பிய விதமாக புள்ளியை வைக்கவும்.
5 பின்னர் நகத்தின் மேல் பொலித்தீனை வைத்து இலேசாக அழுத்தி நிறத்தை பரப்பவும்.
6,7 உலர வைத்த பின்னர், நிற மற்ற நகப்பூச்சைப் பூசி அலங்காரத்தை நிறைவு செய்யவும்.
ஒரே நிறத்தில் பல வர்ணக் கலவை இந்த நகப் பூச்சில் பிரதி பலிக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 500 | 600 | 800 | – |
| நண்டு | 250 | 400 | 200 | 500 | 300 | 500 |
| கணவாய் | 600 | 600 | 400 | – | 800 | – |
| பாரை | 550 | 500 | 400 | 450 | 600 | 350 |
| சுறா | 500 | 500 | 500 | – | – | 350 |
| சீலா | 300 | 400 | 300 | – | 600 | 300 |
| விளை | 650 | 500 | 300 | 450 | 600 | 350 |
| முரல் | 300 | 200 | 300 | – | 300 | 300 |
| கும்பிளா | 400 | 200 | 400 | 300 | 200 | – |
| கிளாக்கன் | 800 | 800 | 300 | – | 300 | – |
| ஓரா | 400 | 200 | 300 | 300 | – | – |
| திரளி | 300 | 200 | 100 | 300 | 150 | – |
| நகரை | 250 | 200 | 100 | 350 | – | 300 |
| சூடை | 150 | 100 | 100 | – | 200 | – |
| ஒட்டி | 300 | 100 | 200 | 200 | 200 | – |
| திருக்கை | 150 | 200 | 200 | – | 200 | – |
| மதனம் | 150 | 150 | – | 200 | – | 200 |
| கொய் | 100 | 100 | 50 | 120 | 100 | – |
| பாலை | 400 | 100 | 300 | 400 | 600 | – |
| வாழை | 100 | 100 | – | 300 | 300 | – |

# ஒன்பது நபர்களோடு ஒரு கிராமம்



டென்மார்க் அருகே உள்ள க்பாரோ தீவு களில் பனி மூடிய மலைகளின் நடுவே அமைந்துள்ள சிறிய கிராமம் ஒன்றில் மொத்தமாக ஒன்பதே பேர் தான் வசித்து வருகின்றனர்.

அட்லாண்டிக் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள பல்வேறு தீவுக் கூட்டங்களில் இந்த க்பாரோதீவும் ஒன்றாக விளங்குகிறது. அத்துடன் சுரங்கப்பாதைகள், பாலங்கள், படகுப் போக்குவரத்து என இங்குள்ள 18 எரிமலைத் தீவுகளும் இணைக்கப்பட்டே உள்ளன.

இந்தக் கிராமத்தின் மக்கள் குடியிருக்கும் வீடுகள் தனித்தே காணப்படுகின்றன. சிறுவர்கள் கணினி விளையாட்டில் நேரத்தைச் செலவிடுகின்றனர். முதியவர்கள் தனிமை விரும்பிகளாகக் காணப்படுகின்றனர்.

இங்குள்ள சில கிராமங்களில் 22 பேரே வசித்து வருகின்றனர். மைக்கினஸ் எனும் கிராமத்தில் 10 பேர் மட்டும் வசிக்கின்றனர்.

இந்தத் தீவுக் கூட்டத்தில் உள்ள கிராமங்களில் வெளி உலகம் போன்ற தான வசதிகள் எவையும் காணப்படவில்லை. இருந்த போதும் மக்கள் அமைதியாகவும் தன்னிறைவாகவும் வாழ்க்கையை நடத்துவதாகத் தெரியவருகிறது.

# பூமிக்கு வெளியாய் பயணப்படும் அமெரிக்கா

## மனிதன் வாழக் கூடிய பல இடங்கள் இருப்பதாகத் தகவல்

உலகின் பலமிக்க நாடுகள் இடையே விண்வெளியை வெல்வது தொடர்பில் போட்டித்தன்மை நிலவுகிறது. இந்தநிலையிலே ரஷ்யா முதலில் விண்வெளிமீது தடம் பதித்ததுடன் அமெரிக்கா நிலவைக் கண்டுகொண்டது. அந்தவகையிலே வொஷிங்டனில் அண்மையில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் உரையாற்றிய அமெரிக்க பாதுகாப்புத் தலைமையகத்தின் விண்வெளி தொடர்பான உப செயலாளர் வின்ஸ்ரன் பியூசப்பினால் அமெரிக்க மக்களை பூமிக்கு வெளியில் கொண்டு செல்லத் திட்டமிட்டு வருவதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உண்மையான தகவல்களின்படி பூமிக்கு அருகில் மனிதன் வாழக்கூடிய பல இடங்கள் இருப்பதாகவும் அவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் தற்கால சூழமைவுகளின் அடிப்படையிலே பூமியை விட்டு வேறு ஒரு வசிப்பிடத்தைத் தெரிவு செய்ய அமெரிக்கா தயாராக இருக்கின்றது என்பதான தகவலும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை அமெரிக்கக் கடற்படையின் விண்வெளிப் பிரிவின் பொறுப்பதிகாரி ரியல் அட்மிரல் பிரையன் பிரவுண், அமெரிக்காவின் பல்வேறு துறைகளும் புதிய இருப்பிடத்தைத் தேடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | – | 60 | 60 | 40 | 40 |
| கத்தரி | 60 | 80 | 60–100 | 80 | 60 | 60 |
| கரட் | 80 | 80 | 80–140 | 100 | 100 | 120 |
| மரவள்ளி | 50 | 60 | 50 | 60 | 50–60 | 40 |
| பயிற்றை | 100 | 110 | 140 | 120 | 80–100 | 160 |
| பாகல் | 120 | 120 | 180 | 140 | 120–130 | 120 |
| கருணைக்கிழங்கு | 60 | 80 | 80 | 80 | 50–60 | 120 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 80–90 | 100 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 100 | 100 | 70–80 | 120 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 30–35 | 60 |
| தக்காளி | 60 | 60 | 60 | 60 | 50–60 | 80 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 50 | 40–50 | 80 |
| கீரை | 30 | 20 | 30 | 20 | 20–30 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 30 | 30 | 20 | 40 |
| பச்சை மிளகாய் | 60 | 50 | 80 | 60 | 50–60 | 80 |
| புடோல் | 50 | 40 | 60 | 60 | 60 | 40 |
| கோவா | 50 | 50 | 60 | 60 | 60 | 60 |
| வெண்டி | 80 | 80 | 80 | 60 | 60 | 80 |
| போஞ்சி | 200 | 160 | 250 | 200 | 180 | 240 |
| லீக்ஸ் | 120 | 160 | 120 | 100 | 100 | 120 |
| தேங்காய் | 50 | 32 | 50 | 35–40 | 30 | 35–40 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 120 | 110 | 120 | 120 |
| தேசிக்காய் | 400 | 550 | 400 | 400 | 500–550 | 600 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 10–15 | 20 |
| கறிமிளகாய் | 120 | 120 | 120 | 120 | 120–140 | 160 |
| இராசவள்ளி | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 100 | 50 | 60–80 | 80 |

## மரண அறிவித்தல்

### திருமதி சொர்ணலக்ஷ்மி சேதுகாவலர்

தோற்றம் 13 . 02 . 1932



மறைவு 27 . 11 . 2016

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி சொர்ணலக்ஷ்மி சேதுகாவலர் தனது 84 ஆவது வயதில் இறையடி எய்தினார்.

அன்னார் அனலைதீவைச்சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சுந்தரம் தம்பதியினரின் மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - விசாலாட்சி தம்பதியினரின் மருமகளும் காலஞ் சென்ற இளைப்பாறிய சிறாப்பர் வேலுப்பிள்ளை சேதுகாவலரின் (நெடுந்தீவு, அனலைதீவு - வவுனியா) அன்பு மனைவியாரும் காலஞ்சென்ற தில்லைநாயகம்(கனடா), சிவஞானம் (பிரான்ஸ்), சோதிநாதன் (கனடா), பூமாவதி(இலங்கை), கமலாவதி(இலங்கை), தவநாயகி (இலங்கை) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, திருமதி மனோன்மணி, துரைசாமி, குகதாசன், சண்முகநாதன் மற்றும் தனிநாயகம்(வவுனியா), திருமதி குணநிதி(கனடா), திருமதி கமலம், திருமதி சொர்ணம்(கனடா) ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான திருமதி பொன்னம்மா, சிதம்பரப்பிள்ளை, திருமதி பரமேஸ்வரி ஆகியோரின் சகலியும் , கலாநிதி (டென்மார்க்), நிருத்தானந்தன்(கனடா), நிருத்தாசரன்(கனடா) ஆகியோரின் தாயாரும் ஜீவகுமாரன்(டென்மார்க்), சத்தியவாணி (கனடா) ஆகியோரின் மாமியாரும் மிதிலா (டென்மார்க்), மீரா(டென்மார்க்), ஆரூரன்(கனடா), அரிகரன்(கனடா), விஜிதரன் (டென்மார்க்), டனேஷன்(டென்மார்க்) ஆகியோரின் பேர்த்தியும் யுவனின் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிச்சடங்குகள் வேப்பங்குளம் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் (மன்னார்றோட் - எண் 43, 6ஆம் ஒழுங்கை) காலை 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தட்சணாங்குளம் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**0094 -24 -2220-515**

**நிருத்தாசரன் (சரன்) 0094-729 974 448**

## மரண அறிவித்தல்



### நாகலிங்கம் குணசேகரம்

இராசாவின் தோட்டத்தை பிறப்பிடமாகவும் இல.133,மூத்தவிநாயகர் கோயில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் குணசேகரம் நேற்று (27.11.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் வசந்தலீலாவின் அன்புக் கணவரும் முரளிதரன் (பிரான்ஸ்), கஜந்தன் (பிரான்ஸ்), கார்த்திகன்(Softlogic Life), பிரசாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் கணேசன் , அன்னலட்சுமி, சுப்பிரமணியம், தனலட்சுமி, காலஞ்சென்ற பரமராசா- தனேஸ்வரி மற்றும் அமிர்தலிங்கம் - நகுலேஸ்வரி, நவரட்ணம்-பரமேஸ்வரி , காலஞ்சென்ற நாகலிங்கம் ஜெயரட்ணம் மற்றும் பற்குணசிங்கம் - பேரின்பநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பகிரதா (பிரான்ஸ்), சிவநிறோஜினி (University of Jaffna Faculty of Science) ஆகியோரின் அன்பு மாமனும் தேஸ்வின், மிருதுஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2016) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் மதியம் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 133, மூத்த விநாயகர் கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(ஜே/6393)(12.18.21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# புலம்பெயர் நாடுகளிலும் நேற்று பேரெழுச்சியுடன் மாவீரர் தினம்

லண்டன், நவ. 28

விடுதலைக்காக வித்தாகிப்போன மாவீரர்களை நினைவுகூர்ந்து தமிழர் தாயக நிலப்பரப்பில் - பொது வெளியில் மாவீரர் தினம் கடைப்பிடிக்கப்பட்டதைப்போன்று, தமிழர்கள் பரந்து பரவி வாழும் புலம்பெயர் தேசங்களிலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.

விண்ணிலும் மண்ணிலும் போராடி, கடலிலும் கரையிலும் களமாடி விளை நிலத்துக்காக வித்தாகிப் போன புனிதர்களை நினைவுகூர்ந்து ஒன்றாக அவர்களுக்கு வணக்கம் செலுத்தும் நாளான நேற்று, பிரிட்டனின் ஸ்டாட்போர்ட் நகரில் ஒலிம்பிக் பார்க்கில் மாவீரர் நாள் நிகழ்வுகள் சிறப்பாக நேற்று நடைபெற்றன.

இதன் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. பொதுச்சுடரை லெப்டினன் குட்டி என்றழைக்கப்படும் இராசநாயகம் ஜஸ்டின் செல்வகுமாரின் தாயார் றீற்றா ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து பிரிட்டன் கொடியை இளையோர் அமைப்பின் பொறுப்பாளர் சஞ்சு வசிகணேசன் ஏற்றி வைத்தார். அடுத்து தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. தமிழீழத் தேசியக் கொடியை பன்னாட்டுச் செயலகப் பொறுப்பாளர் பொ.மகேஸ்வரன் ஏற்றி வைத்தார். அடுத்து தளபதி கேணல் ஜெயத்தின் தாயார் காளீஸ்வரி பாலகுரு முதன்மைச் சுடரை ஏற்றி வைத்தார்.

டென்மார்க்கில் அந்த நாட்டு நேரப்படி பி.ப. 1.35 மணிக்கு மாவீரர் நாள் நினைவு கடைப்பிடிக்கப்பட்டது.

மாவீரர் துயிலுமில்லப் பாடலுடன் மாவீரர் வணக்கப் பாடல்கள் இசைக்க சுவிஸின் அனைத்து மாநிலங்களிலிருந்தும் வருகை தந்த மக்கள் உணர்வுபூர்வமாக மலர் வணக்கம் செலுத்தி மாவீரர் நாளை நினைவுகூர்ந்தனர்.

அகவணக்கத்துடன் ஆரம்பமான நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கலைப் பெறுப்பாளர் ரகுபதி ஏற்றி வைத்தார்.

தாயக விடுதலைக்காய் உயிர்நீத்தவர்களின் நினைவுகள் தாங்கிய, இவர்டோன் நகரில் அமைந்துள்ள நினைவுக்கல்லில், அந்த நாட்டு நேரப்படி காலை 9 மணியளவில் தேசிய மாவீரர் நாள் நிகழ்வுகள் ஈகச்சுடரேற்றலுடன் ஆரம்பமாகி அகவணக்கம், மலர்வணக்கம், சுடரேற்றல், உறுதிப் பிரமாணம் எடுத்தல் என்பன இடம்பெற்றன.

சுவிஸ் பிறிபோர்க் மாநிலத்தில் பிற்பகல் 1 மணியளவில் தமிழீழத் தேசியக் கொடியேற்றலைத் தொடர்ந்து தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் உரைத் தொகுப்பு காண்பிக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ அறிக்கையும் வாசிக்கப்பட்டது. தாயக நேரம் மாலை 6.05 மணிக்கு சுவிஸ் நேரம் 1.35 மணிக்கு, மணியோசையுடன் அகவணக்கம் செலுத்தப்பட்டு, பொதுச் சுடரேற்றப்படது. (வ-5)

# இனத்துவமான எறும்புகள்

## சமூக அமைப்பையும் பிராந்திய எல்லைகளையும் கொண்டது

குடியிருப்பு இடங்களான நிலம், மரம், நிலத்தின் கீழான பகுதியென பல சிக்கல் நிறைந்த இயற்கையுடன் கூடியதான வாழ்வியலை கொண்டுள்ள எறும்பு இனமானது மிகச் சிறந்த உயிர் தப்பி வாழும் உயிரினங்களில் முக்கியமானதாக விளங்குகிறது.

அந்தவகையிலே மிக வலிமையான சமூக அமைப்பையும் பிராந்திய எல்லைகளையும் கொண்டுள்ள எறும்பு இனமானது வெப்பமானதும் ஈரப்பதம் அதிகம் உள்ளதுமான பகுதிகளில் கூட்டமாக வாழ்கிறது.

இவற்றின் ஒழுங்கமைவான கட்டமைப்பு என்பது சமூக வாழ்வு, தமது வாழ் விடத்தை தமக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கும் இயல்பு, தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளும் திறன் போன்றவற்றை தனித்துவத்திற்குரியதாக்குவதாக ஆய்வாளர்களால் குறிப்பிடப்படுகின்றது

இதன்படி ராணி எறும்புகள் 30 வருடம் வரையும், அவற்றின் வேலையாள்களும் காவலாளிகளும் 3வருடம் வரையும், ஆண் எறும்புகள் சில மாதகாலமும் உயிர் வாழ்கின்றன. மிகப்பிரதானமாக பூச்சி இனங்களில் மிகவும் அதிக காலம் உயிர் வாழக் கூடிய இனமாக ராணி எறும்புகளின் இனம் காணப்படுகிறது.

கூட்டில் அல்லது புற்றில் பல இலட்சம் வரையிலான எறும்புகள் உயிர் வாழ்வதுடன் ஒரு கூட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட ராணி எறும்புகள் காணப்படுகின்றன.

10 ஆயிரத்திற்கு மேலான வகைப்பாடுகளில் உள்ள எறும்புகளின் உணவென்பது தானியம், பங்கஸ், தேன் என பல வகையாக இருந்து வருகிறது. இவை சிறந்த மோப்ப சக்தியை கொண்டுள்ளன.குறிப்பாக கண் பார்வை உடைய எறும்புகளுக்கு சுவாசப்பைகள் காணப்படாது.

மேலும் எறும்புகள் தமது உடல் எடையை விட வும் 50 மடங்கு சுமையை சுமக்க வல்லன என்பதுடன் தமது மூளையில் 250000 கலங்களை கொண்டிருப்பதாகக்கண்டறியப்பட்டுள்ளது. இவைதவிர உலகில் உள்ள மூன்றில் ஒரு பங்கு எறும்புக் கூட்டம் அமேசன் காட்டில் வசிப்பதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழைத் துர்க்காதேவி ஆலய உண்டியல் உடைத்துப் பணம் திருட்டு

யாழ்ப்பாணம், நவ.28

தெல்லிப்பழைத் துர்க்காதேவி ஆலயத்தின் முகப்பில் உள்ள திருப்பணி உண்டியல் நேற்றுமுன்தினம் இரவு திருடர்களால் உடைத்து பணம் சூறையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தெல்லிப்பழைத் துர்க்காதேவி ஆலயத்தின் முகப்பில் உள்ள திருப் பணிக்கான உண்டியல் நேற்று முன்தினம் இரவு திருடரால் உடைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு உடைக்கப்பட்ட உண்டியலில் இருந்த தாள் நோட்டுகளை மட்டும் திருடன் கையாடிச் சென்றுள்ளபோதிலும் நாணயக் குற்றிகள் உண்டியலுள் கிடந்துள்ளன. இந்தத் திருட்டுத் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினர் நேற்றைய தினம் தெல்லிப்பழை பொலிஸாருக்குத்தகவல்வழங்கினர். அதனையடுத்து நேற்றைய தினமே ஆலயத்துக்குச் சென்ற பொலிஸார், விசாரணையில் ஈடுபட்டனர்.

இவ்வாறு மேற்கொண்ட விசாரணையில் ஆலயப்பகுதியில் சீ.சீ.ரி.வி. கமரா பொருத்தப்பட்டுள்ளமையினால், அதன் காணொலிப் பதிவு பரிசோதிக்கப்பட்டு, நள்ளிரவில் ஒருவர் நடமாடுவது கண்டறியப்பட்டது. மேலதிக விசாரணைக்காக அந்தக் காணொலிப் பதிவைத் தெல்லிப்பழைப் பொலிஸார் பெற்றுச் சென்றனர்.

(வ-101)

# அரச மருத்துவ அதிகாரிகள் இன்று வடக்கில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 28

வடக்கு மாகாண அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் இன்று மதியம் 12 மணிக்கு வவுனியா பொது வைத்தியசாலையில் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகச் சங்கம் அறிவித்தது.

முன் மொழியப்பட்ட 2017ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் நாடு முழுவதும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை இன்று நண்பகல் 12 மணியளவில் ஒழுங்கு செய்து உள்ளனர். இதன் ஒரு அங்கமாக வடக்கு மாகாணத்தில் பணி புரியும் மருத்துவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று வடக்கு மாகாண அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-7)



# பிடல் கஸ்ரோவின் இழப்புக்கு மைத்திரி அனுதாபம்

கொழும்பு, நவ.28

தன்நிகரில்லாத் தலைவரொருவரின் இழப்பினால் கவலையடைந்துள்ள கியூபா மக்களுடன் இலங்கையும் கைகோர்த்துள்ளதாக கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் கஸ்ரோவின் இழப்புத் தொடர்பில் கியூபா ஜனாதிபதி ராவுல் கஸ்ரோவுக்கு அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கடுமையான புறச் சவால்களுக்கு மத்தியிலும் கியூபா மக்களின் நலன்களை மேம்படுத்துவதற்காக தனது வாழ்க்கையையும் தொழிலையும் அர்ப்பணித்த முன்னாள் ஜனாதிபதி பிடல் கஸ்ரோ தன்நிகரில்லா, முன்மாதிரியான தலைவராவார்.

அந்த அர்ப்பணிப்பின் ஊடாக கல்வி, சுகாதாரத்துறைகளில் கியூபா அடைந்த வெற்றியின் மூலம் கியூபாவுக்கென சிறப்பு இடம் உலகில் கிடைத்தது.

ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன், அமெரிக்காவின் பெரும்பாலான நாடுகளும் இலங்கையும் கியூபா பெற்ற அந்த வெற்றிகளால் பயனடைந்து வருகின்றன என்று ஜனாதிபதி தனது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (வ)

# பனம் விதை நடுகை இந்த வாரம்

யாழ்ப்பாணம், நவ.28

வடமராட்சி கிழக்கில் 10 ஆயிரம் பனம் விதைகளை நடுகை செய்யும் பணிகள் இந்த வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

செம்பியன்பற்று, குடாரப்பு ஆகிய பகுதிகளில் உள்ள அரச காணிகளில் பனம் விதைகளை நடுகை செய்வதற்கான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த பனம் விதைகள் நடுகை செய்வதற்கான நிதியுதவியை யாழ். செயலகம் வழங்கியுள்ளது. பனம் விதைகளும் இரண்டு நாள்களில் நடுகை செய்து முடிக்கப்படும். பனம் விதை நடுகை செய்யப்பட்டு அவற்றைப் பாதுகாப்பாகவும் பிரதேச செயலகம் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் - என்றார். (ற-4,17)

# நுழைவாயில் திறப்பு விழா

காரைநகர் வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை நுழை வாயில் திறப்பு விழாவும் பரிசுத்தினமும் எதிர்வரும் 1ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை அதிபர் செல்வி வி.விசுவநாதன் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த விழாவுக்குப் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசாவும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலரும், பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினரும், காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவருமான ப.விக்னேஸ்வரன், தீவக வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.பாஸ்கரன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக சக்தி மேம்பாட்டுக் கழக இயக்குனரின் தாயார் திருமதி நா.பராசக்தியும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-250)

# உண்மையைப் பிரகடனப்படுத்தும் குழுமம் நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 28

இலங்கை தேசிய சமாதானப் பேரவை நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். சரஸ்வதி மண்டபத்தில் (நாச்சிமார் கோயில் முன்பாக) வடக்கு மாகணத்தில் உண்மையைப் பிரகடனப் படுத்தும் குழுமம் என்ற நிகழ்வை ஒழுங்கு படுத்தியுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

போர் நடைபெற்றதன் காரணமாக நேரடியாக அல்லது மறைமுகமாகப் பாதிக்கப்பட்டோர் மத்தியில் இருந்து தெரிவு செய்யப்பட்டகள் தங்கள் அனுபவங்களைப் பகிர உள்ளனர். இதனை பொறுமையுடன் செவிமடுப்பதன் ஊடாக அனைவருக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தல், அதே சமயம் பாதிக்கப்பட்டவர்களின் தீர்வுகாணும் வகையில் அதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிகழ்வுக்கு அனைவரையும் அவதானிப்பாளர்களாக இணைத்துக் கொள்ளுமாறு இலங்கை தேசிய சமாதானப் பேரவையினர் கேட்டுள்ளனர். (வ- 7)

Galaxy Star
வெற்றி வாரம் 113 திகதி 27.11.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
10 13 25 44 50
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,283,520 /-

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 27.11.2016 | வெற்றி வாரம் 2062 | ஊதா
வெற்றி இலக்கங்கள்
12 42 43 54
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2,000,000 /=
வெற்றி இலக்கங்கள்
53 73
டபள் சான்ஸ்

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக முன்னாள் நிர்வாக உறுப்பினரும் அங்கத்தவருமான

**அரியநாயகம் மோகன்ராஜ்**

அவர்கள் 26.11.2016 நோர்வேயில் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அத்துடன் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வளர்மதி முன்னேற்றக்கழகமும், வளர்மதி நிறைவாழ்வகமும், சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு.**

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 10.10.2016 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த

அமரர் திருமதி

**கமலாம்பிகை இராசலிங்கம்**

தோற்றம் 17.10.1942 மறைவு 10.10.2016

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (28.11.2016) திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

27/6, துரையப்பா ஒழுங்கை,
ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

**நாகலிங்கம் ஆனந்தலிங்கம்**

தோற்றம் 12.03.1964

மறைவு 31.10.2016

எமது குடும்பத்தலைவரின் மறைவுச்செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த மற்றும் அஞ்சலி ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன்

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (28.11.2016) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (30.11.2016) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தோப்பு,
அச்சுவேலி.
(C 26736)
(14,17,18)
குடும்பத்தினர்.

## வேலையாள் தேவை

கல்வியங்காட்டில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் நிரப்புனர் தேவை.

தொடர்பு: 075 9187968

## வீடு வாடகைக்குத்தேவை

யாழ்நகர எல்லைக்குள் நிறுவனத்தின் பாவனைக்கு வீடு வாடகைக்குத் தேவை. விற்க விரும்புபவர்களும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்பு: 077 918 4096/ 077 329 6408

## சாரதி தேவை

எமது நிறுவனத்திற்கு சாரதி தேவை. மானிப்பாய், பிரதேசத்தில் வசிப்போர் விரும்பத்தக்கது. (35 - 50 வயதிற்கிடையில்)

T.P : 021 4927 249

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெக்கி விட்சன்

## உலகின் வயதான விண்வெளி வீராங்கனை



விண்வெளியில் அமைந்துள்ள சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அமெரிக்காவைச் சேர்ந்த 56 வயதான பெக்கி விட்சன் அண்மையில் பயணமாகியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இதன்பிரகாரம் விண்வெளியை அடைந்த உலகின் மிக வயதான விண்வெளி வீராங்கனை என்ற பெருமையை அவர் பெற்றுக்கொண்டுள்ளதுடன் அமெரிக்காவின் நாசா விண்வெளி மையத்துக்கான மூன்றாவது பயணமாக இது அமைந்துள்ளது.

எக்ஸ்பெடிசன் 50-51 என்று பெயரிடப்பட்ட இந்தப் பயணமானது ரஷ்யாவில் அமைந்துள்ள பைக்கானூர் விண்வெளி ஏவுதளத்தில் இருந்து ஆரம்பமானது.

இவருடன் ரஷ்யாவின் ஒலெக் நேவிட்ஸ்கி மற்றும் ஐரோப்பிய விண்வெளி மையத்தைச் சேர்ந்த தாமஸ் பெஸ்க்யூட் ஆகிய இருவரும் சென்றுள்ளதாக தெரியவருகிறது.

இதற்கு முன்பதாக 2007 ஆண்டில், அமெரிக்காவின் பார்பரா மோர்கன் என்ற வீராங்கனை தனது 55 ஆவது வயதில் விண்வெளிக்கு பயணித்தமை சாதனையாக இருந்து வந்துள்ளது. பெக்கி விட்சன் 56 வயதைக் கடந்துள்ளதால் மேற்படி சாதனை முறியடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---


2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
திருமதி தவமலர் பரமசாமி

தோற்றம் 17.08.1939
மறைவு 21.11.2014

திதி: 28.11.2016

அன்பின் சிகரமாய் பாசத்தின்
இருப்பிடமாய் எங்களை வளர்த்து
கல்வியறிவினை ஊட்டி
வாழ்க்கைக்கு வழிகாட்டிய
அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்திக்கின்றோம்.

155 ஆம் கட்டை,
A9 வீதி,
கிளிநொச்சி.
077 667 7208

(K 228) (22.11.18)

தகவல்
குடும்பத்தினர்.



21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

செல்லையா
பொன்னுத்துரை



வையத்தில் வாழ்வாங்கு
வாழ்ந்து வாழ வைத்து
பாருளோர் புகழ்ந்தேத்த
பெருமையாய் வாழ்ந்ததெய்வம்
இக வாழ்வில் சுமைதுறந்து
இறைபணியைத் தொடர்ந்திட
குமரனடி போற்றி செய்வோம்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.
25/7, அராலி வீதி,
ஓட்டுமடம்.

தோற்றம் 15.11.1919
மறைவு 22.11.1995

திதி: அமாவாசை



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



காராளசிங்கம்
திலகவதி

திதி: தேய்பிறை சதுர்த்தசி
(28.11.2016) திங்கட்கிழமை

தோற்றம் 02 . 07 . 1941
மறைவு 09 . 12 . 2015

ஓராண்டு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எங்களை விட்டு அகலவில்லை

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர், சகோதரங்கள்.



நினைவலைகள்

முதலாம் ஆண்டு | 27 ஆம் ஆண்டு

தோற்றம் 20.05.1926
மறைவு 28.11.2015





தோற்றம் 08.10.1915
மறைவு 28.11.1989

பொன்னம்பலம் தங்கம்மா
சின்னத்தம்பி பொன்னம்பலம்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அம்மா இன்றுடன் நீர் எமை விட்டுப்பிரிந்து ஓராண்டு ஓடி மறைந்து விட்டதம்மா
உம்மைப் பிரிவோம் என்று நாம் நினைத்துப் பார்க்கவில்லை.
27 ஆண்டுகள் எமது தந்தை எங்களை விட்டுப் பிரிந்தும், அன்றிலிருந்து நீர் எம்
பக்கத்திலிருந்து பல கதைகள் பேசி ஆறுதல் கூறிவிட்டு நீரும் திடீரென மறைந்து விட்டீரே
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் அழியாநினைவுகளுடன்

என்றென்றும் இருவரினதும் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

நீர்வேலி தெற்கு. (ஜே.6411) (13.18)
குடும்பத்தினர் (பேரமக்கள்)



இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 18.03.1944
ஆண்டவன் அடியில் 21.11.2014

அமரர் துரைசிங்கம்
நடராசலிங்கம்

(ஓய்வு பெற்ற அதிபர்- யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்)

திதி – சதுர்த்தசி [28.11.2016]

விதையாய் இருந்த எம்மை விருட்சம் ஆக்கினீர்கள்
வேராக இருந்து பாசத்தைக்காட்டி எமை ஆளாக்கினீர்கள்
நிறைந்த பேச்சுத்திறனும் புன்சிரிப்பும் பிறர்க்கு உதவும் குணமும் உற்றார்,
உறவினருடன் அகமகிழப் பேசி மகிழ்விக்கும் நற்பண்பும் எம்மனைவரதும்
இதயங்களில் நிறைந்து நாளும் நீங்கா நினைவுகளை மீட்டுகின்றன
காணும் இடமெல்லாம் உங்கள் புன்னகை பூத்த முகம் தோன்றல்
எண்ணிய பொழுதெல்லாம் கண்கள் நிறைகிறதே கண்ணீரால்....
மண்ணக வாழ்வினின்று இறைபதமடைந்து ஆண்டது
இரண்டானாலும் என்றும் எங்கள் மனதில் உங்கள் அன்பு நீங்காதிருக்கும்
எம் நினைவைவிட்டகலாத உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

இல. 3 4/2, 42 ஆம் ஒழுங்கை,
கொழும்பு - 06. (T.P 077 623 9900)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்.



முதலாம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



டேவிட் சின்னத்துரை

மலர்வு 03 . 08 . 1940
உதிர்வு 28 . 11 . 2015

நேசத்துடனும் அன்புப் பாசத்துடனும்
ஒரு கூட்டுக்கிளியாக
எமை வளர்த்து ஆளாக்கி
நேர்வழியில் வாழ வைத்த
எம் குடும்ப சூரியன்
எம் அன்புத் தெய்வத்தை

எம் உள்ளங்களில் இருத்தி
எந்நாளும் வணங்குகின்றோம்

இன்று (28.11.2016) திங்கட்கிழமை காலை கோப்பாய் மத்தி சூசையப்பர் ஆலயத்தில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இந்நிகழ்விலும் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோப்பாய் மத்தி, சூசையப்பர் கோயிலடி,
கோப்பாய்.

(J/ 6236) (12,17,18,21)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரெழுச்சி மாவீரர் தினம்

## நேற்று வடக்கு எங்கும் கடைப்பிடிப்பு

## துயிலும் இல்லங்களில் மக்கள் வெள்ளம்

மாவீரர் தினத்தைப் போன்று அமைந்தது.

யாழ்ப்பாணம் உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் மாவீரர் நினைவு நாள் நிகழ்வு இடம்பெற்றது. இதில் நானூறு பேர் வரையில் கலந்து கொண்டனர். முதன்மைச் சுடரை, மாவீரர்கள் மூவரின் பெற்றோர் ஒன்றாக இணைந்து ஏற்றினர்.

கிளிநொச்சி முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மாவீரர் நினைவு நாள் நிகழ்வு இடம்பெற்றது. இதில் மூவாயிரம் பேர் வரையில் கலந்து கொண்டனர். முதன்மைச் சுடரை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா ஏற்றி வைத்தார்.

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மாவீரர் நினைவு நாள் நிகழ்வு இடம்பெற்றது. இதில் மூவாயிரம் பேர் வரையில் கலந்து கொண்டனர். முதன்மைச் சுடரை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் ஏற்றி வைத்தார்.

முல்லைத்தீவு வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மாவீரர் நினைவு நாள் நிகழ்வு இடம்பெற்றது. இதில் ஆயிரம் பேர் வரையில் கலந்து கொண்டனர். முதன்மைச் சுடரை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா ஏற்றி வைத்தார்.

இதனை விட, வல்வெட்டித்துறையில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முதல் மாவீரர் சங்கரின் நினைவுத் தூபியில் மாவீரர் தினச் சுடரேற்றல் நடைபெற்றது. யாழ். நகரில் பாசையூரிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்திலும், யாழ். பல்கலைக் கழகத்திலும், முல்லைத்தீவில் மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனின் ஏற்பாட்டில் தனியான இடத்திலும் மாவீரர் நினைவு நாள் நிகழ்வு நடைபெற்றது. (வ-5-6-7-101-109)

## கல்லறைகள் முன்பாக கதறியழுத உறவுகள்

### துயிலும் இல்லங்களில் நெஞ்சுருக்கும் சம்பவம்

மாவீரர் - வீரமறவர் - தாயக மீட்பர்களின் கல்லறை முன்பாக அவர்களது பெற்றோர்கள் - உற்றார் - உறவினர்கள், மனம் திறந்து கதறி அழுதது அங்கு நின்றோர் எல்லோரையும் கண்ணீரில் மூழ்கடித்தது.

தமிழீழ இலட்சியத்தை தமது மூச்சாக வரிந்து கட்டிக்கொண்டு, களமாடி வீரச்சாவை அணைத்துக் கொண்ட மாவீரர்களை நினைவு கூரும் வாரத்தின் இறுதி நாளான நேற்று, 7 ஆண்டுகளின் பின்னர் தாயக மண்ணில் அமைந்திருந்த மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர் நிகழ்வுகள் நடைபெற்றன.

யாழ்ப்பாணம் உடுத்துறை, கிளிநொச்சி - கனகபுரம் மற்றும் முழங்காவில், முல்லைத்தீவு மாவட்டத்தின் வன்னிவிளாங்குளம் ஆகிய நான்கு மாவீரர் துயிலும் இல்லங்களில் நேற்று மாலை ஒரே நேரத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் நடைபெற்றன.

மாலை 5 மணிக்கே துயிலும் இல்லங்களில் திரண்ட மாவீரர்களின் உறவுகள், கல்லறைகளுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். கல்லறைகள் - மண் அணைகள் முன்பாக அமர்ந்திருந்து கண்ணீர் விட்டுக் கதறியழுதார்கள். ஈகச்சுடரேற்றும் நேரத்திலும் அதன் பின்னர், ஒலிக்க விடப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் தினப் பாடலின் போதும், மாவீரர்களின் உறவுகளின் அழுகை உணர்வுகள் வீச்சம் பெற்றது.

7 ஆண்டுகளின் பின்னர், முதன்முறையாக மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்றதால், உறவுகள் அடக்கி வைத்திருந்த ஆர்ப்பரிப்புக்களைக் கொட்டித் தீர்த்தனர். ஒவ்வொரு துயிலும் இல்லங்களிலும் ஆயிரக் கணக்கில் திரண்ட உறவுகளின் அழுகை, துயிலும் இல்லங்களையே உலுக்கும் அளவுக்கு தாயக தேசத்தை சோகத்தில் மூழ்கடித்தது. (வ-5-21)



மட்டக்களப்பில் தமிழ் அரசுக் கட்சி. பணியகத்தில் நடந்த நிகழ்வில், மாவீரர்கள் நினைவாக சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யோகேஸ்வரன், சிறிநேசன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

## சரியாக 6.03 மணிக்கு ஒலித்தது மணியோசை

விடுதலைப் புலிகள் அமைப்பின் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் உரை நடைபெறும். தொடர்ந்து மாலை 6.03 மணிக்கு தாயக தேசம் எங்கும் மணி ஓசை ஒலிக்கும். அகவணக்கம் செலுத்தப்படும். 6.05 மணிக்கு ஈகச்சுடரேற்றல் நடைபெறும்.

2008ஆம் ஆண்டுக்குப் பின்னர், தாயக தேசத்தில் இவ்வாறான பகிரங்க மாவீரர் தின நினைவு கூரல் இடம்பெறவில்லை. 7 ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்றைய தினம் இதேபோன்றதொரு ஒழுங்கில் நினைவு நாள் நடைபெற்றது.

மாலை 6.03 மணிக்கு, தாயக தேசத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஆலயங்கள், தேவாலயங்களின் மணிகள் ஒன்று சேர ஒலித்தன. அதே நேரத்தில் மாவீரர் துயிலும் இல்லங்களிலும் மணி ஓசை ஒலிக்க விடப்பட்டது. 6.05 மணி வரை மணி ஓசை தொடர்ந்து ஒலிக்க விடப்பட்டது. (வ-5)

## சங்கரின் நினைவிடத்திலும் மாவீரர்களுக்கு சுடரேற்றல்

மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் 6.05 மணிக்கு ஏற்றி வைத்தார். தொடர்ந்து பொது மக்கள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். (வ-108-26)

## போக்குவரத்தை ஒழுங்குபடுத்தினர் பொலிஸார்

கிளிநொச்சி முழங்காவில் மற்றும் கனகபுரம் துயிலும் இல்லங்களில் அதிகளவான மக்கள் திரண்டிருந்தனர். மாவீரர் தின நிகழ்வுகள், அஞ்சலிகள் முடிந்ததும் மக்கள் வெளியேறினர். இதன் போது வீதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

அதனைச் சீர்செய்வதில் போக்குவரத்துப் பொலிஸார் ஈடுபட்டனர். (வ-5)

## நீரில் மூழ்கி மாணவன் பரிதாபச் சாவு

(வயது 20) என்ற மாணவனே உயிரிழந்தான். உயிரிழந்த மாணவனின் சடலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-8-9)

## இலங்கை விடயத்தில் ஐ.நாவின் நிலைப்பாடு ஒருபோதும் மாறாதாம்

அண்மையில் கூறியிருந்தது. இந்த ஆண்டு இறுதியுடன் ஐ.நா. பொதுச்செயலர் பதவியில் இருந்து பான் கீ மூன் விலகிச் சென்ற பின்னர், இலங்கை தொடர்பான கொள்கையில் மாற்றம் ஏற்படலாம் என்ற கருத்தும் நிலவுகிறது. இது குறித்து கொழும்பு ஆங்கில ஊடகத்துக்குக் கருத்து வெளியிட்டுள்ள ஐ.நா. பொதுச் செயலரின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக், 'புதியவர் அதனைச் செய்வாரா இல்லையா என்று என்னால் கூற முடியாது. ஆனால் இலங்கை தொடர்பான எமது முன்னுரிமைகளில் மாற்றம் இருக்காது. பொறுப்புக் கூறல் விசாரணைகள் தேவை என்பதே, ஐ.நா.வின் தெளிவான நிலைப்பாடு.' என்று தெரிவித்தார். (வ-5)

## துயிலுமில்ல பாடல் ஒலிக்க சுடரேற்றல்

கனகபுரம் மற்றும் முழங்காவில், முல்லைத் தீவு வன்னிவிளாங் குளம் ஆகிய நான்கு மாவீரர் துயிலும் இல்லங்களிலுமே நேற்று முதன்மை மாவீரர் தின நிகழ்வுகள் இடம் பெற்றன.

இதன் போது, தமிழீழ விடுதலைப் புலிகளால் நினைவு கூரப்பட்ட மாவீரர் தினங்களின் போது சுடரேற்றலில் ஒலிக்க விடப்படும் பாடல் ஒலிக்க விடப்பட்டது. பாடல் ஒலிக்கும்போது, அங்கு கூடியிருந்தோர் கண்களில் கண்ணீர் கசிந்தது.

இதேவேளை, துயிலும் இல்லங்களில் நேற்றைய தினம் மாலை முழுவதும், தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் பாடல்கள் ஒலிக்கவிடப்பட்டிருந்தன. (வ-

## கண்காணிப்பும் தீவிரம்

சேர்ந்தவர்கள் சிவில் உடை[illegible] கண்காணிப்பில் ஈடுபட்டனர். து[illegible] அலைபேசிகளில் நிகழ்வுகளை[illegible] பதிவு செய்தனர்.

இராணுவத்தினர், பொலிஸ[illegible] சிறப்பு அதிரடிப் படையினர் நே[illegible] முகாம்களுக்குள் முடக்கப்[illegible]டிருந்தாலும், அவர்கள் விழி[illegible] நிலையிலேயே இருந்த[illegible] காணக் கூடியதாக இருந்தது[illegible] புலனாய்வாளர்களின் நடமா[illegible] அதிகரிக்கப்பட்டு, நிகழ்வுக[illegible] அவர்கள் பதிவு செய்து கொ[illegible]ருந்தாலும் மக்கள் அதனை [illegible] பொருட்டாகவே மதிக்கவில்[illegible] அவர்கள் தமது உறவுகளுக்[illegible] திரண்டு வந்து உணர்வுபூர்வ[illegible] அஞ்சலி செலுத்தினர். (வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டம் ஆஸ்திரேலியாவுக்கு தொடர் தென்னாபிரிக்காவுக்கு



தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட்டில் 7 இலக்குகளால் வெற்றிபெற்றது ஆஸ்திரேலியா. இருப்பினும் முதல் இரு ஆட்டங்களையும் கைப்பற்றிய தென்னாபிரிக்கா கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவதும் இறுதியுமான ஆட்டம் அடிலெய்டில் பகலிரவு டெஸ்ட் ஆட்டமாக நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 259-9 என்ற நிலையில் இருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிக பட்சமாக பிளாசிஸ் 118 ஓட்டங்களையும், ஸ்ரீபன் குக் 40 ஓட்டங்களையும், குயின்டன் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கசில்வூட் 4 இலக்குகளையும், ஸ்ராக், பேட் இருவரும் தலா 2 இலக்குகளையும், லையன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா 383 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பந்துவீச்சில் அப்பொட், ரபாடா இருவரும் தலா மூன்று இலக்குகளையும், பிளன்டர் 2 இலக்குகளையும், சம்சி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ்தோல்வியைத் தவிக்க வேண்டுமாயின் 124 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கிய தென்னாபிரிக்கா ஓர் ஓட்டத்தை எடுத்திருந்த நிலையிலேயே ஆரம்ப வீரரான எல்கரை இழந்தது. தொடர்ந்தும் இலக்குகள் சரிய மூன்றாம் நாள் முடிவில் 194-6 என்றிருந்தது. ஸ்ரீபன் குக் 81 ஓட்டங்களுடனும், குயின்டன் டி ஹொக் ஓட்டமெதனையம் பெறாத நிலையிலும் நேற்றுக் களமிறங்கினர்.

சதம் கடந்தார் ஸ்ரீபன் குக். 104 ஓட்டங்களுடன் அவர் ஆட்டமிழக்க 250 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது தென்னாபிரிக்கா.

ஆஸிக்கு இலக்காக 127 ஓட்டங்கள். மூன்று இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது ஆஸ்திரேலியா. கவாயா ஆட்டநாயகனானார். பிளன்டர் தொடராட்ட நாயகனானார். (ம)

## ஸ்ரோக்ஸுக்கு கண்டனம்



இந்திய வீரர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட குற்றத்துக்காக இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் பென் ஸ்ரோக்ஸுக்கு கண்டனம் விடுத்தது பன்னாட்டு கிரிக்கெட் சபை.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து ஆரம்பத்தில் இலக்குகளை இழந்து தடுமாறியது. இதனால் அணியைமீட்கும்முயற்சியில் ஸ்ரோக்ஸ் ஈடுபட்டிருந்தார். ஆனால், 29 ஓட்டங்களில் ஜடேயா பந்தில் ஆட்டமிழந்தார். இந்தியவீரர்கள்துள்ளிக்குதித்தனர். இதனால் கோபம் அடைந்த ஸ்ரோக்ஸ், தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி இந்திய வீரர்களைத் திட்டிக் கொண்டே சென்றார். மைதான நடுவர்களால் இந்த விவகாரம் பன்னாட்டு கிரிக்கெட் சபைக்குக்கொண்டு செல்லப்பட்டது. ஸ்ரோக்ஸ் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டதால் கண்டனத்துடன் அபராதங்கள் ஏதுமின்றித் தப்பித்தார். (ம)

# சிம்பாப்வேயை வீழ்த்தியது இலங்கை



முத்தரப்புத் தொடரின் இறுதியாட்டத்தில் சிம்பாப்வேயை 6 இலக்குகளால் வீழ்த்தி சம்பியனானது இலங்கை அணி.

தீவுகள், சிம்பாப்வே, இலங்கை அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடரின் இறுதியாட்டம் நேற்று நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்கள் தடுமாற்றம் காட்டினர். எவரும் அரைச்சதம் கூடப் பதிவுசெய்ய முடியாது போக 160 ஓட்டங்களில் சுருண்டது சிம்பாப்வே. அதிகபட்சமாக முசகண்டா 36 ஓட்டங்களையும், வில்லியம்ஸ் 35 ஓட்டங்களையும், எர்வின் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வண்டர்சே, குணரத்ன இருவரும் தலா 3 இலக்குகளையும் பதிரண 2 இலக்குகளையும், குலசேகர, லக்மல் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை 6 இலக்குகளும் 75 பந்துகளும் மீதமிருக்க இலக்கை அடைந்து அபார வெற்றிபெற்றது. தரங்க ஆட்டமிழக்காது 57 ஓட்டங்களையும், குசல் மெண்டிஸ் 57 ஓட்டங்களையும் பெற்றனர். (ம)

# நியூசிலாந்து முன்னிலை



பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் மூன்றாம் நாளான நேற்றைய நிலவரத்தின் படி நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் அசார் அலி, முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார். 271 ஓட்டங்களுடன் நியூசிலாந்தின் முதல் இன்னிங்ஸ் முடிவு கண்டது. 49 ஓட்டங்களுடன் வற்லிங் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார். பந்துவீச்சில் சொகைல் கான் 4 இலக்குகளையும், இம்ரான் கான் 3 இலக்குகளையும், ஆமிர் 2 இலக்குகளையும், ரியாஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்குக் கமிறங்கிய பாகிஸ்தானுக்கு முன்வரிசை முழுவதுமாக ஏமாற்றியது.

அஸ்லாம், அசார் அலி இருவரும் முறையே 5, 01 ஓட்டங்களுடன் சவுத்தியிடம் ஆட்டமிழந்தனர். யுனிஸ் கானும் 2 ஓட்டங்களுடன் ஏமாற்றினார். அசாம் ஒரு முனையில் நிலைத்துநின்று ஓர் சில பவுண்டரிகளைப் பதிவுசெய்தார். சபிக் 23 ஓட்டங்களுடனும், ரிஸ்வான் ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும் வாக்நெரிடம் ஆட்டமிழந்தனர். இரண்டாம் நாள் முடிவில் பாகிஸ்தான் 76-5 என்றிருந்தது.

அசாம் 34 ஓட்டங்களுடனும், அகமட் 9 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காகக் களமிறங்கினர். 41 ஓட்டங்களுடன் அகமட்டை வீழ்த்தினார் வாக்நெர். ஒரு முனையில் நிலைத்து நின்று அற்புத போராட்டத்தை வெளிப்படுத்தினார் அசாம். சவுத்தியின் பந்துவீச்சு எழுச்சி கண்டது. சொகைல் கான், ஆமிர், இம்ரான் கான் மூவரும் சவுத்தியால் வெளியேற்றப்பட்டனர். 216 ஓட்டங்களுடன் பாகிஸ்தானின் இன்னிங்ஸ் முடிவு கண்டது.

பந்துவீச்சில்சவுத்தி 6 இலக்குகளையும், வான்நெர் 3 இலக்குகளையும், கிரான்ட்ஹோம் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூலாந்து 0-0 என்றுள்ளது. இதுவரையிலுமான நிலவரத்தின் படி நியூசிலாந்து அணி 55 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது. (ம)

# கலப்பு வலைப் பந்தாட்டத் தொடரில் கல்வித் திணைக்களம் சம்பியனானது



யாழ்ப்பாணம், நவ. 28

இலங்கை அரச சேவைகள் சங்கம் தேசியமட்டத்தில் நடத்திய அரச உத்தியோகத்தர்களுக்கு இடையிலான வலைப் பந்தாட்டத்தில் கலப்புப் பிரிவில் வடக்கு கல்வித் திணைக்களம் கிண்ணம் வென்றது.

கொழும்பு டொறின்ரன் விளையாட்டு கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. வடமாகாண கல்வித்திணைக்கள அணியை எதிர்த்து யாழ். மாவட்ட செயலக அணி மோதியது. முதற் பாதியின் முடிவில் இரு அணிகளும் 6:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இருந்தன. இரண்டாம் பாதியில் சிறிது ஆதிக்கம் செலுத்திய வடமாகாண கல்வித்திணைக்கள அணி முடிவில் 13:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

கரணவாய், நவ. 28

**குறிஞ்சிக்குமரனின் தொடர்**

குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்திவரும் கால் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து மன்னார் விடத்தல்தீவு ஐக்கிய அணியும் இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் ஜோசவ் வாஸ் நகர் ஐக்கிய அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் மோத வுள்ளன.

**எவ்.ஏ. கிண்ணத் தொடர்**

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால் பந்தாட்டத் தெடரில் பருத்தித்துறை கால்பந்தாட்டச் சங்கத்திற்குட்பட்ட அணிகளுக்கான ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் அல் வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக் கழகமும் அல் வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட் டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)



## வடக்கு கல்வித் திணைக்களம் தேசிய ரீதியில் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், நவ. 28

இலங்கை அரச சேவைகள் சங்கம் நடத் தும் அரச உத்தியோகத்தர்களுக்கு இடை யிலான தேசிய மட்ட வலைப்பந்தாட் டத்தில் பெண்கள் பிரிவில் வடமாகாண கல்வி திணைக்கள அணி சம்பியனா னாது.

கொழும்பு டொறின்ரன் விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. வடமாகாண கல்வி திணைக்கள அணியை எதிர்த்து அநுராதபுரம் தாதியர் அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் வடமாகாண கல் வித் திணைக்கள அணி 11:7 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதியில் தொடர்ச்சியான ஆதிக்கம் செலுத்திய வடமாகாண கல்வி திணைக்கள அணி, முடிவில் 30:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீ கரித்தது. (ம-422)

## ஊக்கமருந்துப் பாவனையால் பதக்கத்தை இழக்கும் ஏழ்வர்

ஊக்கமருந்துப் பாவனை அம் பலமானதை அடுத்து பீஜிங், லண்டன் ஒலிம்பிக்கில் பதக்கங் கள் வென்ற ஏழு வீரர், வீராங்கனை கள் தமது பதக்கங்களை திரும்ப ஒப்படைக்கும் நிலை ஏற்பட்டது.

ரஷ்ய வீரர்கள் ஏராளமானோரின் ஊடக்கமருந்து பாவனை அம்பல மானதை அடுத்து அண்மையில் நடைபெற்று முடிவடைந்த ரியோ ஒலிம்பிக் தொடரில் அந்த நாட் டையே தகுதி நீக்கம் செய்தது பன் னாட்டு ஒலிம்பிக் சம்மேளனம். இதைவிட 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற பீஜிங், 2012 ஆம் ஆண்ட நடைபெற்ற லண்டன் ஆகிய ஒலிம்பிக் தொடர்களில் ஊக்கமருந்து பாவனை அதி கமிருக்கலாம் என்று சந்ஹிதுகம் வெளியிடப்பட்டு குறித்த தொடர்களில் களமிறங்கிய வீரர், வீராங்கனைகளின் மாதிரிகளை மீண்டும் சோதித்து வருகிறது. அவ் வாறு சோதிக்கப்பட்டதில் ஐந்து வீரர்களும் இரு வீராங்கனை களும் ஊக்கமருந்து பயன்படுத்தி யது கண்டறியப்பட்டது. இதனால் இவர்கள் தமது பதக்கங்களை திரும்ப ஒப்படைக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

குறித்த இரு ஒலிம்பிக் தொடர் களிலும் தங்கப்பதக்கம் வென்ற கஜகஸ்தான் நாட்டைச் சேர்ந்த பளுதூக்கல் வீரர் இல்யா இல் யின் ரஷ்யப் பளுதூக்கல் வீரர்கள் அலேக்சாண்டர் இவானோவ், மார் டோவா கிரிகு, பீஜிங் ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்ற பெலாரஸ் வீராங்கனை அக்சனா மியான் கோவா, அதேபோல் பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த குண்டு எறிதல் வீராங்கனை மேலும் இரண்டு பெலாரஸ் வீரர்கள் ஆகியோரே அவ்வாறு தகுதி நீக்கம் செய்யப் பட்டவர்கள் ஆவார்கள். (ம)



## அஸ்வின், ஜடேயா சிறப்பான ஆட்டம்

இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் முன்னிலை பெறக்கூடிய வாய்ப்புக்களை உருவாக்கியது இந்திய அணி.

மொகாலியில் ஆட்டம் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து முதல் நாள் முடிவில் இங்கிலாந்து 268-8 என்றிருந்தது.

ரசிட் 4 ஓட்டங்களுடனும் பெற்றி ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும் இரண்டாவது நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். மேலதிகமாக ஓர் ஓட்டத்தையேனும் ரசிட்டால் பெறமுடியவில்லை. அண்டர்சன் அதிரடி காட்ட எத்தனித்தாலும் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார் பெற்றி. 283 ஓட்டங்களுடன் இங்கிலாந்தின் இன்னிங்ஸ் முடிந்தது.

பந்துவீச்சில் சமி 3 இலக்குகளையும், உமேஷ் யாதவ், ஜெயந் யாதவ், ஜடேயா மூவரும் தலா 2 இலக்குகளையும், அஸ்வின் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி, முன்வரிசை வீரர்களின் சுமாரான பங்களிப்புடன் ஆரம்பத்திலேயே சில ஓட்டங்களைக் குவித்தது. குறிப்பாக கோக்லி, புஜாரா இருவரும் அரைச்சதம் கடந்தனர். 62 ஓட்டங்களுடன் கோக்லியை ஸ்ரோக்ஸும், 51 ஓட்டங்களுடன் புஜாராவை ரசிட்டும் வீழ்த்தினர். சில இலக்குகள் சரிய இந்தியா ஒரு கட்டத்தில் 204-6 என்றிருந்தது. அஸ்வின், ஜடேயா கூட்டணி சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த அந்த அணி நாள் முடிவில் 271-6 என்றுள்ளது. அஸ்வின் 57 ஓட்டங்களுடனும், ஜடேயா 31 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)





## சிந்து இறுதியில் தோல்வி

ஹொங்கொங் பூப்பந்தாட்டத் தொட ரில் இறுதியாட்டத்தில் தோல்விய டைந்து கிண்ணத்தைத் தவறவிட் டார் சிந்து. நேற்று நடைபெற்ற இறுதி யாட்டத்தில் சிந்துவை எதிர்த்து சீன வீராங்கனை தை ஸு மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 15:21 என்ற புள்ளிகளின் அடிப் படையில் இழந்தார் சிந்து. அவர் இரண்டாவது செற்றையும் 17:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பறிகொடுத்து முடிவில் நேற் செற் கணக்கில் தோல்வியடைந்து வெளி யேறினார். இந்த ஆட்டம் வெறும் 41 நிமிடங்களே நீடித்தது. (ம)

## தெல்லிப்பழை யூனியன் கிண்ணம் வென்றது



கரணவாய், நவ. 28

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழ கத்தின் வலைப்பந் தாட்டக் கிண்ணத்தை கைப்பற்றியது தெல் லிப்பழை யூனியன்ஸ் ஏ விளையாட்டுக் கழ கம்.

வடமாகாண ரீதியாக நடத்தப்பட்ட குறித்த தொடரின் இறுதியாட் டம் நேற்றுமுன்தினம் கழுகுகளின் மைதா னத்தில் மின்னொளி யில் இடம்பெற்றது. தெல்லிப்பழை யூனி யன்ஸ் விளையாட்டுக் கழகஏ மற்றும் பி அணி கள் பலப்பரீட்சை நடத்தின. இடை வேளையின்போது 13:9 என்று முன்னிலை பெற்றது யூனியன்ஸ் ஏ. இரண்டாவது பாதியிலும் விறு விறுப்புக்குப் பஞ்சம் இருக்கவில்லை. முடிவில் 28:26 என்ற புள்ளிகள் அடிப்படையில் யுனியன்ஸ் ஏ அணி வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

வெற்றிக்கிண்ணங்களை வட மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் கே.தர்மலிங்கம் ஆகியோர் வழங் கிக் கௌரவித்தனர். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஸ்போர்டிங்கை தோற்கடித்தது மட்ரிட் றொனால்டோவின் அபார ஆட்டத்தால்

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட் அணி அபார வெற்றி பெற்றது.

ஆட்டத்தின் 5 ஆவது நிமிடத்திலேயே முதல் கோலைப் பதிவுசெய்து ரியல் மட்ரிட்டின் ஆதிக்கத்தை நிலைநாட்டி வைத்தார் கிறிஸ்ரியானோ றொனால்டோ. அடுத்த சில நிமிடங்களிலேயே மட்ரிட்டின் இரண்டாவது கோலையும் பதிவுசெய்தார் றொனால்டோ. 2:0 என்று முன்னிலை பெற்றது ரியல் மட்ரிட். 35 ஆவது நிமிடத்தில் ஸ்போர் டிங்கின் முதல்கோல் பதிவானது. 2:1 என்று ரியல் மட்ரிட்டின் ஆதிக்கத்துடன் முடிவடைந்தது முதல் பாதி. மாற்றங்கள் ஏதும் நிகழவில்லை. முடிவில் ஸ்போர் டிங்கை வீழ்த்தியது மட்ரிட்.

# கொண்டாட்டத்துக்கு அனுமதிக்கவேண்டும்

## அக்தர் வலியுறுத்து

வேகப்பந்து வீச்சாளர்கள் இலக்குகளைச் சரித்த பின்னர் அவர்களை சுதந்திரமாக கொண்டாட அனுமதிக்க வேண்டும் என்று பன்னாட்டு கிரிக்கெட் சபையை வலியுறுத்தினார் அக்தர்.

தற்போது வேகப்பந்து வீச்சாளர்கள் தங்களது மகிழ்ச்சி மற்றும் உணர்ச்சியை வெளிப்படையாக திறந்த மனதோடு வெளிப்படுத்த முடிவதில்லை. அவர்களின் உற்சாகத்தின் வெளிப்பாடு அளவு கடந்து போவதாக ஐ.சி.சி. சில விதிமுறைகளை விதித்துள்ளது. இதனையடுத்தே அக்தரிடமிருந்து இவ்வாறான ஒரு கோரிக்கை வந்துள்ளது.

வேகப்பந்து வீச்சாளர்களை வஞ்சிக்க முயற்சி செய்யக்கூடாது. அப்படி வஞ்சித்தால் கிரிக்கெட் ஆட்டம் அதன் அழகை இழக்க நேரிடும். ஒரு வேகப்பந்து வீச்சாளர் அந்த அணிக்கு சிறந்த பந்து வீச்சை வெளிப்படுத்த முயற்சி செய்யும் போது வேகமாக ஓடி வந்து உரத்த குரலில் தனது மகிழ்ச்சியை வெளிப் படுத்துவார். இதைவிட ஒரு வேகப் பந்து வீச்சாளரிடம் இருந்து வேறு என்ன எதிர்பார்க்க முடியும்? இதனால் வேகப்பந்து வீச்சாளர்க ளுக்கு கட்டுப்பாடு விதிக்க முயற்சிக்கக் கூடாது என அக்தர் மேலும் தெரிவித்தார். (ம)






பவுன்சர் பந்தால் தாக்கப்பட்டு சாவடைந்த ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வீரரான பிலிப் கியூக்ஸின் நினைவுநாளான நேற்று ஆஸ்திரேலிய வீரர்கள் தமது ஜெர்சிகளில் கறுப்புப் பட்டிகளை அணிந்து களமிறங்கினர். (ம)

## இளைஞர் சம்பியன்

கரணவாய், நவ. 28

நெற்கொழு கழுகுகள் வி.கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் கொம்மாந்தறை இளைஞர் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான இந்தத் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. வல்வை விளையாட்டுக் கழகமும் கொம்மாந்தறை இளைஞர் விளையாட்டுக் கழகமும்மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய வல்வை அணி 9 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்த 61 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிரகலாதன் 21 ஓட்டங்களையும் பிரணவன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜொனி மற்றும் ரஜீபன் ஆகியோர் தலா 4 இலக்குகளைக் கைப்பற்றினர்.

62 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய கொம்மாந்தறை அணி 6.4 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக ஜொனி 24 ஓட்டங்களையும் நிதர்சன் 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ரஞ்சித் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்ட நாயகனாகவும் தொடராட்ட நாயகனாகவும் கொம்மாந்தறை இளைஞர் அணியின் ஜொனி தெரிவானார். (ம-108)

# இந்திய டெஸ்ட் அணியில் முத்திரை பதிப்பார் ஜெயந்

## கும்ளே நம்பிக்கை



இந்திய டெஸ்ட் அணியில் முக்கிய வீரராக உருவெடுப்பார் ஜெயந் யாதவ். இவ்வாறு தெரிவித்தார் அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர் அனில் கும்ளே.

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்தில் இந்தியாவின் சார்பாக தனது அறிமுகத்தை மேற்கொண்ட ஜெயந் யாதவ், சகல துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்டு அணியின் வெற்றிக்கு காத்திரமான பங்களிப்பை வழங்கினார். இதனால் நடைபெற்றுவரும் மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்திலும் அவர் அணியில் தொடர்கிறார். இதையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே கும்ளே இவ்வாறு தெரிவித்தார்.

ஜெயந் யாதவின் ஆட்டம் அவர் ஓர் அறிமுக வீரர் என்பதைக் குறிப்பதாக இல்லை. அவரது ஆட்டத்தில் அனுபவம் பேசுகிறது. இன்னும் சில ஆட்டங்கள் களமிறங்கிய பிற்பாடு அவர் அணிக்கு இன்றியமையாத வீரராக மாறிவிடுவார் என்பதில் சந்தேகம் இல்லை. அவருக்கு போதிய வாய்ப்புக்களை வழங்க வேண்டும் என்பதில் அக்கறையுடன் உள்ளோம் என கும்ளே மேலும் தெரிவித்தார்.

இரண்டாவது ஆட்டம் முடிவடைந்த பிற்பாடு நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கோக்லியும் இவ்வாறான ஒரு கருத்தை வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கில்லறி சம்பியன்

யாழ்ப்பாணம், நவ. 28

மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்த கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் கில்லறி அணி சம்பியன்.

மன்னார் இராயப்பு ஜோசப் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் பனங்கட்டுக்கொட்டு சென். ஜோசப் அணியை எதிர்த்து சாவற்கட்டு கில்லறி அணி மோதியது. இதில் சாவற்கட்டு கில்லறி அணி 1:0 என்ற கோல் கணக்கில் சம்பியனானது. (ம-23)

fzpdp Gjpa gphpTfs; Muk;gk;
* Diploma in Ms Office
* Diploma in DTP
* Diploma in Web Design
* Diploma in Hardware
* Kids Programme
* Spoken Sinhala
* Spoken English
O/L & A/L
WORKERS
89, Kandy, Road, Jaffna
TP. NO :- 021-222-1417
Sky Computers (Pvt) Ltd.
Today You Learn Tomorrow You Lead.

மூன்று மாதத்தில் ஆங்கிலம் கதைக்க ஓர் அரிய சந்தர்ப்பம்!
அவுஸ்ரேலியா அன்ரனி பீற்றர்
வகுப்புக்கள் ஆரம்பம்
03.12.2016
மேலதிக விபரங்களுக்கு
Sky Computers (Pvt)
TP:021-222-141

புதிய வகுப்புகள்
அமைதியான சூழலில் அனுபவமிக்க ஆசிரியர் குழுவினால்
தரம் 01 முதல் O\L வரை
டிசம்பர் 05 இல் ஆரம்பம்
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
The Express Institute

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் ப... லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற...